www.Padasalai.Net www.Trbtnpsc.Com

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# UG TRB
# தமிழ்
# 2022-2023



## UNIT-1

பேச்சு மொழியின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் எழுத்து வடிவ மாற்றங்கள் & வட்டார மாவட்ட மொழித்தன்மைகள்.

*Your Success is Our Goal....*

Website: www.tcaexamguide.com Mobile App : tcaexamguide
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

# அலகு - 1



| வ.எ. | பொருளடக்கம் | ப.எ. |
|---|---|---|
| 1.1. | பேச்சுமொழியின் தோற்றமும் வளர்ச்சியும் | 1 |
| 1.2. | எழுத்துக்களின் தோற்றம் | 12 |
| 1.3. | திராவிட மொழி குடும்பங்களின் தனித்தன்மைகள் | 33 |
| 1.4. | பிராமி | 60 |
| | 1.4.1. பிராகிருதம் | 74 |
| | 1.4.2. வட்டெழுத்து | 76 |
| 1.5. | பேச்சு மொழியும் எழுத்து மொழியும் | 81 |
| 1.6. | வட்டாரமொழி | 103 |
| 1.7. | ஒலியனியல் & உருபனியல் | 110 |
| | 1.7.1. ஒலியனியல் | 110 |
| | 1.7.2. உருபனியல் | 134 |
| 1.8. | தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழிகள் | 155 |
| 1.9. | முக்கிய வினாக்கள் | 159 |



www.Padasalai.Net

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3:266-C, Advaitha Ashram Road,(Opp to New Bus Stand),Salem-636 004.
Trichy: 76399 67359 Salem: 93602 68118

# UG TRB – TAMIL – 2023-24

## அலகு - 1

## பேச்சு மொழியும் எழுத்து மொழியும்

### 1.1. பேச்சுமொழியின் தோற்றமும் வளர்ச்சியும்

**மொழியின் தோற்றம்:**

- உலகை அறிவால் அறிதலே மனிதனின் தொல்லையான முயற்சியாக இருந்தது.
- மனிதன் தன்னை மேம்படுத்திக்கொள்ள இயற்கையுலகத்திலிருந்து மன உலகத்திற்குக் மாற முயற்சித்தான்.
- மன உலகத்தை விரிவடையச் செய்யவும் மனிதன் முயன்றான்.
- அது ஒரு புதிய உலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ஆயிற்று.
- இத்தோற்றம் காலத்தினை ஒட்டியே இயைந்ததாக அமைந்தது.
- காலத்தை உணர்த்தும் கருவியாக ஒலி துணை நின்றது.
- இயற்கைக் கருவியாக ஒலி உதவ, இந்தப் புதிய உலகம் தோற்றம் கொண்டது.
- தன் கருத்தைப் பரிமாறிக் கொள்ள இயற்கைக் கருவியாக ஒலி அமைந்தது.
- ஒலிக்கும் முயற்சியாலும் மரபுகளாலும் தன்னைச் சுற்றியுள்ள நிகழ்பொருள்கள் காலத்து நிகழ்முறைகள் இரண்டையும் ஒலியால் புலப்படுத்த முயன்ற மனித முயற்சி வெற்றி பெற்றது.
- இவ்வாறு, இடமாகவும் காலமாகவும் உள்ள உலகத்தை உணர்த்தத் தக்க தனிக் கருவியாக மனிதன் ஒலியை அமைத்துக்கொள்ளலானான்.

**பண்பட்ட நிலை:**

- மொழி என்பது மக்களின் மனத்தைக் காட்டும் கண்ணாடி என்பர்.
- எழுதப்படும் மொழியோ, ஓடும் காலத்தை வடித்துக் காட்டும் முயற்சியாகும்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- இடத்தைப் பொறுத்த அளவில் இயங்கா நிலை அமைய, அந்நிலையிலும் காலம் மாறி மாறிச் சென்று கொண்டிருக்க, அதை வடித்துகாட்டுவது எழுத்து மொழியாகும்.
- இயக்கம் நிலைபேறு இரண்டையும் ஒன்றாக்கி இரண்டன் தன்மையும் கெடாமல் காக்கும் முறை உரிமையும் உணர்வும் கொண்ட மனத்தின் சிறந்த கருவியாக மொழியை ஆக்கிக் கொண்ட முறை போற்றத்தக்கது.
- உலகத்தின் மற்ற எல்லாத் தத்துவங்களிலிருந்தும் இது வேறுபட்டு நிற்கின்றது.
- இதுவே மொழியின் இணையற்ற சிறப்பியல்பாகும் என்று அறிஞர் வில்ஸன் என்பவர் 'மொழியின் பிறப்பு' என்னும் தம் நூலின் முடிவில் கூறும் கருத்துக்கள் இங்குக் கருதத்தக்கன.
  - ➢ மக்களின் கருத்துக்கள் விரைந்து மாறுகாலத்தில் மொழியும் அதற்கேற்ப மாறுகின்றது.
  - ➢ மக்களின் கருத்துக்கள் மாறாமல் தேங்கிக்கிடக்கும் போது மொழியும் மாறாமல் கிடக்கிறது.
  - ➢ இவ்வாறு மொழியைப்பற்றி அறியும் கருத்துக்கள் எல்லாம் வளர்ந்து பண்பட்ட மொழியைப்பற்றியனவே அல்லாமல் தொடக்கத்தில் இருந்த மொழியைப்பற்றியவை அல்ல.
  - ➢ மொழி எவ்வாறு தொடங்கியது என்பதை அறிய, இந்தக் கருத்துக்களை எல்லாம் விட்டுவிட்டு மனிதன் எப்படி வளர்ந்தான் என்ற முற்கால வரலாற்றை - வரலாற்றிற்கு எட்டாத வரலாற்றை ஆராய்தல் வேண்டும்.

**மொழியின் தொடக்கம் பற்றிய ஆராய்ச்சி:**

- ஆராய்ச்சி என்பது பெரும்பாலும் தெரிந்தவற்றைக்கொண்டு தெரியாதவற்றை அறிய முயல்வதே ஆகும்.
- மொழி எப்படித் தோன்றியது என்பதை அறிவதற்காகப் பல்வேறு காலங்களில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
- அவ்வப்போது எடுத்துரைக்கப்பெற்ற கொள்கைகள் பலவும் வெறுங்கற்பனைகளாக நின்றனவே அன்றி, உண்மையை விளக்குவனவாக இல்லை.
- அதனால் ஆராய்ச்சியாளர்க்கிடையே பகைமையும் பூசலும் தோன்றவே.
- இத்தகைய ஆராய்ச்சிக்கே மதிப்பு இல்லாமற் போயிற்று.
- சென்ற நூற்றாண்டில் பிரெஞ்சு அகடெமி என்னும் ஆராய்ச்சிக் கழகத்தினர் இனி இத்தகைய முயற்சிக்கு இடந்தருவதில்லை என்று துணியவேண்டிய நிலை ஏற்பட்டது.
- பழங்காலத்தில் மொழியின் தோற்றத்தைப் பற்றி ஒருவகையான நம்பிக்கை இருந்து வந்தது.

- வடமொழியைப் பாணினி ஆக்கி வளர்த்தார் என்றும், தென்மொழியாகிய தமிழை அகத்தியர் கொணர்ந்து வளர்த்தார் என்றும் இந்நாட்டில் உள்ளது போலவே, ஐரோப்பாவிலும் நம்பிக்கைகள் இருந்து வந்தன.
- இத்தாலி மொழி தாந்தே என்னும் கவிஞராலும், ஆங்கிலம் சாஸர் என்னும் புலவராலும், ஜெர்மன்மொழி லூதர் என்னும் ஐரோப்பியர்கள் நம்பி வந்தனர்.
- ஆராய்ச்சிமுறை தலையெடுத்தபின்னர். இந்த மொழிகளின் தோற்றத்திற்கு இவர்கள் காரணம் அல்லர் என்றும், மற்றப் புலவர்களுக்கு முன் தோன்றி இம் மொழிகளை வளர்த்த பெருமையே இவர்களுக்கு உரியது என்றும் உண்மை உணர்ந்தனர்.
- மொழித்துறையில் இத்தகைய ஆராய்ச்சி போதிய பயன் தரவில்லை.
- இன்று மொழி பேசுவோர் அறிவு வளர்ச்சி மிக்கவர், தொடக்கத்திலே பேசியவர் அறிவு வளரப் பெறாதவர்.
- மொழியைப் பேசுவதில் இன்றைய மக்களின் அனுபவம், பழங்கால மக்களின் அனுபவத்திற்கு வேறுபட்டதாகும்.
- ஆதலின் அறிவு வளராத பழங்கால மக்கள் மொழியை எவ்வாறு பேசினர் என்பதை இது கொண்டு அறிய முடியவில்லை.
- மொழியின் தோற்றத்தை ஆராய்வதற்கு வேறுவகையான முயற்சிகள் பல செய்யப்பட்டன ஆயினும் வெற்றி கிட்டவில்லை.
- எகிப்து மன்னர் ஒருவர் புதிதாகப் பிறந்த இரண்டு குழந்தைகளை இடையன் ஒருவனிடம் ஒப்படைத்து, அவற்றிற்கு ஆட்டுப்பால் தந்து வளர்க்குமாறும் அவற்றின் எதிரில் ஒரு சொல்லும் பேசாதிருக்குமாறும், அவைகளே எந்தச் சொல்லை முதலில் பேசுகின்றன என்று கவனிக்குமாறும் ஏற்பாடு செய்தார்.
- இத்தகைய முயற்சியே ஸ்காட்லாண்டில் நான்காம் ஜேம்ஸ் என்னும் மன்னனாலும் மொகலாய மன்னன் ஒருவனாலும் இரண்டாம் பிரடெரிசு என்னும் ஐரோப்பிய மன்னனாலும் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.
- மனிதகுல நாகரிகத்தை முன்னெடுத்துச் செல்வதில், மகத்தான பங்களிப்பைச் செய்தவை மொழிகள்தாம்.
  - **நாடோடித் திரிதல்**
  - **வேட்டையாடுதல்**
  - **கால்நடை மேய்த்தல்**
  - **கடல்மேல் சேர்தல்**
  - **உழவு செய்தல்**

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY






இந்த ஐந்து படிநிலைகளில் மனித நாகரிகம் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடையத் தொடங்கியது.

- காட்டுமிராண்டிகளின் கூடாரமாகக் காட்சியளித்த மனித இனம், வேட்டையாடுதலின் மூலம் ஒரு வேட்டைச் சமூகத்தையே தன் இதயத்தில் தாங்கி நகர்ந்தது.
- அதன் முன்னர் நாடோடியாகத் திரிந்து பல்வேறு கால தட்பவெப்ப நிலைகளில் தன் உடல் தாங்க, மனம் ஏங்கப் புதியவற்றை கற்றுக் கொண்டது.
- பின்பு நாகரிகம் வளர்ந்து, ஆடு, மாடுகளை தன்னகத்தே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, மேய்ச்சல் சமூகமாக நாகரிகம் விரவியது.
- பின்னர் விரிந்து பரந்த கடற் பகுதிகளில் மீன் முதலான உயிரினங்களை வேட்டையாடி, அதில் தானும் உண்டு, பிறருக்கும் வழங்கி, அதன் மூலம் ஒரு பண்டமாற்று நாகரிகத்தை நோக்கி நகர்ந்தது.
- அதன் பின்பு விவசாயம் செய்ய விதைத்தல் மூலமாக, விவசாய நாகரிகத்தைக் கற்றுணர்ந்தான்.
- தனக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.

- முதலில் தம் எண்ணங்களை, மெய்ப்பாடுகள், சைகைகள், ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர்.
- இவற்றின் மூலம் பருப்பொருள்களை (கண்ணில் காணக்கூடிய, தொட்டு உணரக்கூடிய பொருள்கள்) மட்டுமே ஓரளவு உணர்த்த முடிந்தது. நுண் பொருள்களை உணர்த்த இயலவில்லை.
- அதனால், ஒலிகளை உண்டாக்கி பயன்படுத்தத் தொடங்கினர்.
- சைகையோடு சேர்ந்து பொருள் உணர்த்திய ஒலி காலப்போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமை பெற்று மொழியாக வளர்ந்தது.
- மனித இனம் வாழ்ந்த இட அமைப்பும், இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின.
- இதனால் பல மொழிகள் உருவாகின.

**சைகை மொழி:**

- சைகைகளிலிருந்தே மொழி தோன்றியதாகச் சிலர் கூறுகின்றனர்.
- சைகைகள் அறிவை அடிப்படையாகக் கொண்டவை.
- சைகைகள் மக்களிடமே காணப்படுகின்றன.
- சுட்டிக்காட்டுதல் போன்ற எளிய சைகையும் எந்த விலங்கினிடமும் காண முடியாது.
- ஆனால் எல்லா இனத்து மக்களும் அந்தச் சைகைகள் செய்ய வல்லவராய் இருக்கின்றனர்.
- ஆகையால், மக்கள் மக்களாய் இருப்பது மொழிக்கு அடிப்படையான சைகைகள் செய்ய வல்லவராய் இருத்தல் பற்றியே என்று கொள்ளலாம்.
- ஓர் இடத்தையோ பொருளையோ காட்டுவதற்குச்
    - சுட்டு விரலை நீட்டிப் பயன்படுத்துதல்,
    - **பசித்தவன் தன் கையால் வயிற்றைத் தொட்டுக் காட்டுதல்,**



    - உண்ணுவதைத் தெரிவிப்பதற்கு வாய்க்கு அருகே கைவிரல்களைக் குவித்து வைத்துக் காட்டுதல்,
    - அடித்தலைப் புலப்படுத்துவதற்குக் கையை நீட்டி ஓங்குதல்,

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- **பேச வேண்டா என்பதற்கு வாயைக் கையினால் மூடிக் காட்டுதல்,**



- **இசைவைத் தெரிவிப்பதற்கு ஒருவகையாகவும் மறுப்பைத் தெரிவிப்பதற்கு மற்றொரு வகையாகவும் தலையை அசைத்தல், வரவழைப்பதற்குக் கைவிரல்களை உயர்த்தி உயர்த்தி மடக்கிக் காட்டுதல்,**



- வேண்டா என்பதற்கு உயர்த்திய கைவிரல்களை ஊசல்போல அசைத்துக் காட்டுதல்,
- போகச் செய்வதற்குக் கைவிரல்களைச் சாய்த்து அசைத்துக் காட்டுதல்,
- விரைந்து போகச்செய்வதற்கு அவற்றை விரைவாக அசைத்துக் காட்டுதல்

போன்றவை முதலாக மனிதன் கற்றுள்ள சைகைகள் எத்தனையோ உள்ளன.

- இவற்றை மனிதன் வேண்டும்போது வேண்டியவாறு பயன்படுத்துகிறான்.
- விரும்பிச் செய்யும் இயல்பின இவை எல்லாம்.
- ஆயின் சினம் வரும்போது படபடப்பான ஒலி எழுப்புதல்,
- வெறுப்பு வரும்போது சகர ஒலி (சீ. சே. உச்) எழுப்புதல்,
- துன்பம் மிகும் போது அழுதல்,
- மகிழ்ச்சிமிக்க போது ஆரவாரம் செய்தல்

முதலானவை இயல்பூக்கத்தால், அமைந்தவை ஆகும்.

- விலங்குகளும் பறவைகளும் அறிந்த மொழிகள் இவ்வகையைச் சார்ந்தன.
- மேலே குறித்த மேலே குறித்த சைகை மொழிகள் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் எட்டாதவை பழங்கால மனிதர் சைகைமொழிகளைத் தக்கவாறு பயன்படுத்தும் ஆற்றல் பெற்றிருந்தமையாலேயே குரலில் எழும் ஒலிகளையும் தக்கவாறு பயன்படுத்திக் கற்றனர்.

TEACHER'S CARE ACADEMY

**உணர்ச்சி மொழி:**

- வெறுப்பு. வெகுளி. மகிழ்ச்சி. அழுகை முதலிய உணர்ச்சி வயமாக இருக்கும் போது பிறக்கும் ஒலிகள் மொழிக்குக் காரணம் என்பர் ஒருசாரார்.
- இதனை உணர்ச்சி மொழி அல்லது குறிப்பு மொழி பற்றிய கொள்கை என்பர்.
- ஆ. ஓ, அன்னோ, அந்தோ, முதலிய சொற்கள் அவ்வாறு பிறந்தன எனலாம்.
- இந்த கொள்கையும் குறைவுடையதே. உணர்ச்சி பற்றிப் பிறக்கும் ஒலிகள் மிகச் சில சொற்களுக்கே காரணமாக இருக்கின்றன தவிர. இச்சொற்கள் உணர்ச்சியை உணர்த்துமே ஒழியக் கருத்தை அறிவிப்பதில்லை.
- சொற்கள் உணர்ச்சிக்குக் கருவியாய் இருக்கும் நிலை குன்றி அறிவுக்குப் பயன்படும் நிலை வந்தால்தான் மொழி வளர்கிறது எனலாம்.
- சுருங்கக் கூறினால், உண்மையான பேச்சு மொழி உணர்ச்சியால் பிறக்கும் ஒலிகளைக் கடந்ததாகவே உள்ளது.

**பேச்சு மொழி:**

- பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி மிகப் பழங்காலத்தில் வாழ்ந்திருந்த சில விலங்குகளின் உடலமைப்பு இன்னதெனக் காட்டும் கல்படிவுகளைப் போன்றவை வழக்கிறந்த மொழிகள்.
- விலங்குகளின் உடல் உறுப்புக்கள் கல்லில் படிந்து விளங்குவது போல், ஒரு காலத்தில் மக்களால் பேசப்பட்டுவந்த ஒரு மொழி இலக்கிய வடிவில் ஓர் அளவிற்கு அழியாமல் நின்று அதன் தன்மையைக் காட்டுகின்றது.
- புலன்களால் உணரப்படும் குறியீடுகள் உடையது மொழி எனலாம்.
- பொருள்களுக்கு உரிய ஒலிவடிவான குறியீடுகள் கொண்டது பேச்சுமொழி ஆகும்.
- கற்றவர்களே மொழியாராய்ச்சி செய்தல் கூடும்.
- அவர்கள் மொழியாராய்ச்சி செய்யத் தலைப்பட்டபோது, பேச்சு மொழியை மதிக்காமல், கற்ற புலவர்கள் எழுதிய இலக்கியங்களையும் எழுத்து வடிவு பெற்ற மற்றவற்றையுமே மொழியாக மதித்து, ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள்.
- அத்தகைய ஆராய்ச்சியால் போதிய பயன் விளைவதில்லை.
- உண்மைகான இயலவில்லை.
- தடுமாற்றமும் தவறுமே கண்ட பயன்கள்.
- மொழி என்பது உண்மையாக நோக்கின், ஒருவர்க்கு ஒருவர் நேரே நின்று கருத்தை உணர்த்தும்போது பயன்படும் கருவியே ஆகும்.
- பேச்சுமொழி ஒருவரின் உடல்போன்றது எனலாம்.

TEACHER'S CARE ACADEMY

- மொழியாராய்ச்சிக்கு எழுத்துமொழி எவ்வளவு பயன்பட்ட போதிலும், பேச்சுமொழி இன்றியமையாததாக உள்ளது.
- இதுபற்றியே மொழியின் உயிர், வாய்க்கும் செவிக்கும் இடையே உள்ளது என்று கூறுவர்.
- மொழியியல் ஆராய்ச்சிக்கு மிகுதியாகப் பயன்படுதல் பேச்சுமொழியே ஆகும்.
- மொழியியல் ஆராய்ச்சியாளர் ஒரு மொழியின் சிறப்பு வேறு என்றும் அதில் அமையும் இலக்கியத்தின் சிறப்பு வேறு என்றும் இரண்டையும் தனித்தனியே பிரிப்பர்.
- படித்த மக்களின் பேச்சில் உள்ள இலக்கணம் படிக்காத மக்களின் பேச்சிலும் உள்ளது.
- படித்தவர்கள் சொற்களைத் திருத்தமாக ஒலிக்கின்றனர்.
- நாகரிகமான சொற்களைத் தெரிந்தெடுத்துப் பேசுகின்றனர்.
- திருத்தமாக ஒலித்தலும் நாகரிகமாகப் பேசுதலும் இலக்கணம் அல்ல. சொற்களைத் தக்க இடங்களில் அமைத்தலும் சொற்களோடு ஏற்ற உருபு முதலியவற்றைச் சேர்த்தலுமே இலக்கணம் எனப்படும்.
- இத்தகைய இலக்கணம், படிக்காத மக்களின் பேச்சிலும் உள்ளது.
- 'பேச்சுமொழி ஓடும் ஆறு போன்றது என்றும், எழுத்து மொழி அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என்றும் வெண்ட்ரியே கருதுகிறார்".
- பேச்சுமொழி உள்ளத்து உணர்ச்சியின் தூண்டுதலால் இயல்பாகத் தானே வரும் மொழி, எழுத்துமொழி அறிவின் முயற்சியால் ஒழுங்கு செய்து அமைக்கப்படும் மொழி பேச்சுமொழியில் அமையும் வாக்கியத்திற்கும் எழுத்து மொழியில் அமையும் வாக்கியத்திற்கும் வேறுபாடு உண்டு.
- பேச்சுமொழியின் வாக்கியம் சுருங்கியது.
- எளியது. நேரானது, இயற்கையானது, தெளிவானது.
- காரணம், பேசுவோர். எண்ணும் எண்ணங்களுக்கு உடனே ஒலிவடிவு கொடுத்து வெளியிடுகின்றனர்.
- ஆகவே சுருங்கிய நேரத்தில் குறைந்த மூளை உழைப்பால் அமைந்தவை அவர்களின் வாக்கியங்கள்.
- ஆகவே பேச்சுமொழி செல்வாக்கு மிகுந்தது என்பதும், அதன் செல்வாக்கு மொழியின் இலக்கணத்திலும் காணப்படும் என்பதும் தெளிவாகிறது.

### எழுத்து மொழி:

- உண்மையான மொழி என்பது பேசப்படுவதும் கேட்கப்படுவதும் என்று பேச்சுமொழியில் கூறப்பட்டன.

- ஆயினும் எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும்.
- இவைகளே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு.
- எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவுகாணப்படுவது ஆகியவைகளும் மொழியே ஆகும்.
- வரிவடிவான குறியீடுகள் கொண்ட எழுத்துமொழி செவிப்புலனும் கட்புலனும் பற்றுக்கோடாகக் கொண்டு வழங்கும் மொழிகள் ஆகும். தொட்டு அறியும் குறியீடுகளால் அமைந்தது - உற்றறியும் மொழியாக உள்ளது - குருடர் கற்கும் எழுத்து மொழி.
- பேச்சுமொழி ஒருவரின் உடல்போன்றது என்றால். எழுத்துமொழி அவருடைய படம் போன்றது எனலாம்.
- ஒருவர்க்கு நேரே நின்று கருத்தை உணர்த்த முடியாதபோது அதற்கு உதவியாக வந்து அமைந்த துணைக்கருவியே இலக்கியம், கல்வெட்டு. கடிதம் முதலிய எழுத்து வடிவங்கள்.
- பொதுவாக மக்களுக்குப் பயன்படும், முறையை நோக்கினால், பேச்சுமொழியைவிட எழுத்துமொழியாகிய இலக்கியமே மிகுதியாகப் பயன்படுவது எனக் கூறலாம்.
- பேச்சுமொழி எழுத்துமொழி என்ற பாகுபாட்டையும் கடந்து ஒரு மொழியில் தொன்றுதொட்டு அடிப்படையாய் இருந்து வருவது இலக்கணமாகும்.
- நம் முன்னோரிடமிருந்து நாம் கற்றபோது, வாக்கியத்தில் முதலில் அமையும் சொல் இது, முடிவில் அமையும் சொல் இது. இடையே அமைபவை இவை, ஒன்றோடொன்று இயைதல் இப்படி என்பவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்காமலே கற்றுக்கொள்கிறோம்.
- அதைச் செய்து விட்டு வா என்று வாக்கியத்தைக் கற்றபோது, அது போன்ற பல வாக்கியங்களின் அடிப்படையைக் கற்றுக் கொண்டோம். பல வாக்கியங்களைக் கேட்டுக் கேட்டு அந்த அடிப்படை நினைவில் ஊறிவிடுகிறது.
- அதனால் தான் நாமாகப் பேசும்போது, படத்தைப் பார்த்துவிட்டுப் போ' என்கிறோம்.
- இதைப் பேசத் தெரிந்து கொண்டோம் என்றால், பெயர்ச்சொல்லோடு இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்க்கும் முறை, வினைச்சொல்லோடு இறந்தகால இடைநிலை சேர்த்து அதை வினையெச்சமாக்கும் முறை, அந்த வினையெச்சத்தோடு இறந்த காலத் துணை வினை சேர்க்கும் முறை, அந்தத் துணைவினையாகிய எச்சத்தை அடுத்து முற்றுவினை சேர்க்கும் முறை முதலிய எவ்வளவோ இலக்கணக் கூறுகளை நம்மை அறியாமல் கற்றுக் கொண்டவர்களாகிறோம்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- நம் முன்னோர்களும் இவ்வாறே அவர்களுடைய முன்னோர்களிடமிருந்து கற்றனர்.
- இப்படியே முன்னோர் முன்னோர் என்று பல தலைமுறைகளாக மொழியின் அடிப்படை மாறாமல் கற்கப்பட்டு வந்திருக்கிறது.
- தாய்மொழியை நினைவு வைத்துக் கொள்வதாகிய அதுவே மொழியின் அடிப்படை என்பர் அறிஞர் பிரீல், இத்தகைய அடிப்படையாக அமையும் இலக்கணத்தை எவரும் புறக்கணிக்க இயலாது.
- 'படத்தைப் பார்த்துவிட்டுப் போ' என்பதை 'விட்டுப் போ ஐ படம்து பார்' என்று மாற்றி இலக்கணத்தைப் புறக்கணித்தால் ஒருவருக்கொருவர் விளங்காத மொழிக் குழப்பம் ஏற்படும். விளங்குவதற்காகவே மொழி ஒருவர் கருத்து மற்றவர்க்கு கையாளப்படுவதலால், இத்தகைய புறக்கணிப்புக்கும் குழப்பத்திற்கும் யாரும் எப்போதும் இடம் தருவதே இல்லை.
- ஆகவே, எல்லோரும் தம்மை அறியாமலே மொழியின் அடிப்படையாகிய இலக்கணத்தைப் போற்றிக் காப்பதில் இருந்துவருகின்றனர் என்பது தெளிவாகிறது.
- கண்ணும் கருத்துமாக மொழியைப்பற்றி உளநூலார் பலவகை ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர்.
- மூளையில் கருத்துக்களைக் கொள்ளும் வகைகளுக்கும் மொழியில் உள்ள இலக்கணக் கூறுகளுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்று ஆராய்ந்துள்ளனர்.
- அத்தகைய தொடர்பு ஒன்றும் இல்லை என்பதே அவர்களின் முடிவு.
- ஒரு மொழியில் வேற்றுமை எட்டு என இலக்கணக்காரர் கூறுகின்றனர்.
- மற்றொரு மொழியில் ஐந்து என்கின்றனர்.
- இன்னொரு மொழியில் பதினாறு என்கின்றனர்.
- மூளையின் கருத்துக் கொள்ளும் வகைகளை ஒட்டி வேற்றுமைப் பாகுபாடுகள் அமைந்திருந்தால், எல்லா மொழியிலும் வேற்றுமைகள் எட்டாகவோ, ஐந்தாகவோ ஒரே எண்ணிக்கையாக அமைந்திருக்க வேண்டும் அன்றோ? அவ்வாறு இல்லை.
- இலக்கணக் கூறுகள் எதிர்பாராமல் ஒரு வகையாய்த் தொடக்கத்தில் அமைய, அவற்றை அவ்வாறே தலைமுறை தலைமுறையாகப் போற்றிப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.
- என்றோ அமைந்த மண்வெட்டியை இன்று வரையில் அவ்வாறே பயன்படுத்திக்கொள்ளவில்லையா? அதுபோன்றதே இதுவும் ஆகும். எண்களைப் பத்துப்பத்தாக எண்ணுவதும் எதிர்பாராமல் அமைந்த அமைப்பே ஆகும்.
- மனிதனுடைய கைவிரல்களுக்கும் பத்துப் பத்தாக எண்ணும் முறைக்கும் தொடர்பு உண்டே தவிர, மூளைக்கும் அதற்கும் தொடர்பு காணோம்.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- மூவிடங்களுக்கும் மூளையில் கருத்துக்கொள்ளும் முறைக்கும் ஒரு வகையில் தொடர்பு இருப்பதாகக் கருதலாம்.
- ஆனால், பகுதி, விகுதி, இடைநிலை முதலியவற்றோடு தொடர்பு காண முடியவில்லை.
- மூளையின் கூறுபாடுகளுக்கும் இலக்கணப் பாகுபாடுகளுக்கும் தொடர்பு கூற முடியாவிடினும், மூளை வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் தொடர்பு உள்ளது எனலாம்.
- அறிவு வளர்ச்சி மிக்க மக்கள் பேசும் மொழி பலவகைச் சொல்வளம் பொருள்வளம் பெற்று விளங்கக் காணலாம்.
- அத்தகைய வளர்ச்சி இல்லாத மக்கள் பேசும் மொழி, சொல்வளம் பொருள்வளம் குறைந்த மொழியாக உள்ளது.
- ஆகவே, ஒரு மொழியின் சொற்பொருள் வளமும் வறுமையும் பேசுவோரின் அமைவதாகக் கூறலாம்.
- மனவளத்தையும் வளமின்மையையும் ஒட்டி அமைவதாகக் கூறலாம்.

**வினாக்கள்:**

1) மொழியின் பிறப்பு என்ற நூலினை இயற்றியவர் யார்?

A) பிரான்ஸ் எல்லிஸ் B) வில்லியம் ஜோன்ஸ்

C) வில்ஸன் D) மாக்ஸ் முல்லர்

2) சைகைகள் எவற்றை அடிப்படையாகக் கொண்டவை?

A) ஒலி B) எண்ணம் C) சைகை D) எழுத்து

3) புலன்களால் உணரப்படும் குறியீடுகள் உடையது எது?

A) ஒலி B) எண்ணம் C) சைகை D) மொழி

4) பேச்சுமொழி ஓடும் ஆறு போன்றது. எழுத்து மொழி அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என்று கூறியவர் யார்?

A) வெண்ட்ரியே B) வில்லியம் ஜோன்ஸ்

C) வில்ஸன் D) மாக்ஸ் முல்லர்

5) பேச்சு மொழி ஒருவரின் உடல்போன்றது என்றால் எழுத்து மொழி அவருடைய -------- போன்றது?

A) உயிர் B) படம்

C) நிழல் D) உடை

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118)
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

## 1.2. எழுத்துக்களின் தோற்றம்

- பேச்சின் மறுவடிவமே எழுத்து.
- பழங்காலத்தில் எழுத்துக்கள் இருந்துள்ளன என்பதற்குத் தமிழ் இலக்கியங்கள் நடுகல் வழக்கத்தைக் குறிப்பிடுகின்றன.
- எழுத்து என்றால் ஓவியம் என்ற பொருளில் "கூருழிக்குயின்ற கோடுமாவெழுத்து" என்ற குறிப்புள்ளது.
- இலக்கியங்களில் நடுகல் பற்றிய குறிப்புக்கள் இடம்பெறுகின்றன.
- பகைவருக்கு அஞ்சாது எதிர்த்து நின்று போரிட்டு வென்று இறந்த வீரர்களுக்கு நடுகல் அமைத்துப் போற்றி வருவது தமிழர் பண்பாடாகும்.
- அவ்விதம் நடுகல் அமைக்கும் பொழுது அதில் அவரது பெயரையும், அவரது பெருமையையும் எழுதுவதாக இலக்கியங்கள் 'மறவர் பெயரும் பீடும் எழுதிய பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' - (அகநானூறு:67) என்று குறிப்பிடுகின்றன.
- தொல்காப்பியமும் இவ்வழக்கை, "காட்சி, கால்கோள், நீர்படை, நடுகல், பெரும்படை வாழ்த்தல்" என்று குறிப்பிடுகின்றது.
- இதிலிருந்தே பின்பு படிப்படியாக எழுத்துக்கள் வளர்ச்சிப் பெற்றுள்ளன.
- கையால் எழுதப்படுவதாலும், வாயால் ஒலி எழுப்படுவதாலும் அவற்றுக்கு எழுத்து என்று பெயர் வந்தது.
- இது வரிவடிவ எழுத்து, ஒலி எழுத்து என இருவகை எழுத்துக்கும் பொருந்தும்.
- ஒலி எழுத்துப் பெரும்பாலும் மாறுதலின்றி ஒரு படித்தாக இருக்கும்.
- ஆனால் வடிவெழுத்து, காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டேயிருக்கும்.
- இன்று எழுதும் வடிவில் முற்கால எழுத்துக்கள் எழுதப்படவில்லை.
- இன்றைய வரிவடிவில் முற்கால எழுத்துக்கள் எழுதப்படவில்லை.
- ஆயினும், இன்றைய வரிவடிவ எழுத்திற்கு முற்கால எழுத்துக்களே அடிப்படையாகும்.
- இத்தகைய எழுத்துகளின் மாற்றங்களை இனிக் காண்போம்.

**தமிழின் சிறப்பு:**

**"தொன்மை இயன்மை தூய்மை தாய்மை**
**முன்மை வியன்மை வளமை மறைமை**
**எண்மை இளமை இனிமை தனிமை**
**ஏண்மை இறைமை அம்மை செம்மை"**

எனவரும் 16 செவ்வியல் தன்மைகளைக் கொண்டது தமிழ்.

- தமிழின் வரிவடிவ வரலாறு போன்ற வரலாறு உலகின் வேறு எம்மொழிக்கும் இல்லை.
- பல நூறு மொழிகளில் தமிழ்ச் சொற்கள் மற்றும் உறவுப் பெயர்கள் அப்படியே வழங்குவதை கள ஆய்வு காட்டியுள்ளது.
- அத்தகைய தமிழ் மொழிக்கு மட்டுமே
  - ➢ பட எழுத்து (சித்திரவெழுத்து)
  - ➢ உருவஎழுத்து,
  - ➢ குறியீட்டெழுத்து,
  - ➢ கருத்துஎழுத்து,
  - ➢ அசை எழுத்து,
  - ➢ எண்ண எழுத்து,
  - ➢ ஒலி எழுத்து,
  - ➢ அகர எழுத்து,
  - ➢ உணர்வெழுத்து,
  - ➢ தன்மையெழுத்து,
  - ➢ வடிவெழுத்து,
  - ➢ முடிவெழுத்து,
  - ➢ ஆய்வெழுத்து,
  - ➢ இராசிஎழுத்து,
  - ➢ வட்டெழுத்து,
  - ➢ கிரந்த எழுத்து,

நூற்றாண்டு தோறும் மாற்றம் பெற்ற

- ➢ சதுரஎழுத்து,
- ➢ **பெரியார்எழுத்து,**




**பெரியார்எழுத்து**

புதிய குறியீடுகள் பற்றிய அறிவியல் பார்வை என ஆய்விலும் கற்களிலும் உள்ள வடிவங்களைக் காணலாம்.

**எழுத்துக்களின் மறைபொருள்:**

- பொறியாளர் பா.வே மாணிக்க நாயகர் அவர்கள் முதன்முதலில் தமிழ் வரி வடிவங்களின் மறைபொருள் பற்றிய நூலினை வரைந்தார்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- அதில் தமிழ் எழுத்துக்களின் வடிவத் தோற்றம் அவற்றின் மறைபொருள் யாவும் நூல் முழுமையும் நிறைந்திருக்க காணலாம்.
- அதனையே ஐந்திறம் ஓம் என்னும் ஒலியே,

**"நிறையொலி, நேரொலி, வெளியொலி, விண்மொழி**

**மறையொலி ஓம் என வகுத்தறப்பாற்றே"**

என்றும்

**"உள்ளுறும் ஒளியே உணர்நிலைத் திறத்தால்**

**"தெள்ளுறும் ஒளியாய் ஓசைத் திறமாய்**

**விள்ளுறும் சொற்பொருள் ஓங்கத் தெரிந்தே**

**தெள்ளுறும் மொழி நிலை கலை நிலையியலே"**

என்றும்

**"கண்ணிமை நொடித் தலைக் கால மாத்திரை**

**நுண்ணிதின் உணர்ந்தோர் நுண்மதியுற்றே**

**கண்ணிமை கூட்டும் காலத்தியலால்**

**எண் தரு கலை பல இயல்விளக்கும்மே"**

- என்றும் கூறும் போது ஓம் என்னும் மூலமொழியின் ஓசையே பல வடிவங்கள் ஆயின என்றும் மந்திரப் பொருளாகிய மறைபொருள் அடிப்படையில் தமிழ் எழுத்துக்களின் தோற்றம் பற்றிக் கூறிடக் காணலாம்.
- மேலும் வடிவம் பற்றி ஐந்திறம் எழுத்தியல் மொழி என்று பகுதியில் கீழ்கண்ட செய்திகளைக் கூறும்.

**"வானியல் ஒலியே ஓசை மொழியாய்த்**

**தானியல் வடிவுறுங்குறியெழுத்தென்ப**

என்னும் பாடலில் வடிவத்தை கூறி அது எப்படி அமையும் என்பதை,

**"கண்ணுங்கருத்தும் ஒன்றுவ போன்றே**

**எண்ணும் எழுத்தும் இயல்பில் திகழும்"**

என்றும் கூறும். மேலும்,

**"கோட்டுரு வாக்கம் குறைவற நோக்கி**

**நீட்டுரு கோட்டுரு நெடிதுரு நினைந்தே"**

என்றும்

**"சித்திரக் குறியே சீர் செய் மாநெறி"**

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# UG TRB
# தமிழ்
## 2022-2023



## UNIT-2

### சங்க இலக்கியங்களில் அகம் & பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகம்.

*Your Success is Our Goal....*



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy : 76399 67359 Salem : 93602 68118

# UG TRB - 2022 - 2023

# தமிழ்

## அலகு - 2

## சங்க இலக்கியத்தில் அகம் + பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகம்


| வ.எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 2.1 | சங்க இலக்கியத்தில் அகம் | 1 |
| | எட்டுத்தொகை (5) | |
| 2.1.1. | நற்றிணை | 14 |
| 2.1.2. | குறுந்தொகை | 34 |
| 2.1.3. | ஐங்குறுநூறு | 54 |
| 2.1.4. | அகநானூறு | 68 |


www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 2.1.5. | கலித்தொகை | 106 |
| | **பயிற்சி வினாக்கள் (50)** | 133 |
| | **பத்துப்பாட்டு (3)** | |
| 2.1.6. | முல்லைப்பாட்டு | 141 |
| 2.1.7. | குறிஞ்சிப்பாட்டு | 152 |
| 2.1.8. | பட்டினப்பாலை | 165 |
| **2.2.** | **கீழ்க்கணக்கு நூல்களில் அகம் (6)** | 176 |
| 2.2.1. | ஐந்திணை ஐம்பது | 177 |
| 2.2.2. | திணைமொழி ஐம்பது | 181 |
| 2.2.3. | ஐந்திணை எழுபது | 185 |
| 2.2.4. | திணைமாலை நூற்றைம்பது | 190 |
| 2.2.5. | கைந்நிலை | 196 |
| 2.2.6. | கார்நாற்பது | 200 |
| | **பயிற்சி வினாக்கள் (150)** | 204 |


TEACHER'S CARE ACADEMY

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy : 76399 67359** **Salem : 93602 68118**


## UG TRB - 2022 - 2023

## அலகு - 2

## சங்க இலக்கியங்களில் அகம் + பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகம்

### 2.1. சங்க இலக்கியத்தில் அகம்:

- மனிதனால் தோற்றுவிக்கப்பெறும் நூல்கள் இருவகைப்படும்.
- ஒன்று, அறிவின் துணை கொண்டு ஆக்கப் பெறும் **அறிவியல்** நூல்கள்.
- மற்றொன்று உணர்வின் துணைகொண்டு செய்யப்பெறும் உணர்வு நூல்கள். இவற்றையே **இலக்கியம்** என்று கூறுகிறோம்.
- உணர்வை வளர்க்கும் **அகத்திற்குத் தமிழன் பெருமதிப்பைக்** கொடுத்தான்; வாழ்விலும் புறத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்று கருதினான்.
- தொல்காப்பியனாரும் புறத்திணை இயல் என்ற **ஒரே இயலால்** புறத்தைப் பற்றிக் கூறினார்.
- அகத்தின் சிறப்பை அறிவிக்க, **அகத்திணையியல், களவியல், கற்பியல் மற்றும் பொருளியலும்** அகச்செய்திகள் இடம்பெற்றுள்ளன.
- இலக்கியம் தன்னிற் பெரும்பகுதியை அகத்திற்கே தந்துவிட்டது.
- தமிழன் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன.
- சங்க இலக்கியங்கள் பாட்டும் தொகையும் சேர்ந்த **18 நூல்களும்** என அறியப்படுகின்றன.
- **பாட்டு** என்பது பத்துப்பாட்டையும், **தொகை** என்பது எட்டுத் தொகையையும் குறிக்கும்.
- இவற்றைப் பதினெண்மேற்க்கணக்கு நூல்கள் என்பர்.

TEACHER'S CARE ACADEMY

- சங்கப் பாடல்களின் எண்ணிக்கை **2381,** அகத்திணைப்பாடல்கள் **1862,** புறத்திணைப்பாடல்கள் 519, சங்கப்புலவர் எண்ணிக்கை 473, பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 49 ஆகும்.

- 235 பாடல்களைப்பாடி முதலிடத்தைப் பெற்றவர் கபிலர்.
- "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பாடல் எழுதி உலகப்புகழ் பெற்ற கணியன் பூங்குன்றனாரும் உண்டு.
- சங்ககாலப் புலவர்களைச் **'சான்றோர்"** எனச் சுட்டுவது தமிழ் மரபு.

**அகத்தின் அடிப்படை**

- ஒருவனும் ஒருத்தியும் பிறர் உதவியின்றித் தாமே எதிர்ப்பட்டு ஒருவர் ஒருவரை **உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் வறுவதோர் பொருள் அகம்** என்று அழைத்தனர்.
- இருவரும் மனத்தால், இவ்வாறு பிறர் அறியாமல் பன்முறை கூடுகின்றனர். இதனைக் **குறிஞ்சித் திணை** என்று இலக்கணம் கூறலாம்.

**'புணர்தல் புணர்தல் நிமித்தமும்"**

- தலைவன், தலைவியின் தொடர்பை தோழி அறிகிறாள். அவள் தலைவனைப் பார்த்து விரைவில் மணஞ்செய்து கொள்ள வேண்டும் என்று கேட்கிறாள். இதுவும் **'குறிஞ்சித் திணை"** என்று அழைக்கப்படும்.
- திருமணம் செய்வது என்றால் தலைவனுக்குக் கையில் பொருள் வேண்டுமே!, எனவே தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் தேடச் செல்கிறான்.
- இவ்வாறு தலைவன் பிரிந்து செல்வதையும் அதற்குரிய ஏற்பாடுகளையும் கூறுவது **பாலைத்திணை** என்று இலக்கணம் கூறலாம்.

**'பிரிதலும் பிரிதல் நிமித்தமும்'**

- திருமணம் முடிந்து இல்லறம் நடத்தும் நாளில் தலைவன் பிரிந்து செல்வதும், உண்டு. அந்நிலையில் தலைவி தன் கடமைகளைச் செய்துகொண்டு வீட்டில் இருப்பாள். இதனை முல்லைத்திணை என்பர்.

**'இருத்தலும் இருத்தல் நிமித்தமும்"**

- பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் மீளாவிடின், தலைவி மிகவும் வருந்துவாள். அவள் வருத்தம் அடக்கும் நிலைநீங்கி **வாய்விட்டு** அரற்றும் அளவிற்குச் செல்லுதலும் உண்டு. இவ்வாறு அரற்றுவதை **நெய்தல் திணை** என்பர்.

**'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்"**

- பொருள் முதலியன தேடி மீண்டும் வந்த தலைவன் வீட்டிலிருந்து இன்பமாகப் பொழுது போக்குகிறான். தலைவன் தவறான வழிகளில் செல்லத் தொடங்குகிறான்.
- பரத்தையர் நட்பைத் தேடிச் செல்லும் அவனுக்கும் தலைவிக்கும் மனவேறுபாடு தோன்றுகிறது. அது காரணமாகப் **பூசலும் புலவியும்** ஏற்படுகின்றன. இது பற்றிக் கூறுவதை, மருதத் திணை என்பர்.
- இவ்வாறு ஐந்து வகையாக நடைபெறும் வீட்டு வாழ்வை - உணர்வு வாழ்வை - **அகம் என்று** கூறினர்.
- இவற்றையல்லாமல், சில புற நடைகளும் (Exceptions) உண்டு. சில சமயங்களில் தலைவன், தலைவி தம்மை விரும்புகிறாளா என்பது பற்றிக் கவலையுறாமல் காதல் புரிய முற்படுவதும் உண்டு. இதனை **'ஒருதலைக் காமமாகிய"** கைக்கிளைத் திணை (Subnormal Love) என்பர்.
- சில சமயத்தில் தம்மைவிட வயதில் மூத்தாரிடம் தலைவர்கள் அன்பு செய்ய முற்படுவதும் உண்டு இதனைப் பெருந்திணை, **பொருந்தாகாமம் (Abnormal Love)** என்பர்.

### அகத்திணையின் மதிப்பு

- எட்டுத்தொகை நூல்களுள் **ஆறு** அகத்திற்குத் தரப்பட்டன ஏன்? புறத்தைவிட அகம் சிறந்தது என்று அவர்கள் கருதியதே காரணமாகும்.
- ஏன் அவ்வாறு கருதினார்கள்? குறுகிய இடத்தில் நடைபெறுவதாயினும், அகம் சிறப்படையாவிடில், புறம் சிறக்க முடியாது.
- பிறர் அறிய முடியாத சூழ்நிலையில் சிறிய வீட்டில் நடைபெறும் அகவாழ்வு செம்மையாக அமைந்தால்தான் புறவாழ்வு செம்மைப்படும்.
- குடும்பம் நன்கு அமைந்தால் தான் சமுதாயம் நன்கு அமையமுடியும்.
- "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே" என்று தொல்காப்பியம் களவியலில் (2) **தலைவனின்** பெருமையே பேசுகிறது.
- தலைவனும் தலைவியும் ஒத்த பெருமையுடையவர்கள் எனக் கூற வந்த தொல்காப்பியர். அடுத்துத் தலைவன் சற்று உயர்ந்தவனாயினுந் தவறு இல்லை எனக் கூறுகிறார்.
- இத்துணைச் சிறந்த தலைவன் தன்பாங்கரும் ஏவலரும் நண்பரும் புடைசூழ வேட்டை மேற் சென்றவன் தலைவியைக் காண்கின்றனர்.
- தலைவன் அறிவும் ஆற்றலும் புகழும், கொடையும் ஆராய்தல் பண்பும், பழிபாவம் அஞ்சுதலும் முதலிய பகுதிகளை உடையவன் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

**"பெருமையும் உரனும் ஆடூஉ மேன - கள - 7"**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- தலைவி தனக்கு இன்றிமையாதவள் என்று தலைவன் கருதும் பொழுது கூடத் தன்னலமே காட்சியளிக்கிறது.
- சில சந்தர்பங்களில் அவனுடைய அன்பின் ஆழத்திற்குச் சோதனை நிகழ்வது உண்டு. தலைவி தனக்குக் கிடைக்க மாட்டாள் என்ற நிலை ஏற்படுமாயின், தலைவன் "மடலூர்தல்" என்பதை மேற்கொண்டான்.
- "மடலூர்தல்" என்பது பண்டைய வழக்கம். பனங்கறுக்கினால் குதிரை ஒன்று செய்து தான் விரும்பும் தலைவியின் உருவத்தை வரைந்து தலைவன் அப்பொம்மைக் குதிரையின் மேல் ஏறிக்கொள்வான்.
- **PG TRB 2022- யில் கேட்கப்பட்ட வினா** - 'மட பேறுதலான் அத்துணை ஆற்றாலகிய பெண் பால் மாட்டு நிகழும் வெறி"யைக் குறிப்பிடும் சொல்: **Ans: காந்தள்.**
- பண்டைத் தமிழ்ச் சான்றோர் ஒழுக்கத்தை அகம், புறம் என இருவகையாகப் பகுத்துக் கொண்டனர்.
- புறவொழுக்கத்தினும் அகஒழுக்கமே ஏற்றமுடையது என்பதை **புறம் அகம்** என்று கூறாமல், **அகம் புறம்** என முதற்கண் வைத்து எண்ணப்பட்டமையே நன்கு விளங்கும் புறங்கையினும் அகங்கையிலே சிறப்புடைத்தாக வழக்கினுள் காணலாம்.
- அவ்வொழுக்கங்களுள் அகம் என்பது இன்பம் என்னும் பொருள். **ஆகுபெயரால்** அகத்தே நிகழும் இன்பத்தை அகம் என்றே ஆன்றோர் வழங்கினர். இன்பம் என்பது பொதுவாயினும் அகவின்பம் என்பது தனிப்பெரும் சிறப்புடையதாம்.
- மாந்தர், அகமனத்தில் துய்க்கின்ற காதல், அன்பு, கருணை, முதலான உணர்வுகளை வெளிப்படுத்துவது அகத்திணை.

**அகத்திணை நுட்பம்**

- அகம் என்பது புறத்தார்க்கு உரைக்கப்படாத காதல்
- திணை என்பது ஒழுக்கம்
- ஒருவனுக்கு ஒருத்திக்கும் உளதாய காதல் ஒழுக்கமே அகத்திணை எனப்படும்.
- இவை,
  - ✓ ஒருபாற் காதல் (கைக்கிளை)
  - ✓ ஒத்த காதல் (அன்பின் ஐந்திணை)
  - ✓ ஒவ்வாக்காதல் (பெருந்திணை), என்ற முத்திறச் சார்பான ஒழுக்கங்களாகும்.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

➢ சங்கப்பாடல்களில் "திணை" என்ற சொல் குறித்த பொருட்களுடன் "ஒழுக்கம்" என்ற பொருளையும் உணர்த்துகிறது.

**கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்**

**முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப**

### அகப்பாடல்களின் வரையறை

➢ திணைநிலை, கருப்பொருள் நிலை, உரிபொருள் நிலை, கூற்று நிலை, கவிதை வளர்ச்சி நிலை

### திணை நிலை

➢ சங்கப் பாடல்களில் திணை என்ற சொல்லின் பயன்பாடு குறைவாக கூறியது

➢ திணை என்பது மக்கள் வாழ்கின்ற நிலத்தையும் அவர்கள் அங்கு நடத்துகின்ற வாழ்வியல் ஒழுகலாறுகளையும் தருகின்றது என்று க.சு. சுப்பிரமணிய பிள்ளை கூறுகின்றார்

➢ எனவே **"திணை"** என்னும் ஒழுக்கம் பாடலின் ஓர் இன்றியமையாத பண்பாக விளங்குகிறது.

➢ தொல்காப்பியத்தில் **"திணை"** என்ற சொல் நிலம், ஒழுக்கம் என்ற இரு பொருள்களையும் தந்துநிற்கிறது.

➢ திணை என்பது நிலத்து வாழும் மக்களின் தொழிலுக்கு விளக்கம் தரும் சொல்லாகவும் அமைந்துள்ளது.

➢ அகத்திணை என்ற சொல் அக ஒழுக்கத்தைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளது.

➢ புறநானூற்றில் திணை என்ற சொல் **குடி, குலம், பூமி** என்ற பொருளில் இடம்பெற்றுள்ளது.

➢ அகநானூற்றில் திண்ணை என்ற பொருளைத் தருகிறது

➢ திணை என்னும் சொல், **பட்டினப்பாலையில் "திண்ணை"** என்றும் இடம்பெற்றுள்ளது.

➢ பொருநராற்றுப் படையில், "**இடம்**" என்ற பொருள்குறிக்கிறது

➢ மதுரைக் காஞ்சியில், "**நிலம்**" என்ற பொருள் இடம்பெற்றுள்ளது.

### கருப்பொருள் நிலை

➢ சங்கச் செய்யுட்களின் **அகப்பொருள் மரபு மூன்றாக** இடம்பெற்றுள்ளது.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றும் சிறப்பானவை.
- புறப்பாடல்களை அகப்பாடல்களிலிருந்து பிரித்துக் காட்டும் நிலையில் இவை மூன்றும் அமைகின்றன.
- திணை என்பது நிலத்தில் வாழும் மக்களின் தொழிலுக்கு விளக்கம் தரும் சொல்லாகவும் அமைந்துள்ளது.
- புறப்பாடல்களில் கருப்பொருள் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே உள்ளன.
- அகப்பாடல்களிலே கருப்பொருட்கள் திணை நிலையில் **சிறப்பாக இணைக்கப்பட்டுள்ளன.**
- சங்க அகப்பாடல்களில் இயற்கை நிலையான கருப்பொருட்கள் திணைநிலைப் பாகுபாட்டிற்குப் பெரிதும் உதவியாக உள்ளன.
- சிறப்பாக ஐவகை நிலப்பாகுபாட்டின் விளக்கத்திற்கு அந்தந்த நிலங்களிலே காணப்பட்ட மரம், செடி, கொடி, பூ, புள் – விலங்கினம் என்பதும் பெரிதும் உதவின
- இயற்கையின் சூழ்நிலை மனித வாழ்வினை மாற்றக் கூடிய பேராற்றலுடையது என்பதைச் சங்கப் புலவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.
- அகப் பாடல்களில் எத்திணைக் குரிய பாடல்களென வரையறை செய்வதற்கு மலர்கள் உதவுகின்றன.
- அகப்பாடலையும் புறப்பாடலையும் வேறுபடுத்த மலர்கள் சங்கப்பாடல்களிலே பயன்படுத்தப் பட்டுள்ளன.
- இயங்கும் தன்மையுடைய புள், பறவை, விலங்குகளும் அகப்பாடல்களிலே சில நுண்ணிய உணர்வுகளைப் புலப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இத்தகைய சிறப்புப் பெயர்களைப் புலவர்கள் கருப்பொருளைப் பாடலின் பொருள் விளக்க நிலையிலே, பொருத்தமாகப் பயன்படுத்தியமையால் பெற்றார்கள்
- நம்பியகப்பொருள் கருப்பொருள்களை 14 என்று வரையறுக்கிறது
- புறப்பாடல்களை விட அகப்பாடல்கள் திணை நிலைப் பாகுபாட்டிலே கூர்மையான வேறுபாட்டையுடையன என்பதை உணர்த்தக் கருப்பொருள்களைப் புலவர் துணையாகக் கொண்டுள்ளனர்.
- கருப்பொருள் தோற்றம் பெறுவதற்கு காரணம் முதற்பொருள்
- உரிப்பொருளாகிய ஒழுக்கத்தை நன்கு விளக்கிக் கொள்வதற்கு கருப்பொருள் உதவியாக உள்ளன.
- கருப்பொருள் தான் அகமாக நின்று பொருள் காட்டும் பண்புடையதாய் விளங்குகிறது.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



### உரிப் பொருள் நிலை

- உரிப் பொருள் இல்லாவிடில் அப்பாடல் அகப்பாடல் எனக் கொள்ளப்படுவதில்லை.
- அகப்பாட்டினுள் வரும் ஒழுக்கமாகிய உரிப்பொருள் ஒருவருக்கு மட்டுமே சிறப்பானதன்று, மக்கள் எல்லோருக்குமே பொதுவான பொருளாதலால் அகப்பாட்டில் இயற்பெயர் சுட்டப்படுவதில்லை அவ்வாறு பெயர் சுட்டப்பட்டால், அது புறப்பாட்டு எனக் கொள்ளப்படும்.
- உரிப்பொருள் மக்கள் ஒழுக்கத்தையே உரித்தமையால் அகப்பாடல்களின் முக்கியப் பொருளாக அமைந்தது.
- அன்பின் ஐந்திணையாகச் சிறப்பித்துக் கூறப்பட்ட **புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்** என்பவை மன உணர்வுகளைத் தெளிவாய் வெளிப்படுத்தும் குறியீட்டுச் சொற்களாயமைந்தன.
- அகப்பாடல்களிலே இக்குறியீட்டுச் சொற்களையே அடிப்படையாகக் கொண்டு அகப்பாடல் பொருள் வரையறை செய்யப்பட்டது.

**“கைக்கிளை யுடைய ஒருதலைக் காமம்”**

**“ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்”**

**“பெருந்திணை யென்பது பெருந்தாக் காமம்”**

- என மூவகையாக ஒழுக்கத்தினை வரையறுக்கலாம்.
- அகப்பொருளிலே உரிப் பொருள் மக்களின் கூற்றுகளைச் செய்திகளுடன் புலப்படுத்துகிறது.
- முதல், கருப்பொருள்களைவிட அகப்பாடல்களிலே உரிப்பொருளே அகப்பொருள் நிலையை வெளிப்படுத்தும்

### கூற்று நிலை

- அகப்பாடல்களில் கூற்று நிலையமைப்பு சிறப்பான ஒரு பண்பாகக் காணப்படுகின்றது.
- கூற்று மாந்தர்கள், தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாங்கன், பாணன், பரத்தை, விறலி, கண்டோர் ஆவார்.
- அகப்பாடல்கள் கூற்றுகளில் **பெண்கள் கூற்றுகள்** பெரும்பாலும் அமைகின்றது
- தோழி, தலைவி இருவர் கூற்றிலும் ஒரே அமைப்புள்ள பாடல்களும் இருக்கின்றன.
- கூற்று நிலையிலே அகப்பாடல் தொகுப்பான அகநானூற்றிலும் புறப்பாடல்களின் தொகுப்பான புறநானூற்றிலும் வருகின்றன.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

- கூற்று நிலை அகப்பாடல்களிலே தொடர்பு உற்றோரது உணர்வு நிலைகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.
- ஒழுக்க நிலையிலே ஏற்படும் மாற்றங்களை நேரடியாகச் சுட்டிக் காட்டக் கூற்று நிலைகள் வாய்ப்பாய் இருந்துள்ளது.
- **(PG – TRB 2018 -2019) அகப்பாடல்களில் வாயில் என்று அழைக்கப்படுபவர்கள் - Ans: ஊடல் தனிப்போர்**
- சான்றாக, மருதபாடலிலே தலைவனது பரத்தை ஒழுக்கத்தைத் தொடர்புடையோர் எல்லோரும் விடுகின்ற நிலையைக் கூறலாம்.
- கூற்று நிலையில் தலைவனுடைய தகாத ஒழுக்கம் பிறர் செவிப்படாதவாறு கூறப்படும். இது தலைவன் மனம் புண்படாதிருக்கவும் உதவிற்று.
- கூற்று நிலையான அகப்பாடல்கள் புறப்பாடல்களிலிருந்து வேறுபட்டவை.
- புறப்பாடல்களிலே கூற்றுநிலை வேறுபட்டது
- கருப்பொருள் நிலையிலே தொடர்புபடுத்திய கூற்று நிலைப் பாடல்களை அகப்பாடல்களே கொண்டுள்ளன.
- அகப்பாடல்களிலே புலவன் தன் கருத்தமையமைப்பதாகும் இக்கூற்றுநிலை உதவுகின்றது.
- நெடும்பாடல்களில் இத்தகைய அமைப்பு இல்லை.
- கூற்றுநிலைப் பாடலால் கேட்போர் நிலையை உணர்ந்தமையை வெளிப்படுத்த முடியும் எனப் புலவர் கருதியுள்ளார்.
- அகப்பாடல்களிலே புலவர்களிலே வேறுபட்ட வாழ்வியற் சூழலுடையோர் பாடல்கள் பாடியமையால் கூற்று நிலை வேறுபாடுகளை வேறாக பார்ப்பதற்கு இடம் உண்டாயிற்று.
- புலவர்களின் வாழ்க்கைச் சூழல் சுட்டியொருவர் பெயர் கூறாத கூற்று நிலப் பாடல்களைப் பாடுவதற்கு உதவியமையால் செய்யுள் மரபு நிலையைவிடக் கூற்றுநிலைமரபு தனித்துவமாக அமைந்துள்ளது.
- தோழிக் கூற்றுப் பாடலில் சொல்வன்மை மிக்கவளாக இருந்த நிலையும் உள்ளுறை மிகுதியும் உணர்த்துகிறது.

**கவிதை வளர்ச்சி நிலை**

- சங்க இலக்கியங்களில் அகப்பாடல்களின் தொகுப்புகளிலே உள்ள கவிதைகளின் வளர்ச்சி நிலையைக் கணிப்பதற்கு அவற்றின் யாப்பமைதி பற்றி அறிவது அவசியம்.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, என்னும் நான்கு தொகுதிகளிலும் உள்ள பாடல்கள் அகவல் யாப்பிலே அமைந்தவை
- பரிபாடல் பாடல்கள் பரிபாட்டு என்னும் யாப்பில் அமைந்தவை, கலித்தொகைப் பாடல்கள் கலிப்பாவால் இயற்றப்பட்டவை.
- பத்துபாட்டிலும் முல்லைப்பாட்டு, ஆசிரியப்பாவிலும் நெடுநல் வாடை அகவற்பாவிலும், குறிஞ்சிப் பாட்டு அகவற்பாவிலும், பட்டினப் பாலை வஞ்சியும் ஆசிரியமும் கலந்ததாக **(வஞ்சி நெடுப்பாட்டில்)** அமைந்துள்ளன.
- ஓசை நிலையில் அகப்பாடல்களில் கூற்று நிலையான பாடல்களைப் பாடுவதற்கு அகவற்பா பொருத்தமாக இருக்கும்.
- அகவிக் கூறுதலால் அகவல் எனப்பட்டது
    - ✓ ஆசிரியப்பா – அகவல் ஓசை
    - ✓ வெண்பா – செப்பலோசை
    - ✓ வஞ்சிப்பா – தூங்கலோசை
    - ✓ கலிப்பா – துள்ளல் ஓசை
- சங்ககால இறுதி நிலையிலே தோன்றியதாகக் கருதப்படும் கலித்தொகையும் பரிபாடலும் வேறுபட்ட நடையிலே அமைந்துள்ளன.
    - ✓ அகவல் ஓசை – இயற்கையே தோன்றுந் தொடர்பு ஒலி
    - ✓ செப்பல் ஓசை – சொன்முறையில் இயற்கையே தோன்று இடையிடையே நிற்றல் பெற்றுச் செல்வதாகும்
    - ✓ தூங்கலோசை – ஒவ்வொரு சீர் தோறும் தொடர்புற்று நிறைந்து செல்வது
    - ✓ துள்ளல் ஓசை – ஓசை கணிந்து துள்ளித் துள்ளிச் செல்வது
- அகவற் பாடல்களை பாடும்போது பத்துப் பாடல்கள் அமைகின்றன பதிக அமைப்பு முறை காணப்படுகிறது.
- தொண்டிப்பதில் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளது கவிதை வளர்ச்சியிலே குறிப்பிடத்தக்க தொன்றாகும்.
- நெடும்பாடல்களை விட ஐங்குறுநூற்றுப் பாடல்கள் கவிதை வளர்ச்சி நிலையை வெளிப்படுத்துவனவாக உள்ளன.
- கூற்று நிலையில் ஒருவருக்கு மேற்பட்ட இருவர் மூவருடைய அகவுணர்வுகளைக் கலித்தொகைப் பாடல்கள் காட்டுகின்றன.
- ஒத்தாழிசைக் கலியின் அமைப்பு உரையாடல் பாங்கிலே அகவுணர்வைப் பாடுவதற்குப் பொருத்தமானது.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

## அகப்பொருள் நெறிமுறை

### அகமே இன்பம்

- "அகம்" என்பது, அடங்கியது, இடம், உள்ளிடம், மனம் உள்ளிட்ட பலபொருள் தரும் ஒரு சொல்லாகும். உள்ளமாகிய, மன உணர்வினுள் நுகர்ந்து இன்பமுறும் காம இன்பத்தையும் ஆகுபெயராய் இச்சொல் உணர்த்தும்
- மணப்பருவமுற்ற ஆணும் பெண்ணும் மனம் ஒருப்பட்டு இருவரும் ஒருவராய் ஒன்றி வாழும் நிகழ்ச்சியை "அகவொழுக்கம்" என்பர்.
- அகவொழுக்கம் என்பதே அகத்திணை. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கனுள், இன்பம் ஒன்றனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பாடப்பெறுவன அகப்பொருள்பாடல்கள்.

### அகப்பொருட் செய்யுள்களின் அங்கங்கள் (12)

**1. திணை:** அகப்பொருளில் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழு திணைகளாய்த் தொல்காப்பியர் பகுத்துரைப்பர். இப்பாகுபாடு அந்நாளைய இலக்கியப் போக்கினை ஆய்ந்து வரையறுத்த முடிவாகும்.

**2. கைகோள்:** கைகோள் என்பதற்கு "ஒழுக்கங்கோடல்" என்று உரைப்பர் பேராசிரியர் (தொல். பொருள். 500 உரை). அகத்திணை ஒழுக்கம் களவும் கற்பும் என இரு பெரும் பாகுபாட்டுள் அடக்கப் பெறும். இவற்றுள் முதலாவது மறைந்த ஒழுக்கம் பின்னது வெளிப்பாடான உலகு அறி வாழ்க்கை.

**3. கூற்றுவகை :** பேச்சுக்குரியார் இன்னார் என அறிவித்தல், பாடலைக் கேட்பார்க்கு இதனைச் சொல்லுபவர் இவர், இஃது இன்னாருடைய பேச்சு என்று தெரிவிப்பதாம்

**4. கேட்போர் :** இக்கூற்று இன்னார் இன்னார்க்குச் சொல்லியது என அறிவித்தலாம்

**5. களன் :** களன் ஆவது களம். அஃதாவது இடம். ஒரு நிகழ்ச்சி முல்லை, குறிஞ்சி, முதலிய ஐவகை நிலங்களுள் ஒன்றில் நடை பெறுவது என்றோ இரவுக்குறி பகற்குறி என்னும் குறியிடங்களில் நடைபெறுவதாகவோ அறிவித்தல்

**6. காலவகை :** நிகழ்ச்சிக்குரிய இடத்தைக் குறிப்பிட்டாற்போல அந்நிகழ்ச்சி நடைபெறும் காலத்தையும் வெளிபடுத்தலாம். இது பெரும்பொழுது சிறுபொழுது என இரு கூறாய் அமையும்

**7. பயன் :** தாம் சொல்லிய பொருளினாலே வேறொன்று விளையுமாறு செய்தலாம்.

**8. மெய்ப்பாடு :** நிகழ்ச்சிக்குரியர் பேச்சுகளைக் கேட்டார்க்கு அவர் கூறிய பொருள்கள் கண்ணெதிரிலே தெரியுமாறு போலப் புலப்பட, அதனால் அவர் உணர்ச்சி வயத்தராகவே அவர்தம் உடம்பிலே சில தோற்றங்கள் புலனாகும். உள்ளுணர்வு வெளிப்பாடே மெய்ப்பாடு என்பதாம்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



**9. எச்சவகை:** வெளிப்படையாய்ச் சொல்லப் பெறாத மொழிகளைக் குறிப்பு மொழிகளினால் கண்டு உணர்தல். அவற்றைக் குறிக்கொண்டு உள்ளடங்கிய பொருளினை ஓர்தல்.

**10. முன்னம்:** சொல்லுதற்கு முன்பே குறிப்பு உணர்ந்து செயலாற்றுதல். உயர்ந்தோரும் இழிந்தோரும் தத்தம் விருப்பின் வண்ணம் ஒப்பச் சொல்லுதல் அங்ஙனம் சொல்லுதற்கேற்ப அவற்றைப் போற்றிச் செய்ய முற்படுவர்.

**11. பொருள்: புலவன், தான் கற்பித்துக் கொண்டு** கூறுவதாகிய பொருளினை விளக்கமுறச் செய்தல்.

**12. துறைவகை:** முதல் கருப்பொருள்கள் முறை பிறழ்ந்தாலும் இஃது இன்ன பொருண்மைக்கே சாரும் எனப் பாடலுள் காணும் கருவி கொண்டு தெளிதல்

**சங்க அகப்பாடல்களின் தனித்துவம்**

- உணர்ச்சி நிலை வெளிப்பாடு
- புலவனின் செய்யுட் கோட்பாடு
- பிறமொழி அகப்பாடல்களின் ஒப்பீடு
- மரபு நிலையான வளர்ச்சி

**அகப்பாடல்களில் முப்பொருள்**

- முதல், கரு, உரி என்னும் மூன்று பொருளும் அகப்பாடல்களுக்கு அடிநிலையாய் இருக்கும்.
- உரிப்பொருளோ ஒழுக்க நிலையை உணர்த்துவதாயினும் அவ்வொழுக்கம் நிகழ முதற்பொருள், கருப்பொருள்கள் ஏற்புடையனவாய் அமைந்து விளங்குதல் வேண்டும்.
- அப்பொழுதுதான் குறித்தொரு **இன்ப ஒழுக்கம்** சிறந்து காணப்படும்.
- முதற்பொருள்களான நிலம் (ம) பொழுதுகளும், கருப்பொருள்களான **தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில், யாழ்,** என்பனவும் ஒவ்வொரு நிலத்திலும் வேறு வேறாய்க் காணப்படும். இவையெல்லாம் **இன்ப வொழுக்கத்திற்குப் பின்னணிச் சார்பாய்** அமைகின்றன.
- **PG TRB 2022 - யில் கேட்கப்பட்ட வினா** - கருப்பொருள்களுள் தொல்காப்பியர் சுட்டும் "செய்தி" என்பது: **Ans: தொழில்**
- புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவும் அவற்றிற்கு ஏதுவான நிமித்தங்களும் ஐந்திணைகளுக்கும் உரிய உரிப்பொருள்கள் ஆகும்.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

### அகப்பொருள் மரபுகள்

- களவுநெறி, களவில் கூறுகள், களவு நெறியில் அறிமுகமாகும் மாந்தர்கள், கற்பு நெறி வாழ்க்கை, கூற்று வகைகள்
- **PG TRB 2022 - யில் கேட்கப்பட்ட வினா** -களவில் கூற்றிற்குரியோர் எத்தனை போர்? **Ans: அறுவர்.**

### அன்பின் விரிவு

- தலைவியினிடம் சென்ற அன்பு, பின்னர்அவளுடைய உயிர்த்தோழி, தாயார், சுற்றத்தார் எனப்பலரிடத்தும் பரவுகின்றது.
- கடமையை நிறைவேற்ற வேண்டிய பெரும்போராட்டம் நிகழ்கிறது. கடமையை நிறைவேற்ற வேண்டுமாயின் தலைவியை பிரிந்து செல்ல வேண்டிய கட்டுப்பாடு ஏற்படுகிறது.
- இறையனார் அகப்பொருள், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களானும், நம்பியகப்பொருள் நூல்களானும் பெரிதும் போற்றும் துறையாக அகத்துறை இருப்பது தெள்ளத்தெளிவு.

### 2.1.1. எட்டுத்தொகை நூல்களில் அகம்:

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை".**

- எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்னும் மூன்றும் நீங்கலாக ஏனைய ஐந்து நூல்களான, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்பன அகத்துறை நூல்களாகும்.
- அடிகுறைந்து இருப்பதால் **குறுந்தொகை,** அடிநிமிர்ந்து இருப்பதை **நெடுந்தொகை (அகநானூறு),** இரண்டுக்கும் நடுவணதாகியதனை **நற்றிணை** என்பர்.
- அகநானூற்றை, **அகம்** எனவும், **நெடுந்தொகை** எனவும், **அகநானூறு** எனவும், அதன் உட்பிரிவுகள் கருதி **களிற்றியானை நிரை, மணிமிடைபவளம். நித்திலக்கோவை** எனவும் பெயர் குறித்து உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ளனர்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தும் அகமேயாக, நன்கினையும் வேறுபெயர் குறித்து வழங்கி இஃதொன்றனை மட்டும் **அகம்** என்னும் இலக்கணச் சொல்லாலேயே வழங்கியுள்ளமை இதன் சிறப்பினைக் குறிக்கும்.
- **நற்றிணை** முதலாகப் **புறநானூறு** இறுதியாக வைத்து எட்டுத்தொகை நூல்களை வரிசைப்படுத்துகிறது. இதனுள் கால முறையோ, பொருள் முறையோ, பா முறையோ எதுவும் இல்லை என்பது வெளிப்படை.
- 'கற்று அறிந்தார் ஏத்தும் கலி" என்று புகழ்பெற்றது கலித்தொகை.
- கலியே **பரிபாடலும்** முறையே **கலிப்பாவாலும்**, பரிபாடலாலும் ஆயினமையால் அப்பெயர்க்கு உரியனவாயின. பிற பாடல்கள் அனைத்தும் **ஆசிரியப்பாவால்** ஆனவை.
- ஐங்குறுநூற்றிலும் பதிற்றுப்பத்திலும் பத்துப்பத்துப் பாடல்கள் என்ற முறையில் **அகமும் புறமும் தொகுதி தொகுதியாகப் பாடப்பட்டுள்ளன.**
- பரிபாடலிலும் கலித்தொகையிலும் கூட ஒரு **பொருள் (அ) திணை** பற்றிய பாடல்களின் தொகுதிகளாக அமைந்திருக்க காணலாம்.
- சங்க இலக்கியங்கள் பொதுமைச் சிறப்பும் புதுமைச் சிறப்பும் மிக்கவை. பொருட் சிறப்பும் கருத்துச் செறிவும், சொல்லினிமையும் வாய்ந்தவை.
- இவை **அகத்திணை, புறத்திணை,** எனப் பகுக்கப் பெற்று, பெரும்பாலும் காதல், வீரம் குறித்துப் பேசின, இருப்பினும் இயற்கை, பிரிவாற்றாமை, விருந்தோம்பல், கொடை, அரசியல், கையறுநிலை, வணிகம், வேளாண்மை, விளையாட்டு போன்றவற்றையும் புலப்படுத்ததவறவில்லை.
- சங்க அகப்பாடல்களில் இயற்கை காட்சிகளை வருணனையாகவும், உள்ளுறையாகவும் மனித வாழ்வியலோடு இணைத்துப் பாடுகின்றன.
- ஐம்புலன்களுக்கும் விருந்தாக அமையும் இயற்கையை மக்களின் காதல், வீரம் இன்ன பிற வாழ்வியல் கூறுகளோடு இணைத்துப்பாடுவது சங்க இலக்கியமரபு, எனவே சங்க இலக்கியத்தை காலத்தை **"இயற்கை நெறிக்காலம்"** எனலாம்.
- ஐங்குறுநூறு - 3 அடி முதல் 6 அடி வரை, குறுந்தொகை - 4 அடி முதல் 8 அடி வரை, நற்றிணை - 9 அடி முதல் 12 அடி வரை , அகநானூறு - 13 அடி முதல் 31 அடி வரை
- **PG TRB (2018 - 19) கேட்கப்பட்ட வினா** - அகப்பாடல்களில் வரலாற்றுச் செய்திகளை இணைத்துப்பாடுவதில் **வல்லவர் - மாமூலனார்.**
- பரிபாடலிலும் சில பாடல்கள் **அகப்பொருள்** பற்றி அமைந்தவை.

❖ எட்டுத்தொகையுள் பெரும்பாலனவற்றிலும் ஐந்திணை முறைப்படியே பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

❖ ஐங்குறுநூறும், கலித்தொகையும் ஐந்து ஐந்து கூறுகளாய்த் திணை பற்றிப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியங்கள்**

**எட்டுத்தொகை**

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை **(இயற்கை இன்பக்கலம்)** | | |

**பத்துப்பாட்டு (இயற்கை ஓவியம்)**

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| பட்டினப்பாலை | பொருநராற்றுப்படை |
| நெடுநல்வாடை (அ/பு) "வேம்பு தலையாத்த நோன் காழ் எஃகம்) | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

### 2.1.1. நற்றிணை

- நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் **முதலாவதாக** வைத்துப் பாடப்படுவது.
- "நல்லதிணை" என்ற அடைமொழியால் போற்றப்படும் சிறப்பினை உடையது.
- நல் - சிறந்த, திணை - ஒழுக்கம், சிறந்த ஒழுக்கத்தை எடுத்துக்கூறும் நானூறு பாடல்களைக் கொண்ட நூல்.
- அகவற்பாக்களால் ஆனது. அகவல் என்றால் **அகவி அழைப்பது** என்பர். நான்கு பாவகையுள் ஆசிரியப்பா ஒன்று.
- **"நற்றிணை நானூறு"** எனவும் அழைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அடிஅளவு | - 9 அடி முதல் 12 அடிவரை |
| தொகுப்பித்தவன் | - பன்னாடு தந்த மாறன் வழுதி |
| கடவுள் வாழ்த்து | - பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| கடவுள் வாழ்த்து தெய்வம் | - திருமால் |
| பாடிய புலவர்களின் எண்ணிக்கை - 175 | |

- கருத்துச் செல்வமும், காதல் நுட்பமும் கமழும் நற்றிணைப்பாடல்களில் நயங்களும் சிறப்புக்களும் மிகுந்து காணப்படுகின்றன.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- ஊராலும், உறுப்பாலும், இனத்தாலும், தொழிலாலும், குடிப்பிறப்பாலும் (ம) பல்லாற்றானும் சிறப்புப் பெயர் பெற்ற பலபுலவர்கள் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

**ஊராற் பெயர் பெற்றவர்**

- அஞ்சில் அஞ்சியார், அஞ்சில் ஆந்தையார், ஆலங்குடி வங்கனார், ஆலம்பேரி சாத்தனார், இடைக்காடனார் உரோடகத்துக் கந்தரத்தனார், உறையூர்க்கதுவாய்ச் சாத்தனார், ஐயூர் முடவானார், கச்சிப்பேட்டு இளந்தச்சனார், கருவூர்க் கோசனார், காஞ்சி புலவனார், பெருங்குன்றூர் கிழார், மாங்குடி கிழார் போன்ற பல்லோராவர்.
- "நாருடை நெஞ்சத்து ஈரம் பொத்தி, ஆன்றோர் சென்னெறி வாழ்தலே" - 233 பாடல்

  - **அஞ்சில் ஆந்தையார்**

- நற்றிணையில் மூன்று பாடல்களைப் **பாடியவர் ஆலங்குடி வங்கனார்,** (230, 330, 400) இம்மூன்றும் மருதத் திணையைப் பற்றியனவே.
- "மடலே காமம் தந்தது" - **ஆலம்பேரிசாத்தனார்** (பாடல் - 152)
- **இடைக்காடனார்,** நற்றிணையில் 142 - ஆம்பாடலில் விருந்து உபசரிப்பு பற்றி பாடியுள்ளார்.
- "தீமைகண்டோர் திறத்தும் பெரியோர், தாமறிந்துணர்க, என்று **கந்தரத்தனார்"** அழிவின் உண்மையை உணர்த்துகிறார்.

**உறுப்பாற் பெயர் பெற்றவர்:-**

- ஐயூர் முடவனார், குண்டுகட் பலியாதனார், செங்கண்ணனார், நக்கண்ணையார் என்று பல புலவர்களும் உள்ளனர்.
- "கல்கெழு நாடன் கேண்மை

  அறிந்தனள் கொல் அஃது அறிகலேன் யானே"

  - 206 - நற்றிணை, இப்பாடலில் தோழிக்கூற்றாக தலைவனை திருமணம் விரைவில் செய்வாயாக என்று வலியுறுத்துவாக **ஐயூர் முடவனார்** கூறுகிறார்.

- **நக்கண்ணையார்**, பெண்பாற் புலவர்
  - ✓ 19 வது பாடல் - "இறவுப்புறத்து அன்னபிணர்படு தடவு முதல்

    சுறவுக்கோட்டன்ன முள்ளிலைத் தாழை"
  - ✓ 87 வது பாடல் - "வெல்போர்ச் சோழர் அழிசி அம் பெருங்காட்டு நெல்லிஅம் புளிச்சுவைக் கனவியாங்கு"

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

- நற்றிணையில் 242 - ஆம் பாடலில் மான்குட்டியை விழிக்கட் பேதை என்று கூறிய சிறப்பால் அதனையே சிறப்புடை மொழியாகப் பெற்று அப்பாடலைப் பாடிய புலவர் **'விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார்"** எனப்பட்டார்.
- நெஞ்சிற்கும் அறிவுக்கும் இடையில் உடம்புபடும் துன்பத்திற்குத் "தேய்புரிம் பழங்கயிறு போல" என உவமை காட்டிய சிறப்பால் அப்புலவர் **"தேய்புரிப் பழங்கயிற்றினார்"** என வழங்கப்பட்டார். (பாடல் 284)
- நற்றிணைச் செய்யுள்களுக்குக் குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்திணைப் பாகுபாடு நூலில் இடம்பெறவில்லை. பதிப்பாசிரியர்களால் பொருள் வரையறை செய்து கொடுக்கப் பெற்றுள்ளன.
- குறிஞ்சி - 131, பாலை - 106, நெய்தல் - 32, மருதம் - 32, முல்லை - 29
- இவற்றால் நற்றிணை நானூற்றில் **குறிஞ்சித் திணைப்** பாடல்களே மிகுதியும் எனலாம்.
- நெய்தல் திணைப் பாடல்களிலும் உரிப்பொருள் வகையில் குறிஞ்சித் திணைக்குரிய பாடல்கள் நிறைய இருக்கின்றன. முதற்பொருளானும், கருப்பொருளானும் அவை நெய்தல் திணை என்று பெயர் பெற்றுள்ளன.
- வரலாற்றுச் செய்திகளும் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன.
- வல்வில் **ஓரி, கொற்றச்சோழர் கொங்கர், "பழையன்"** ஆகியவர்களைப் பற்றி குறிப்புக்கள் உள்ளன.
- நற்றிணைக்கு முதலில் உரை எழுதியவர் **பின்னத்தூர் நாராயண சாமி ஐயர்.**

**நூல் தரும் செய்திகள்**

- பழங்காலத் தமிழரின் ஒழுகாலற்றினை, வாழ்வியலைத் தெள்ளத் தெளிவாக விளங்க வைக்கிறது.
- இயற்கையழகின் இன்பப் பெட்டமாகத் திகழ்வது
- விலங்கினங்களின் அன்புணர்ச்சியையும் பறவைகளின் காதல் நிகழ்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுகின்றன.
- **முள்ளூர், மாந்தை, உறந்தை** போன்ற பற்பல ஊர்களின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்கின்றன.
- கிள்ளி, குட்டுவன், செழியன், சென்னி போன்ற **முடியுடைப் பெருவேந்தர்களும்,** ஆஅய், ஓரி, காரி போன்ற **குறுகிய மன்னர்களும்,** தழும்பன், திருமாவுண்ணி, விராஅன், வீரை போன்ற மறவர்களும் இந்நூலிற் பாவலர் பலரானும் பாராட்டப்பட்டுள்ளனர்.

- தமிழர்தம் விழாக்கள் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகின்றது.
- நற்றிணைக் கவிதையில் அரிய உவமைகள் பொருந்தியுள்ளன.
    - ✓ கொல்லன் உலைக்களத்தில் இரும்பிலிருந்து சிதறும் பொறிகள் வேங்கை மலருக்கு உவமையாக கூறப்பட்டுள்ளன. (பாடல் - 13)
- பழந்தமிழர் வாழ்வியல், பழக்க வழக்கங்கள், வள்ளல்கள், உவமைகள், அரிய நீதிகள், மரங்கள், காலம், செடிகொடிகள், விலங்குகள், பிராணிகள், பறவைகள், நகரங்கள் இடம்பெற்றுள்ளன.

**பழந்தமிழர் வாழ்வியல்**

- சங்கால மக்கள் பல்வேறு தொழில்களை செய்து வாழ்ந்து வந்தனர். கிணையர், இடையன், உமணர், கம்மியர், கானவன், குறவர், கொல்லன், பாணன், சென்னியர், பரதவர், பார்ப்பனர், புலையன், போன்றோரின் தொழில் சார்ந்த பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

**உமணர்**

- "உமணர் தந்த உப்பு நொடை நெல்லின்

அயினிமா இன்று அருந்த நீவிக்கணநாறு பெருந்தொடை புரளும் மார்பின்

துணை இலை தமியை சேக்குவை அல்லை

நேர்கண் சிறுதடி நீரின் மாற்றி

வானம் வேண்டா உழவின் எம்

கானல் அம் சிறுகுடிச் சேர்ந்தனை செலினே" - **உலோச்சனார்.**

**சொல்லும் பொருளும்**

- அயனிமா - குற்றிய அரசியை உணவாக உண்ணும் குதிரை
- உப்பு வணிகாரலே உப்பு விற்று அதற்கு மாறாக பெற்ற நெல்லை, குற்றிய அரிசி உணவாக்கிய குதிரை உண்ணுகின்ற செய்தியையும் இப்பாடல் (254) வலியுறுத்துகின்றது.

**ஓகை உமணர் -** உவகையுடன் வண்டியில் ஏற்றும் உமணர்

- பாடல் - 331, திணை - நெய்தல், கூற்று - தோழிகூற்று

பாடல் வரி - "உவர் வினை உப்பின் உழாஅஉழவர் ஓகை உமணர் வருபதம் நோக்கிக்"



TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

**பாடலின் பொருள்**

- புலால் நாற்றம் வீசும் மீனை, உப்புப்படுத்து, உலர்த்துங்கால், அவற்றைத் தின்ன வரும் காக்கை முதலியவற்றை ஓட்டும் பரதவர்கள் என்னும் பொருள் இடம் பெற்றுள்ளது.

**விருந்தோம்பல்**

- விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடுஇரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத்தலைவிக்கு உண்டு.
- இக்கருத்து அமைந்த **பாடல் எண் - 142**,

**"அல்லில் ஆயினும் வருந்துவரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின்**

**மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே".**

✓ கூற்று - தலைவன் கூற்று, திணை - முல்லை, ஆசிரியர் - **இடைக்காடனார்**

**சொல்லும் பொருள்**

✓ அல் - இரவு, மெல்லியல் - மென்மையான சாயலை உடையவள், குறுமகள் - இளமை மாறாத மகள், உவக்கும் - மகிழும்

**பாடலின் பொருள்**

❖ வினைமுடித்துத் திரும்பும் தலைமகன் தேர்ப்பாகனிடத்து தேரை விரைவிலே செலுத்த வேண்டுமென்னும் குறிப்புடன் தன் தலைமகளின் ஊரை உவந்து கூறுகின்றான்.

**சிறந்த பொருள்:**

❖ தலைவன், தலைவியிடம் இருப்பின் பொருள் பெற முடியாது (புணராது), பொருள்வயின் பிரியின் புணர்ச்சி நிகழாது என்று தலைவன் வருந்துவதாகக் நற்றிணைப்பாடல் கூறுகிறது.

**பாடல் எண் - 16:**

**"புணரின் புணராது பொருளே,**

**பொருள் வயிற் பிரியின் புணராது புணர்வே;**

**ஆயிடைச் செல்லினும் செல்லாய் ஆயினும்,**

**நல்லதற்கு உரியை வாழி என் நெஞ்சே"**

✓ திணை - பாலை, கூற்று - தலைவன், பாடியவர் - **சிறைக்குடி ஆந்தையார்**

TEACHER'S CARE ACADEMY

## பயிற்சி வினாக்கள் (150)

1. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. நீகான் | – a. பகல் | |
| 2. வங்கூழ் | - b. கலங்கரை விளக்கம் | |
| 3. மாடவொள்ளரி | - c. நாவாய் செலுத்துவோன் | |
| 4. எல் | - d. காற்று | |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| (A) | c | d | b | a |
| (B) | d | c | a | b |
| (C) | a | b | d | c |
| (D) | b | a | c | d |

2. மகாபாரத கதைகள் இடம் பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்?

(A) குறுந்தொகை (B) நற்றிணை (C) கலித்தொகை (D) ஐங்குறுநூறு

3. “கூகைப் கோழி வாகைப் பறந்தலைப், பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்” – அதிகனின் வெற்றியைக் குறித்தும் பாடியவர்?

(A) தும்பிசேர்கீரனார் (B) பரணர்

(C) கபிலர் (D) அம்மூவனார்

4. பொன்செய் பாவை கொடுப்பவும், கொள்ளான் பெண்கொலை புரிந்த நன்னன் போல – என்ற அடிகளின் ஆசிரியர்

(A) பரணர் (B) கபிலர் (C) ஔவையார் (D) வெள்ளிவீதியார்

5. கொங்கரின் வெள்ளி விழா பற்றி பாடிய புலவர்?

(A) மருதனிளநாகனார் (B) நக்கீரர்

(C) அம்மூவனார் (D) இளங்கீரனார்

6. “பொதியிற் செல்வன்” என்று அழைக்கப்பட்ட மன்னன்?

(A) திரையன் (B) திதியன் (C) சேரலாதன் (D) செழியன்

7. நனவில் புணர்ச்சி நடக்கலும், ஆங்கே கனவில் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ? – இப்பாடல் வரிகள் இடம் பெற்ற கலி?

(A) முல்லைக் கலி (B) குறிஞ்சிக் கலி (C) பாலைக் கலி (D) நெய்தற் கலி

8. ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழற் கயத்து நீருள் குவளை வெந்தற்று – என்ற அடிகளின் ஆசிரியர்?

(A) கபிலர் (B) சோழன் நல்லுருத்திரன்

(C) பேயனார் (D) நல்லந்துவனார்

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



9. கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு நெடுவரை மருங்கின் துஞ்சும் யானை – குறிஞ்சிக் கலியில் வரும் – இப்பாடல் யாருடைய கூற்று?

(A) தோழி (B) தலைவி (C) செவிலி (D) நற்றாய்

10. தமக்கு இனிது என்று வலிதின் பிறர்க்கு இன்னா செய்வது நன்று ஆடுமோ?

- இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்?

(A) கலித்தொகை (B) நெடுந்தொகை (C) குறுந்தொகை (D) பரிபாடல்

11. குராம்பூ, மராம்பூ – இவ்வகைப் பூக்கள் எத்திணைக்கு உரியது?

(A) குறிஞ்சி (B) பாலை (C) முல்லை (D) நெய்தல்

12. ஓர் இராவைகலுள், தாமலைப் பொய்கையுள் நீர் நீத்த மலர் போல, நீ நீப்பின் வாழ்வாளோ? – இவ்வடிகள் இடம்பெற்ற கலித்தொகைப்பிரிவு?

(A) குறிஞ்சிக் கலி (B) முல்லைக் கலி

(C) பாலைக் கலி (D) நெய்தற் கலி

13. "நல்" என்னும் சிறப்பு அடைமொழி கொடுத்து அழைக்கப்படும் எட்டுத்தொகை நூல்?

(A) அகநானூறு (B) புறநானூறு (C)நற்றிணை (D) ஐங்குறுநூறு

14."பெருந்தோள் நெகிழ்த்த சொல்லற்கு விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" – இவ்வடிகள் இடம்பெற்ற நூல்?

(A) ஐங்குறுநூறு (B) குறுந்தொகை (C) நற்றிணை (D) அகநானூறு

15. இரவுத் தலை மண்டிலம் பெயர்ந்தென உரவுத்திரை எறிவன போல வரூஉம் – இவ்வடிகளின் ஆசிரியர்

(A) கபிலர் (B) கிழார் மகன் வெண்கண்ணி

(C) நக்கண்ணையர் (D) அம்மூவனார்

16. முளிதயிர் பிசைந்த காந்தண் மென்விரல் கழுவுறு கலிங்கம் – கழாஅது உடீஇ – இப்பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது?

(A) அகநானூறு (B) புறநானூறு

(C) குறுந்தொகை (D) ஐங்குறுநூறு

17. வஞ்சிநெடும்பாட்டு என்று அழைக்கப்படும் நூல்?

(A) குறுந்தொகை (B) பட்டினப்பாலை

(C) குறிஞ்சிப்பாட்டு (D) முல்லைப்பாட்டு

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**TEACHER'S CARE ACADEMY**
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# UG TRB
# தமிழ்
## 2022-2023



## UNIT-3

பத்துப்பாட்டில் ஆற்றுப்படை , சங்க இலக்கியங்களில் புறம், அகம் புறம் & கீழ்கணக்கு நூல்களில் புறம்.

*Your Success is Our Goal....*

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

# அலகு - 3


| வ.எ. | பொருளடக்கம் | ப.எ. |
|---|---|---|
| 3.1. | சங்கம் | 1 |
| | 3.1.1. முதற்சங்கம் | |
| | 3.1.2. இடைச்சங்கம் | |
| | 3.1.3. கடைச்சங்கம் | |
| 3.2. | சங்க இலக்கியங்கள் | 4 |
| | 3.2.1. சங்க இலக்கியத்தின் சிறப்புப் பிரிவுகள் | |
| | 3.2.2. அகப்பாடல்கள் | |
| | 3.2.3. புறப்பாடல்கள் | |
| | 3.2.4. சங்க இலக்கியத்தின் சிறப்புகள் | |
| 3.3. | எட்டுத்தொகை | 8 |
| 3.4. | பதிற்றுப்பத்து | 10 |
| 3.5. | புறநானூறு | 17 |
| 3.6. | பரிபாடல் | 29 |
| 3.7. | பத்துப்பாட்டு நூல்கள் | 35 |
| 3.8. | நெடுநல்வாடை | 37 |
| 3.9. | ஆற்றுப்படை இலக்கியம் | 42 |
| 3.10. | திருமுருகாற்றுப்படை | 44 |
| 3.11. | பொருநராற்றுப்படை | 50 |
| 3.12. | சிறுபாணாற்றுப்படை | 56 |
| 3.13. | பெரும்பாணாற்றுப்படை | 62 |
| 3.14. | மலைபடுகடாம் | 66 |
| 3.15. | மதுரைக்காஞ்சி | 72 |
| 3.16. | பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் | 79 |
| 3.17. | களவழிநாற்பது | 82 |
| 3.18. | கூடுதல் முக்கிய வினாக்கள் | 87 |


www.Padasalai.Net

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3:266-C, Advaitha Ashram Road,(Opp to New Bus Stand),Salem-636 004.
Trichy: 76399 67359 Salem: 93602 68118

# UG TRB – TAMIL – 2023-24

## அலகு - 3

## சங்க இலக்கியங்களில் - புறம்

### 3.1.சங்கம்

- சங்க இலக்கியங்கள் என்று சொல்லப்படுகின்ற **எட்டுத்தொகை பத்துப்பாட்டு** இலக்கியங்களில் சங்கம் என்ற சொல்லே பயன்படுத்தப்படவில்லை.
- கி.பி.400 வாக்கில் வச்சிரநந்தி என்பவர் நான்காம் சங்கம் தொடங்கினார். பிறகு சமணத் துறவிகள் சங்கம் என்ற சொல்லைப் பயன்படுத்திச் சமயத் தொண்டு ஆற்றினர். அந்தச் சொல்லைத் தான் பிற்கால இலக்கிய ஆசிரியர்கள் கி.பி.200க்கு முன் தோன்றிய இலக்கியங்களைச் **சங்க இலக்கியங்கள்** என்று அழைத்தனர்.
- பாண்டிய மன்னர்கள் புலவர்களைக் கூட்டி வைத்துத் தமிழாய்ந்து செய்யுட்கள் இயற்றிய அவையைச் **சங்கம்** என்று கூறினர்.
- மதுரையில் **சங்கம்** போன்ற அமைப்பு ஒன்று இருந்ததைத் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பெயர்களில் சுட்டுகின்றன.
- **பத்துப்பாட்டில்** ஒன்றான **சிறுபாணாற்றுப்படை**

  ***தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்***
  ***மகிழ்நனை மறுகின் மதுரை (அடிகள் 66-67)***

  - என்று கூறுகிறது. இதை வைத்துப் பார்க்கும் போது மதுரையில் தமிழ் நிலை பெற்றிருந்தது என்பது புலனாகிறது.
- **மதுரைக் காஞ்சி** எனும் இலக்கியம்

  ***தொல்லாணை நல்லாசிரியர்***
  ***புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்***
  ***நிலந்தரு திருவின் நெடியோன் (அடிகள் 761-763)***

TEACHER'S CARE ACADEMY

- என்று கூறுவதைக் காணும்போது நிலந்தரு திருவின் நெடியோன் என்ற பாண்டியன் அவையில் புலவர்கள் ஒருங்கிணைந்து செய்யுள் இயற்றினர் எனப் புலனாகிறது.

- **புறநானூற்றி**ல் 72ஆம் பாடல்

*ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி*
*மாங்குடி மருதன் தலைவனாக*
*உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்*
*புலவர் பாடாது வரைகஎன் நிலவரை*

என்று கூறுகிறது. இதில் சங்கத்துத் தலைவராக மாங்குடி மருதன் என்னும் புலவர் இருந்ததும் புலவர்கள் செய்யுள் பாடியதும் கூறப்பட்டுள்ளது.

- காப்பிய இலக்கியமாகிய **சிலப்பதிகாரம்** "தென்தமிழ் நன்நாட்டுத் தீதுதீர் மதுரை" என்றும் **மணிமேகலை** ***"தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்"*** என்றும் கூறுகிறது.

- கி.பி. 600 வாக்கில் வாழ்ந்த திருநாவுக்கரசர் சிவபெருமானைச் சங்கத்தோடு இணைத்து போற்றிப் பாடுகிறார். தருமி என்னும் ஏழைப் புலவனுக்குக் 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற **குறுந்தொகைப்** பாடலை எழுதிக் கொடுத்தார் என்பதை

***நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி***
***நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன்காண் (6.76.3)***

- என்று கூறுகின்றார்.

- திருநாவுக்கரசருக்குப் பின் வந்த பல்வேறு இலக்கிய ஆசிரியர்களும் சங்கம் என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர்.

- சின்னமனூர்ச் செப்பேடு சங்கத்தில் இலக்கியம் இயற்றும் பணியோடு மொழிபெயர்ப்புப் பணியும் நடைபெற்றதாக ஒரு செய்தியைக் கூறுகிறது.

***மாபாரதம் தமிழ்ப்படுத்தும்***
***மதுராபுரிச் சங்கம் வைத்தும்***

- என்று கூறுவதால் **மகாபாரத**த்தைத் தமிழில் மொழிபெயர்த்த பணியும் சங்கத்தில்நடந்ததை நாம் அறிகிறோம்.

- வடமொழி இலக்கியமாகிய **வால்மீகி இராமாயணம்** சங்கம் இருந்தமைக்குச் சான்றாக விளங்குகின்றது. அந்த இலக்கியத்தில் சீதையைத் தேடச் சென்ற வானரரை நோக்கிச் சுக்கிரீவன் ***"பொதிகை மலையில் அகத்திய முனிவரின் தமிழ்ச் சங்கம் உள்ளது; அதனைக் காண்பீர்"*** என்று கூறியதாக வருகிறது. பிளினி தாலமி போன்ற மேலைநாட்டு அறிஞர்களும் சங்கம் பற்றி உரைக்கின்றனர். இலங்கை வரலாற்று நூல்களான **மகாவம்சம் இராஜாவளி இராஜரத்னாகிரி** போன்ற நூல்களும் சங்கம் இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

TEACHER'S CARE ACADEMY

### 3.1.1. முதற்சங்கம்:

- கடல் கொண்ட தென்மதுரையில் பாண்டிய மன்னர்களால் நிறுவப் பெற்ற சங்கம் தான் முதற்சங்கமாகும். இச்சங்கத்தை நிறுவிய மன்னன் காய்சின வழுதி என்பவனாவான்.




- காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் ஈறாக 89அரசர்கள் 4440 ஆண்டுகள் இச்சங்கத்தை நடத்தியதாக **இறையனார்களவியல் உரை** கூறுகிறது.
- இச்சங்கத்தில் அகத்தியர் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் குன்றெறிந்த முருகவேள் முரஞ்சியூர் முடிநாகராயர் நிதியின் கிழவன் போன்ற புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தனர்.
- 4449 புலவர்கள் தமிழ் ஆராய்ந்து செய்யுள் பாடினர். அவர்களால் **பரிபாடல் முதுநாரை முதுகுருகு களரியாவிரை** போன்ற நூல்கள் பாடப்பட்டன.

### 3.1.2. இடைச்சங்கம்:

- தென்மதுரையைக் கடல் கொண்ட பிறகு கபாடபுரத்தில் தொடங்கப் பெற்ற இடைச்சங்கம் 3700 ஆண்டுக் காலம் நடைபெற்றது.
- வெண்தேர்ச் செழியன் என்ற பாண்டிய மன்னனால் தொடங்கப் பெற்ற இச்சங்கம் முடத்திருமாறன் முடிய 59 மன்னர்களால் நடத்தப் பெற்றது. இச்சங்கத்தில் அகத்தியர் தொல்காப்பியர் இருந்தையூர் கருங்கோழியார் வெள்ளூர்க் காப்பியனார் போன்ற3700 புலவர்கள் பாடினர். இவர்களால் பாடப்பெற்றவை **கலி குருகு வெண்டாளி வியாழ மாலை அகவல்** போன்ற நூல்களாகும்.

### 3.1.3. கடைச்சங்கம்:

- கபாடபுரமும் கடலால் அழிந்த பிறகு தற்போது உள்ள மதுரையில் கடைச் சங்கம் எனப்படுகின்ற மூன்றாம் சங்கம் தொடங்கப் பெற்றது.
- இரண்டாம் சங்கத்தை நடத்தி கபாடபுரம் அழியும் போது அங்கிருந்து பிழைத்து வந்த முடத்திருமாறனால் இது தொடங்கப் பெற்றது.
- இச்சங்கம் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 அரசர்களால் நடத்தப் பெற்றது.
- 1850 ஆண்டுகள் இச்சங்கம் நடைபெற்றது.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- இச்சங்கத்தில் சிறுமேதாவியார் சேந்தம்பூதனார் அறிவுடையரனார் பெருங்குன்றூர்க்கிழார் இளந்திருமாறன் மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் மருதன் இளநாகனார் நக்கீரனார் என 449 புலவர்கள் பாடினர்.
- இதில் எழுதப்பட்ட நூல்கள் **அகநானூறு குறுந்தொகை நற்றிணை புறநானூறு ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து கலித்தொகை பரிபாடல்** போன்றவை ஆகும்.
- முச்சங்கங்கள் பற்றிய மேற்கண்ட செய்திகளை **இறையனார் களவியல் உரை** என்ற கி.பி. 8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்தான் கூறுகின்றது. இந்நூல் கூறும் செய்திகள் முழுமையான நம்பிக்கைக்குரியனவா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.
- இருப்பினும் சங்கம் என்ற ஓர் அமைப்பு பாண்டியர்களால் நடத்தப் பெற்றமை குறித்துச் சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் நிறையச் சான்றுகள் கிடைக்கின்றன.
- முச்சங்கங்களும் இருந்த கால அளவு பாடிய புலவர்களின் எண்ணிக்கை சங்கம் நடத்திய அரசர்கள் பற்றி **இறையனார் களவியல் உரை** கூறும் செய்திகள் முழுமையும் உண்மையாக இருக்க வாய்ப்பு இல்லை.
- கி.மு.500 முதல் கி.பி.200 முடிய உள்ள காலமே சங்கம் நடைபெற்ற காலமாக இருக்க முடியும்.

## 3.2. சங்க இலக்கியங்கள்

- **சங்கம்** என்ற ஓர் அமைப்பு இருந்ததாகப் பல்வேறு ஆதாரங்கள் கிடைத்தாலும் சங்கத்திலே அமர்ந்து புலவர்கள் பாடிய பாடல்கள் சிலவாகத் தான் இருக்க முடியும்.
- பெரும்பாலான பாடல்கள் பல்வேறு இடங்களில் பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவையாகத்தான் இருக்க வேண்டும். அவை கி.மு.500 முதல் கி.பி.200 முடிய உள்ள காலத்தில் பாடப்பட்டவையாக இருக்கலாம்.
- சங்கப் பாடல்கள் **எட்டுத்தொகை** நூல்கள் என்றும் **பத்துப்பாட்டு** என்றும் பிரிக்கப்பட்டிருத்தல் காணத்தக்கது ஏராளமான பாடல்கள் ஓலைச் சுவடிகளில் இருந்து அழிந்துபோக எஞ்சியவற்றைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அக்காலத்து அரசர்கள் புலவர்களின் துணையோடு செயல்பட்டனர். அவ்வாறு தொகுக்கப்பட்டவையே **எட்டுத்தொகையும் பத்துப்பாட்டு**மாகும்.
- இக்காலப்பகுதியில் படைக்கப்பட்ட இலக்கண நூல்களுள் **தொல்காப்பியம்** மட்டுமே கிடைத்துள்ளது.
- எட்டுத் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்ட எட்டு நூல்கள் **எட்டுத்தொகை** என்றும் பத்துப் பெரிய பாடல்கள் **பத்துப் பாட்டு** என்றும் பெயர் பெற்றன.

### 3.2.1. சங்க இலக்கியத்தின் சிறப்புப் பிரிவுகள்:

- சங்க இலக்கியங்களை அகம் புறம் என்று பிரிப்பர். காதலைப் பற்றிப் பாடும் பாடல்களை **அகம்** என்றும் காதல் தவிர பிறசெய்திகளைப் பாடும் பாடல்களைப் **புறம்** என்றும் கூறுவர். இதற்கான இலக்கணத்தைத் **தொல்காப்பியம்** கூறுகிறது.
- அகப்பாடல்கள் கற்பனையான தலைவன் தலைவியின் காதலைப்பற்றி விளக்கியுரைக்கின்றன. புறப்பாடல்கள் நாட்டை ஆளும் அரசனின் வீரம் கொடை சமூகத்திற்கு அரசன் ஆற்ற வேண்டிய கடமைகள் கல்வியின் சிறப்பு போன்றவற்றைக் கூறுகின்றன. பெரும்பாலான புறப்பாடல்கள் அரசனின் புகழைப் பாடுவனவாகவே உள்ளன.
- பூம்புகார் உறையூர் மதுரை வஞ்சி போன்ற நகரங்களைத் தவிர பெரும்பாலும் சிற்றூர்களே அக்காலத்தில் இருந்தமையால் மக்கள் இயற்கையோடு இயைந்த சீரிய வாழ்க்கையை வாழ்ந்ததைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

### 3.2.2. அகப்பாடல்கள்:

- ஒருவனும் ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதலிப்பது காதலைத் தோழி மூலம் செவிலித்தாய் நற்றாய் ஆகியோருக்கு மெல்லத் தெரியப்படுத்துவதும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்துள்ளன.
- காதலைத் தெரியப்படுத்துவதற்கு **அறத்தொடு நிற்றல்** என்ற பெயரும் உண்டு. பெற்றோர் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாத சூழலில் காதலனும் காதலியும் ஊரை விட்டு வெளியூர் சென்று விடுதல் உண்டு. இதற்கு **உடன்போக்கு** என்று பெயர்.
- அக்காலத்தில் காதலித்த பெண்ணை மணந்து அவளோடு இன்பத்துடன் வாழ்ந்து வரும் தலைமகன் வேறு பெண்களை நாடிச் செல்வதும் வழக்கமாக இருந்திருக்கிறது. இதற்குப் **பரத்தையிற் பிரிவு** என்று பெயர். அதனால் தலைவி அவனிடம் சினம் கொண்டு **ஊடல்** கொள்ளுதலும் பழக்கமாக இருந்துள்ளது.
- அகப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனைப் பாடல்களாக இருந்தாலும் அக்கால மக்களின் காதல் வாழ்க்கையை முழுமையாகவே வெளிப்படுத்துகின்றன.

### 3.2.3. புறப்பாடல்கள்:

- புறப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனையாகப் பாடப்படவில்லை. இரு அரசர்களுக்கிடையே போர் ஏற்படும் போது புலவர்கள் தலையிட்டுப் போரைத் தடுத்துள்ளனர்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- அரசன் மக்களிடம் அளவுக்கதிகமாக வரி வாங்கும் நேரத்தில் புலவர்கள் தலையிட்டு அரசனுக்கு அறிவுரை கூறியுள்ளனர். இந்நிகழ்வுகள் புறப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன.
- புறப்பாடல்களில் இயற்கைக்கு மீறிய செய்திகள் கூறப்படவில்லை. சங்க கால வரலாற்றைத் தொகுப்பதற்கு சங்கப் புறப்பாடல்கள் ஓரளவுக்குத் துணை நிற்கின்றன.
- அரசர்கள் தமக்குள் போரிட்டுக் கொண்டாலும் புலவர்களைப் பெரிதும் மதித்துள்ளனர். யாருமே தொட அஞ்சும் முரசு கட்டிலில் ஏறிப்படுத்து உறங்கிய மோசிகீரனார் என்னும் புலவரைத் தண்டிக்காது அவர் தூங்கி எழுகின்றவரை கவரி கொண்டு அவருக்கு விசிறினான் சேரமன்னன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்று **புறநானூறு** கூறுகிறது.
- அரசன் கோப்பெருஞ்சோழன் மேல் நட்புக் கொண்டிருந்த காரணத்தால் அவன் வடக்கிருந்து உயிர் துறக்கும் நேரத்தில் புலவர் பிசிராந்தையாரும் அவனுடன் உயிர் துறந்தார் எனவும் செய்தி உண்டு.
- பேகன் என்னும் அரசன் தன் மனைவி கண்ணகியை விட்டு நீங்கி இன்னொருத்தியுடன் வாழ்ந்ததை மாற்றி கண்ணகியுடன் சேர்த்து வைத்தனர் கபிலரும் பரணரும் என்ற செய்தி கூறப்படுகிறது.
- அரச குடும்பங்களின் துன்ப நிகழ்வுகளிலும் புலவர்கள் பங்கு கொண்டு செயல்பட்டமை குறித்த செய்திகள் **புறநானூற்றி**ல் உண்டு.
- மலையமான் திருமுடிக்காரியின் சிறு குழந்தைகளைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் யானையின் காலில் இட்டு மிதிக்கச் செய்ய முற்பட்டபோது கோவூர்கிழார் கூறியதால் அக்குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர் என்ற செய்தியும் **புறநானூற்றி**ல் இருக்கிறது.

### 3.2.4. சங்க இலக்கியத்தின் சிறப்புகள்:

**1) சங்க இலக்கியங்களை எழுதிய புலவர்கள்.**

- சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பல தரப்பட்ட தொழில் நிலையுள்ளோரும் பெண்களும் நாடாளும் மன்னரும் உண்டு.

**2) சங்க இலக்கிய பாடல்கள் அகம் (உள்) புறம் (வெளி) என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது.**

- ஒருவரின் காதல் இல்லறம் சார்ந்த தகவல்களைக் கூறுவதே அகத்திணை ஆகும். புறம் என்பது ஒருவர் செய்த கொடை அவரின் வீர செயல்கள் ஆகியவற்றைக் குறிக்கும்.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



**3) தமிழ் மொழிக்கு செம்மொழி என்ற தகுதியை பெற்றுத்தந்திருக்கின்றன.**

- செம்மொழித் தகுதியானது ஒரு மொழியின் இலக்கியப்பழமை அடிப்படையிலும் பிற பண்புத் தகுதிகளின் அடிப்படையிலும் செய்யப்படும் வகைப்பாடு ஆகும்.
- உலகில் பல ஆயிரம் மொழிகள் இருக்கின்றன. ஆனால் செம்மொழித் தகுதியினை குறிப்பிட்ட சில மொழிகளே கொண்டுள்ளன அதில் தமிழ் மொழியும் ஒன்றாகும்.

**4) தமிழர்களுக்கு பெருமை சேர்த்த இலக்கியங்கள் சங்க கால இலக்கியங்கள் ஆகும்.**

- தமிழர்களுக்கு என வரலாறு இலக்கியம் பெருமை உண்டு என உலக அரங்கில் தன்னை நிலை நிறுத்திக்கொண்டதற்கு ஆதாரமாக இருந்த நூல் சங்க இலக்கியங்களாகும்.

**5) சங்க இலக்கியத்தில் தமிழ் கலாச்சாரத்தின் அடித்தளத்தை காணலாம்.**

- பண்டைத்தமிழரது காதல் போர் வீரம் ஆட்சியமைப்பு வணிகம் போன்ற நடப்புகளை சங்க இலக்கியப் பாடல்கள் அறியத்தருகின்றன.

**6) தமிழர் வாழ்வியல் முறைகளை பறைசாற்றும் இலக்கியங்களாக சங்க கால இலக்கியங்கள் விளங்குகின்றன.**

- தொழிலை தரத்தோடு செய்ய வேண்டும் ஏமாற்றக்கூடாது என்றும் உறவினர்களுக்கு உதவ வேண்டும் எனவும் வசதி உள்ளவர்கள் பிறருக்கு தானம் செய்ய வேண்டும் எனவும் அறம் சார்ந்த வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

**7) இயற்கை இலக்கியங்களாக திகழ்கின்றன.**

- பறவைகள் விலங்குகள் பூச்சிகள் நீரில் வாழும் உயிரினங்கள் மரங்கள் செடிகள் கொடிகள் மலைகள் ஆறுகள் யாவற்றையும் இவ்விலக்கிய பாடல்களில் காணலாம்.

**8) சங்ககால இலக்கிய மொழிகள் மிகப் பழமையானவை.**

- சங்ககால இலக்கிய மொழிகள் வாசிப்பதற்கு தனியாகப் பயிற்சி எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். அது மொழியின் பழைய சொற்களஞ்சியத்தை பழைய இலக்கணத்தை பழைய சொற்கூட்டு முறையை அறிந்து கொள்வதாகவே இருக்க முடியும்.

**9) நாட்டின் வளர்ச்சிக்குக் காரணமான வணிக மேலாண்மை குறித்த சிந்தனைகளை கலை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.**

- சங்ககாலத்தில் உள்ளூர் அளவில் பண்டமாற்றுமுறை வணிகமே பெரும்பான்மையாக நடைபெற்று வந்தது என்பதனை சங்ககாலப் பாடல்கள் மூலம் அறியலாம்.
- தமிழர்கள் அயல்நாட்டினரோடு கொண்டிருந்த தொடர்பை பட்டினப்பாலை என்னும் பத்துப்பாட்டு இலக்கிய பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

**10) சங்க காலப் புலவர்களின் தனித்திறனை அறியச் சங்க இலக்கியம் உதவுகிறது.**

- சங்ககாலப் புலவர்களின் பாடல் திறமைகளையும் அவர்களது ஆற்றல்கள் பற்றியும் சங்க கால இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

## 3.3. எட்டுத்தொகை

- எட்டுத்தொகை என்பது எட்டு நூல்களின் தொகுப்பு. இது சங்க இலக்கியத்தில் ஒன்று. இதில் அடங்கிய ஒவ்வொரு நூலும் பலரால் பல காலகட்டங்களில் எழுதப்பட்டுப் பின்னர் ஒருசேரத் தொகுக்கப்பட்டது. இவற்றில் பல பாடல்களில் அவற்றை எழுதியவரது பெயர் காணப்படவில்லை.




**எட்டுத்தொகை - ஓர் பார்வை:**

- அகத்தையும் புறத்தையும் பற்றிய பாடல்களாக இந்நூல்களைப் பகுக்கின்றனர். தொழில் அளவு பாட்டு பொருள் ஆகியவற்றால் தொகுக்கப்பட்டமையால் தொகை எனப் பெயர் பெற்றது.
- இத்தொகையுள் ஏறத்தாழ 2352 பாடல்களை 700 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களில் 25 அரசர்களும் 30 பெண்பாற்புலவர்களும் உண்டு.
- ஆசிரியர் பெயர் தெரியாப் பாடல்கள் 102.
- எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடலும் கலித்தொகையும் தவிர்த்து மற்றவை ஆசிரியப்பாவால் அமைந்து சில சமயம் வஞ்சிப்பாவால் வரப்பெற்று அமைந்துள்ளன.
- 3 அடிகள் சிற்றெல்லையாகவும் 140 அடிகள் பேரெல்லையாகவும் பெற்றுள்ளன. இந்நூல்கள் கடைச் சங்க காலத்தில் இயற்றப்பட்டன என்பர்.
- தொகுக்கப்பட்ட காலம் கி.பி. 3 அல்லது 4 ஆம் நூற்றாண்டு என்றும் கருதுவர்.
- எட்டுத்தொகை நூல்களைப் பற்றிய வெண்பா பின்வருவது:

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை"**

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



**இவற்றுள்,**

- அகப்பொருள் பற்றியவை: நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு கலித்தொகை அகநானூறு.
- புறப்பொருள் பற்றியவை : புறநானூறு பதிற்றுப்பத்து.
- அகமும் புறமும் கலந்து வருவது: பரிபாடல்.
- அகப்பாடல்கள் அனைத்தும் முழுமையாகக் கிடைத்துள்ளன. புறப்பொருட் பாடல்களுள் சில அழிந்தும் சில சிதைந்தும் பாடவேறுபாடுகள் மிகுந்தும் காணப்படுகின்றன.

**எட்டுத்தொகை தொகுப்பு:**

- பரிபாடலில் எட்டு பாடல்கள் அகம் பற்றியன. இவை கடவுள் பற்றிய பாடல்களாகவும் தனிப்பாடல்களாகவும் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டவை.
- புறநானூற்றில் வஞ்சிப் பாடல்கள் சில உள்ளன. இடத்திற்கேற்ப தேவையான துறைகளுள் பாடல்களைப் பாடியுள்ளனர். புறத்திணைகளுள் வாழ்க்கைக்கு என்றும் இன்றியமையாத அறங்களையும் ஒழுக்கங்களையும் வலியுறுத்தும் பாடாண் முதலிய துறைகளைப் பாடியுள்ளனர்.
- கிடைத்த பாடல்களில் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என நான்கு திணைகட்கும் நான்கு நூறு என ஒரு வகையாகத் தொகை கொண்டனர். ஐங்குறுநூற்றுள் பாலைக்கும் ஒரு நூறு கொண்டனர்.
- பிற்காலத்தார் நான்கு திணைப் பாடல்களை ஐந்திணைக்கும் பலவகையாகப் பிரித்திருக்கக்கூடும். பாடல்களின் அடியளவுகளைக் கொண்டு பல தொகை நூல்களைத் தொகுத்துள்ளனர்.
- 3அடிச் சிறுமையும் 6அடிப் பெருமையுமுடைய பாடல்களை **<u>ஐங்குறுநூறு</u>** என்றனர். ஐந்து புலவர்கள் நூறுநூறாகப் பாடிய தனித்தன்மையையும் உடையது.
- ஐங்குறுநூறு சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்ற சேரன் ஆதரவால் கூடலூர்க்கிழார் இதனைத் தொகுத்தார்.
- 4-8 அடியெல்லையினையுடைய பாடல்களைக் குறுந்தொகை ஆக்கினர். 9-12 அடிப்பாடல்கள் நற்றிணையாக அமைந்தன. 13-31 அடிப்பாடல்கள் நெடுந்தொகையாய் அகநானூறு ஆயின.
- பொதுவாக எட்டுத்தொகை நூல்களில் பண்டைத் தமிழ் அரசர்களின் போர்த்திறங்களையும் வரையாது வழங்கும் வள்ளன்மைப் பண்பையும் மறக்குடி மகளிரின் மாண்பினையும் போர் தவிர்க்க இடைநின்ற சான்றோர்களின் இயல்புகளையும் ஐந்திணைக்குரிய அன்பொழுக்கங்களையும் புராணச் செய்திகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் அறியலாம்.

TEACHER'S CARE ACADEMY


Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

- கடையெழு வள்ளல்களைப் பற்றிய குறிப்புக்கள் புறநானூற்றிலும் அகப்பாடல்களிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன.தம்மைப் புரந்த வள்ளல்களை நன்றியுடன் குறிப்பிடும் குறிப்புகளே ஆகும்.
- கடைச்சங்கத் தொடக்கத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் கரிகாலனும் இலங்கியுள்ளனர். அக்காலத்தே ஆண்ட சேர சோழ பாண்டியர் சிற்றரசர்கள் குறுநில மன்னர் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் புறநானூற்றில் மிகுதியாகவும் அகநூல்களில் ஓரிரு வரிகளாகக் கலந்தும் காணப்படுகின்றன.
- அகத்திற்கு நானூறு என்பதற்கேற்ப புறத்திற்கும் நானூறு பாடல்களைத் தொகுத்தனர்.
- புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறத்தைப் பற்றியன. மற்றவை அகம் பற்றியன.
- சிறப்பாக ஒரு பகுதியைப் பேசினாலும் திணை நூல்களின் பாடல்களை அறம் பொருள் இன்பம் என்னும் முப்பகுதிகளைப் பற்றிய உண்மைகளை இடையிடையே தம்முள் விரவப் பெற்றுள்ளன.

## 3.4 பதிற்றுப்பத்து

- பத்து x பத்து = நூறு.
- பத்து+இன்+இற்று+பத்து = பதிற்றுப்பத்து.
- இன் இற்று என்பன சாரியைகள்.
- சேர அரசர்கள் பத்துப் பேரை பத்து புலவர்கள் தலா பத்துப் பாடல்கள் வீதம் பாடியதால் இதற்குப் பதிற்றுப்பத்து எனப்பட்டது.
- சேர அரசர்களைப் பற்றிப் மட்டுமே பாடும் எட்டுத்தொகை நூல் பதிற்றுப்பத்து.
- இந்நூல் தமிழ் மூவேந்தருள் சேர மன்னர்களின் செயல் நலன்கள் மட்டும் வரைந்து கூறுகிறது.
- இந்நூலில் **முதல் பத்துப்** பாடல்களும் **கடைசிப் பத்துப்** பாடல்களும் கிடைக்கப்பெறவில்லை. ஏனைய 80 பாடல்களே இடம்பெற்றுள்ளன.




- அடியெல்லை 8-27 அடிகள்.
- தொகுத்தோன் தொகுப்பித்தோன் தெரியவில்லை.
- பாடாண் திணை என்னும் ஒரே திணை கொண்டு இந்நூல் முழுவதும் பயின்று வரும் ஒரே நூல் பதிற்றுப்பத்து ஆகும்.
- பாடலின் சிறப்பான தொடர்கள் பாடலின் தலைப்பாக அமைந்துள்ளன. சான்று

- புண்ணுமிழ் குருதி
- மறம் வீங்கு பல்புகழ்
- பூத்த நெய்தல்
- சான்றோர் மெய்ம்மறை

- இதில் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் காணப்படுகிறது. இப்பதிகங்கள் கூறும் செய்திகள்.
  - பாடினோர் பெயர்
  - செய்யுட்களின் பெயர்
  - புலவர் பெற்ற பரிசில்
  - அரசர் ஆண்ட கால அளவு
  - மன்னரின் பெற்றோர்
  - மன்னனின் சிறப்புகள்
- இந்நூலைத் தொகுத்த ஒருவரால் இப்பதிகம் பாடப்பட்டிருக்கலாம்.
- இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றும் உள்ளது.
- இந்நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் **உ.வே. சாமிநாதையர்**.(1904)
- உரை இயற்றியவர் **சு. துரைசாமிப் பிள்ளை**
- இப்போதுள்ள பதிற்றுப்பத்தில் எட்டு **சேர மன்னர்கள்** பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.
- **இரண்டாம் பத்து** - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.
- **மூன்றாம் பத்து** – அவர் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன்
- **நான்காம் பத்து** – இமயவரம்பன் மகன் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல். அந்தாதித் தொடையால் ஆனது.
- **ஐந்தாம் பத்து** – அவன் தம்பி கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்
- **ஆறாம் பத்து** – அக்குட்டுவனுக்குப் பின்னவனான ஆடு கோட்பாட்டுச் சேரலாதன். (இவ் ஐவரும் சேர குடியில் உதியஞ்சேரல் என்பவன் வழிவந்தவர்கள்.)
- **ஏழாம் பத்து** – அந்துவஞ்சேரல் இரும்பொறையின் மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன்
- **எட்டாம் பத்து** – அவன் மகன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
- **ஒன்பதாம் பத்து** – அவனுக்குப் பின் தோன்றிய குட்டுவன் இரும்பொறையின் மகன் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை (இம்மூவரும் அந்துவஞ்சேரல் இரும்பொறை என்ற சேரக்குடியில் வந்தவர்கள்.)

TEACHER'S CARE ACADEMY

- பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பத்துப் பாடல்களின் ஈற்றிலும் ஒரு பதிகம் அமைந்துள்ளது.
- இப்பதிகத்தில் பாடப்பட்ட மன்னன் பெயர் அவர் செய்த போர் கொடைத்திறம் பாடிய புலவர் பெயர் அவர் பெற்ற பரிசுப்பொருள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.
- பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டிற்கும் அப்பாட்டில் வரும் சிறந்த தொடரால் பெயரிடப்பட்டுள்ளது.
- இதில் நான்காம் பத்தில் உள்ள பாடல்கள் மட்டும் அந்தாதி முறையில் அமைந்துள்ளது.
- பிற்காலத்தில் கல்வெட்டுகளில் இடம்பெறும் மெய்க்கீர்த்திகளின் போக்கு பதிகங்களில் காணப்படுகின்றது.
- **வழக்கில் இல்லாத சொற்கள்** மிகுதியாகப் பயின்றுள்ளன
- பல்லை உடைப்பதைப்போல் இருக்கும் இதன் கடுமையான நடையின் காரணமாக இந்நூலை **இரும்புக் கடலை** என அழைப்பர்.

| வ. எ | நூல் | ஆசிரியர் | பாடுடைத் தலைவன் |
|---|---|---|---|
| 1 | **முதல் பத்து** | கிடைக்கப் பெறவில்லை | |
| 2 | **இரண்டாம் பத்து** | குட்டூர் கண்ணனார் | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| 3 | **மூன்றாம் பத்து** | பாலைக் கௌதமனார் | பல்யானைச் செல்கெழுங் குட்டுவன் |
| 4 | **நன்காம் பத்து** | காப்பியாற்றுக் காப்பியனார் | களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் |
| 5 | **ஐந்தாம் பத்து** | பரணர் | கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் |
| 6 | **ஆறாம் பத்து** | காக்கைபாடினியார்(எ) நச்செள்ளையார் | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் |
| 7 | **ஏழாம் பத்து** | கபிலர் | நெல்வக் கடுங்கோ வாழியாதன் |
| 8 | **எட்டாம் பத்து** | அரிசில் கிழார் | கடுர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை |
| 9 | **ஒன்பதாம் பத்து** | பெருங்குன்றூர் கிழர் | குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை |
| 10 | **பத்தாம் பத்து** | கிடைக்கப் பெறவில்லை | |

- ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் அப்பாடலின் துறை வண்ணம் தூக்கு பெயர் என்ற பாட்டியல் கூறுகளைப் பழைய உரையாசிரியர் குறித்துள்ளார்.

TEACHER'S CARE ACADEMY

- பதிற்றுப்பத்துப் பாடல்களை அனைத்தும் பாடண்திணையைச் சார்ந்தவை.
- பரிபாடலைப் போலவே பதிற்றுப்பத்தும் இசையோடுப் பாடுதற்குரியது.
- **பதிற்றுப்பத்துப் புலவர்களும் பெற்ற பரிசில்களும்**
  - **குமட்டூர் கண்ணனார்**
    - உம்பர்காட்டில் 500 ஊர்கள்
    - தென்னாட்டுவருவாயுள் பாதி (சிலகாலம் வரை)
  - **பாலைக் கௌதமனார்**
    - புலவர் விருப்பப்படி பத்துப் பெருவேள்விகள்
    - செய்து மனைவியோடு விண்ணுலகு புக்கார்
  - **காப்பியாற்றுச் பாப்பியனார்**
    - நாற்பது நூறாயிரம் பொன்
    - ஆளுகையில் பாதி
  - **பரணர்**
    - உம்பல் காட்டு வருவாய்
    - மன்னன் மகன் குட்டுவன் சேரல்
  - **காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்**
    - ஒன்பது துலாம் பொன்
    - நூறாயிரம் பொற்காசுகள்
  - **கபிலர்**
    - நூறாயிரம் பொற்காசுகள்
    - நன்றா என்னும் குன்றேறி நின்று கண்ணுக்கு எட்டிய தூரம் வரை உள்ள நிலங்கள்
  - **அரிசில் கிழார்**
    - ஒன்பது நூறாயிரம் பொன்
    - அரசு கட்டில்
  - **பெருங்குன்றூர்க்கிழார்**
    - 32000 பொற்காசுகள்
    - ஊரும் மனையும் ஏறும் பிறவும்
    - பன்னூறாயிரம் அருங்கலன்கள்
- பதிற்றுப்பத்து மன்னர்கள் கி.பி.1 2 3 நூற்றாண்டில் வாழ்ந்த சேர மரபினர் ஆவர்.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118)

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- செல்வக் கடுங்கோ வாழியாதன்
- வீரத்தில் சிறந்தவன். தான் பகைவர்களைத் தோற்று ஓட செய்தான்.
- ஆரிய சார்பு மிகுந்தவனாக இருந்தான். இதனை ஏழாம் பத்தின் பதிகம் வெளிப்படுத்துகின்றது.
- தனக்கு புகழ் தரத்தக்க பெரிய கேள்விகளை செய்து முடித்தான்.
- புரோகிதர்கள் தன்னை கண்டு மயங்கும் வண்ணம் நடந்து கொண்டான். அதற்காக வேள்வி செய்வதற்கு உகந்த நெல்லான ஒத்திராநெல் மிகுந்து விளையும் ஒகந்தூர் என்னும் ஊரையே தேவதானமாக கொடுத்தான்.
- ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி

**'ஆக்கிய பொழுதின் அறத்தறை போகி**

**மாய வண்ணனை மனன் உறப்பெறற்கு அவற்கு**

**ஒத்திர நெல்லின் ஒகந்தூர் ஈந்து**

**புரோசு மயக்கி'** **(ஏழாம் பத்துப் பதிகம் 6-10)**

**ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்**

- புரோகிதர்கள் மயங்குமாறு அவர்கள் விரும்பிய வண்ணம் நடந்து பிரோசு மயக்கி என தன்னை கூறிக் கொள்வதில் செல்வக் கடுங்கோ வாழியாதன் பெருமைக் கொண்டிருந்தான்.
- ஆறாம் பத்திற்குரியவன் ஆடுகோட்பாட்டு சேரலாதன். **'ஆடுகோட்பாடு'** கொண்டவனாக இருந்ததால் **'ஆடு கோட்பாட்டுச் செரலாதன்'** என அழைக்கப்பட்டான்.
- ஆடல் கலையில் சிறந்திருந்தான். கவர்ந்து செல்லப்பட்ட தன் நாட்டு ஆடுகளை மீட்டுக் கொணர்ந்தமை என்னும் இரண்டு காரணங்களால் ஆடு கோட்பாட்டு சேரலாதன் எனப்பட்டான்.
- இம்மன்னன் பெயரில் உள்ள **'ஆடு'** என்னும் சொல் **'ஆடல்'** **'ஆடு'** என்னும் இரு பொருளுக்கும் பொருத்தமாக உள்ளது.

***'அமிழ்துபொதி துவர்வாய் அசைநடை விறலியர்***

***பாடல் சான்று நீடினை உறைதலின்'*** (பதிற்றுப்பத்து 51 21-22)

- நின்னை அறியதோர் ஐம்பொறிகளின் வழி செல்பவன் என நினைப்பார் அன்றோ? எனக் காக்கைப் பாடினியார் எடுத்துரைக்கின்றார்.
- துணங்கைக் கூத்தில் ஆடுவோருடன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் சேர்ந்து ஆடினான்.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- இதனை

  ***'முழாஇமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணைஆக***

  ***நிலைப்புவல் ஏற்றின் தலைக்கை தந்து' (பதிற்றுப்பத்து 52 15-15)***

- வளப்பமான ஆடுகளுக்கு சொந்தமானவன் சேரலாதன். இவனுடைய வருடை ஆடுகள் கவர்ந்து செல்லப்பட்டு தண்டகாருண்யம் என்னும் இடத்தில் கொண்டு போய் ஒளித்து வைக்கப்பட்டன.
- தண்டகாருண்யம் ஆரிய நாட்டில் உள்ள ஒரு நாடு. சேரலாதன் வடபுலத்தைச் சேர்ந்த தண்டகாருண்யம் வரையிலும் படையெடுத்துச் சென்றான்.
- கொண்டு செல்லப்பட்ட ஆடுகள் அனைத்தையும் மீட்டுக்கொணர் தான். தன் நாட்டில் தொண்டி பகுதியில் வைத்து அவற்றை பாதுகாத்தான் இந்த வரலாற்று நிகழ்வினை.

  ***'தண்டகாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்***

  ***தொண்டியுள் தந்து கொடுப்பித்து' (ஆறாம் பத்து பதிகம் 3-4)***

- என்னும் வரிகள் பதிவு செய்கின்றன.
- தமிழர்களிடமிருந்து தம்மை வேறுபடுத்தி தமிழரை மேலாண்மை செய்ய விளையும் இன்றைய கேரளர்கள் பண்டைய சேரர்களே கேரளர்களின் மரபு வேர்களுக்கு தாயகம் தமிழகமே என்பதற்கு ஆவணமாக திகழும் சேர இலக்கியம் பதிற்றுப்பத்து ஆகும்.
- ஔவை சு துரைசாமிப் பிள்ளை ஈழத்துப் புலவர் அருளம்பவனார் போன்றோரும் உரை எழுதியுள்ளனர்.
  - அரசி பற்றிக் குமட்டூர் கண்ணனார்

    *"ஆறிய கற்பின் அடங்கிய சாயல்*

    *ஊடினும் இனிய கூறும் இன்னகை*

    *அமிர்துபொதி துவர்வாய் அமர்ந்த நோக்கின்*

    *சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியன்"*

  - கொடை பற்றி

    *"வாராராயினும் இரவணி வேண்டித்*

    *தேரின் தந்தவர்க்கு ஆர்பதன் நல்குமே*

    *நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்"*

  - அரசியல் பற்றி

    *"சினனே காமம் கழிகண் ணோட்டம்*

    *அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை*

    *தெறுங்கடு மையொடு பிறவுமிவ் வுலகத்து*

    *அறந்தெரி திகிரிக்கு வழிநடை யாகும்"*

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

## வினாக்கள்

1) எட்டுத்தொகை நூல்களுள் அகவற்பாவால் புறப்பொருள் பற்றிக்கூறும் நூல்.

A) அகநானூறு B) புறநானூறு

C) பதிற்றுப்பத்து D) பரிபாடல்

2) பாடாண் திணை என்ற ஒரே திணைப் பாடலால் ஆனது.

A) அகநானூறு B) புறநானூறு

C) பதிற்றுப்பத்து D) பரிபாடல்

3) பத்துச் சேர வேந்தர்கள் பற்றி பத்துப்பத்துப் பாடல்களால் பத்துப் புலவர்கள் பாடிய எத்தனைப் பாடல்களைக் கொண்டது..

A)100 B) 150 C) 75 D) 95

4) பதிற்றுப்பத்தை தொகுத்தவரும் தொகுப்பித்தவரும் யார்.

A) உப்பூரிகிழார் B) நல்லாதனார்

C) பரணர் D) எவரெனத் தெரியவில்லை

5) எண்ணால் என பெயரிட்டுக் கூறப்படுகின்ற நூல்.

A) அகநானூறு B) புறநானூறு

C) பதிற்றுப்பத்து D) பரிபாடல்

6) பதிற்றுப்பத்தில் நான்காம் பத்து எந்தத் தொடையால் அமைந்துள்ளது.

A) எதுகை B) அந்தாதி C) மோனை D) உவமை

7) இதற்குப் பழைய உரை முதலில் பதிப்பித்து வெளியிட்டார்.

A) உ.வே.சா B) பரணர்

C)நக்கீரர் D)நல்லாதனார்

8) ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையும் ஈழத்துப் புலவர் அருளம்பலனாரும் சீரிய முறையில் உரையெழுதி வெளியிட்ட நூல்.

A) அகநானூறு B) புறநானூறு C) பதிற்றுப்பத்து D) பரிபாடல்

9) பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தின் ஆசிரியர்

A) உப்பூரிகிழார் B) நல்லாதனார்

C) கபிலர் D) எவரெனத் தெரியவில்லை

10) பதிற்றுப்பத்தில் இடைக்கப்படாத பத்துகள் எவை

A) முதல் பத்து , பத்தாம் பத்து B) முதல் பத்து, ஆறாம் பத்து

C) முதல் பத்து, ஏழாம் பத்து D) முதல் பத்த ஐந்தாம் பத்து

**TEACHER'S CARE ACADEMY**
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359




# UNIT-4

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறம் & தனிப்பாடல் திரட்டு நூல்களில் அறம்.

*Your Success is Our Goal....*

# அலகு - 4


| வ.எ. | பொருளடக்கம் | ப.எ. |
|---|---|---|
| 4.1. | அறஇலக்கியம் | 1 |
| 4.2. | திருக்குறள் | 6 |
| 4.3. | நாலடியார் | 20 |
| 4.4. | நான்மணிக்கடிகை | 27 |
| 4.5. | திரிகடுகம் | 31 |
| 4.6. | இன்னா நாற்பது | 38 |
| 4.7. | இனியவை நாற்பது | 43 |
| 4.8. | ஆசாரக்கோவை | 48 |
| 4.9. | பழமொழி நானூறு | 54 |
| 4.10. | சிறுபஞ்சமூலம் | 59 |
| 4.11. | ஏலாதி | 65 |
| 4.12. | முதுமொழிக்காஞ்சி | 70 |
| 4.13. | ஔவையார் | 76 |
| 4.14. | ஆத்திசூடி | 78 |
| 4.15. | கொன்றை வேந்தன் | 84 |
| 4.16. | மூதுரை | 90 |
| 4.17. | நல்வழி | 93 |
| 4.18. | நீதிநெறி விளக்கம் | 96 |
| 4.19. | பாரதியார் | 99 |
| 4.20. | புதிய ஆத்திசூடி | 101 |
| 4.21. | கூடுதல் வினாக்கள் | 107 |


www.Padasalai.Net

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3:266-C, Advaitha Ashram Road (Opp to New Bus Stand), Salem-636 004.
Trichy: 76399 67359 Salem: 93602 68118

# UG TRB – TAMIL – 2023-24

## அலகு - 4

## அற இலக்கியம்

### 4.1. அறஇலக்கியம்:

- மனித சமுதாயத்தில் நாகரீகம் என்று உருவானதோ அன்றே அறம் குறித்த சிந்தனையும் தோற்றம் பெற்று விட்டது, அது முதற்கொண்டு சமூகத்தில் எண்ணற்ற அறங்கள் சான்றோர்களால் உரைக்கப்பட்டு நடைமுறை வாழ்க்கையில் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன.
- இத்தகைய அறக்கருத்துக்கள் புலவர்களாலும் அரவணர்களாலும் தாங்கள் இயற்றிய இலக்கியங்களிலும் அறநூல்களிலும் காலம் தோறும் எடுத்துரைக்க பெற்று வந்துள்ளன.
- அந்த வகையில் தமிழ் இலக்கியத்தின் மிகத் தொன்மையான இலக்கியமான பாட்டும் தொகையும் என குறிப்பிடப்படும் சங்க இலக்கிய தொகை நூல்களிலேயே ஏராளமான அறக்கருத்துக்கள் புலவர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- எனினும் கிபி மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் அறம் வலியுறுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட நீதி நூல்கள் பல பெருகின இத்தகைய காலத்தையே நீதிநூல் காலம் எனக் குறிப்பிடுவர்.
- இக்காலகட்டத்தில் தோற்றம் பெற்ற 18 நூல்களை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் சங்கம் மருவிய கால நூல்கள் என்றும் குறிப்பிடுவர்.
- காதலையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண்ட திணை இலக்கிய மரபில் சமூகத்தில் நேர்ந்த மாற்றத்தால் பாடுபொருள்களிலும் யாப்பு அடிப்படையிலும் ஒரு பெரும் மாற்றம் ஏற்படக் காரணமாக அமைந்தது.
- ஆனால் இலக்கிய மரபு திடுமென மாறி விடுவதில்லை அதன் நீட்சி இருக்கவே செய்யும் அந்த அடிப்படையில் சங்க இலக்கியங்களுக்குப் பிறகு நீதி இலக்கியங்கள்

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

பெருமளவு தோற்றம் பெற்றாலும் பழைய திணை மரபை முற்றிலும் புறக்கணிக்காத இலக்கியப் போக்கு காணப்பட்டதை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஐந்திணை என்பது ஐந்திணை எழுபது, திணை மாலை நூற்றைம்பது, கார் நாற்பது, களவழி நாற்பது போன்ற அகப்புற இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

- தமிழ்ச் சிந்தனைக்கும் இந்தியப் பொதுச்சிந்தனைக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. இந்தியச் சிந்தனை மரபின்படி அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கும் அடையவேண்டியவை.
- தமிழ்ச் சிந்தனை மரபில் தொல்காப்பியர் காலந்தொட்டே அறம் பொருள் இன்பம் என்ற கருத்து மட்டுமே உண்டு. வீடு பற்றிய கருத்து கிடையாது.
- அறம் பொருள் இன்பம் என்று நிலைபெற்ற மூன்றினுள், நடுவணது (நடுவிலுள்ளது- அதாவது பொருள்) எய்த இருதலையும் (அதாவது அறம், இன்பம் ஆகிய இரண்டும்) எய்தும் என்பது நாலடியார். ஆயினும் பிற இந்திய மொழிகள் எல்லாவற்றையும்விட, தமிழில்தான் அறநூல்கள் அதிகமாக இருக்கின்றன. இதனை ஜி. யூ. போப் போன்ற பிறநாட்டு அறிஞர்களும் கண்டறிந்து பாராட்டியுள்ளனர்.
- உண்மையில், தமிழ் இலக்கியம் முழுவதுமே அற இலக்கியம்தான். சங்க இலக்கியம், காப்பியங்கள், அறநூல்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள் என்றெல்லாம் பல பிரிவுகள் இருந்தாலும், அவை யாவற்றின் அடிச்சரடும் அறம் என்பதே.
- சான்றாக, ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழின் சிறப்பை எடுத்துக்காட்டாகக் கபிலர் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்: சமஸ்கிருத மரபில் எண்வகை மணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் யாழோர் மணமாகிய காந்தர்வத்தை ஒத்தது தமிழர்களின் களவு. ஆனால் இரண்டிற்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு உள்ளது. சமஸ்கிருத மணமாகிய காந்தர்வத்தில், கற்பு வாழ்க்கை என்பது இல்லை. ஆசையிருக்கும் வரை சிலநாள் கூடியிருந்து பிரிந்துவிடும் வாழ்க்கை அது. அங்கே திருமணம், கற்பு வாழ்க்கை என்பது இல்லை. ஆனால் தமிழின் களவு மணமோ முறைப்படி, கற்பாகிய திருமண வாழ்க்கையிலே நிறைவெய்த வேண்டும் என்கிறார். இதனை உணர்த்துவதற்காகவே குறிஞ்சிப்பாட்டு என்ற அற்புதமான இலக்கியம் அவரால் படைக்கப்பட்டது. எனவே சங்க இலக்கியங்களும் அறம் உணர்த்துவனவே என்பதை நம்மால் காணமுடிகிறது.

**அறம் சொல் விளக்கம்:**

- 'அறு' என்ற வினைச்சொல் அடிப்படையாகப் பிறந்ததே **'அறம்'** என்னும் சொல், இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, தூண்டு, வேறுபடுத்து என்ற பல்வகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118)
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- இத்தகைய சொல் ஆராய்ச்சி அடிப்படையில் **அறம்** என்னும் சொல்லிற்கு பின்வருமாறு விளக்கம் கூறலாம்.
- மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கம் முறைகளின் தொகுதியின் முழு நிறை வடிவமே அறம் என்று கூறுவர்.
- பிறவி தோறும் மனிதனைப் பற்றி கொண்டுவரும் தீவினையை அருத்தறிவதே அறம் என்ற ஆன்மீக விளக்கமும் இதற்கு தரப்படுவதுண்டு.
- அறம் பற்றிய கருத்துக்கள் நம் முன்னோர் அறம் என்னும் சொல்லிற்கு தந்துள்ள விளக்கத்தோடு **(Ethics) எதிக்ஸ்** என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு தரப்படும் பொருள் விளக்கம் மிகவும் பொருத்தம் உடையதாக உள்ளது.
- நல்ல அல்லது தீய செயல்கள் மூலம் தானே வெளிப்படுத்தப்படும் மக்களுடைய நடத்தையைப் பற்றிய ஆய்வின் கலையே எத்திக்ஸ் என்பதாகும் இதை தமிழில் அறிவியல் எனலாம் (Ethics) என்னும் சொல் **கிரேக்க மொழி** சொல்லாகும்.
- முதல் முதலில் இச்சொல் பழகிப்போன நடத்தை வழக்கம் மரபு என்னும் பொருள்களையே உணர்த்தி வந்தது பின்னர் நடத்தை என்னும் பொருளே போற்றப்பட்டது.
- ஒழுக்கத்தை குறிப்பிடும் **Moral** என்னும் ஆங்கிலச் சொல்லும் பழக்க வழக்கம் என்னும் பொருளையே குறித்தது. இதனால் மனித நடத்தை குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் வாழும் மக்கள் விளக்கமாகக் கொள்ளும் முடிவையே ஒழுக்கமாக மராட்டி கொண்டனர் என்பது புலனாகிறது.
- பெரும்பாலானோரால் பின்பற்றப்பட்ட பொழுது ஒழுக்கம் எனும் பண்பாக மலர்ந்து வாழ்க்கை நெறியாக மாண்புற்றது எனலாம்.
- அறத்தின் அடிப்படை செயலுக்கு தளமாக இருப்பதே எண்ணமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால்தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமைய முடியும்.
- எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும். மனத்தின் வாசனை போக்குவதற்கு முயலுவதே அறம் ஆகும்.
- மனம் என்பதுமாசு, பொறாமை. பேராசை. வெகுளி. கடுஞ்சொல் ஆகியவற்றை மனம் மாசுகள் ஆகும். அவை இல்லாமல் இருப்பதே அறம் இதையே திருவள்ளுவர்

  **'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**

  **ஆகுல நீர பிற' (குறள்-34)**

  (மாசு-குற்றம், இலன்-இல்லாதவன், ஆகுலநீர பிற-ஆறா வரைக்கும் தன்மை உடையன) என்றும்

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118)
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com
TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

**'அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்ற தறம்' (குறல்-35)**

(அழுக்காறு-பொறாமை, அவா-பேராசை, வெகுளி-கோபம், இன்னாச்சொல்-கடும்சொல், இழுக்கா-நீக்கி) என்று கூறுகிறார்

- இவ் விளக்கங்களில் அடிப்படையில் பார்க்கும் பொழுது அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்தே ஒன்று என்று கொள்ளலாம்.
- அறநூலுக்கு உயிராக இருப்பது கருத்து, அறக்கருத்துகளையும் இலக்கியச் சுவை என்னும் இனிப்பிலே கலந்து கொடுக்கப்படும் பொழுது அவை அறஇலக்கியங்கள் ஆகின்றன.

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்:**

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பது குறைந்த அடிகளை உடைய பாடல்களால் மிகப் பெரும் செய்திகளை கூறக்கூடிய 18 நூல்களின் தொகுப்பே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்படுகின்றது.
- கி.பி 3-6 நூற்றாண்டு வரை மனிதர்கள் வாழ்ந்த காலம் சங்கம் மருவிய காலம் என்று அழைக்கப்படுகின்றது. இந்த காலகட்டத்தில் தான் **18வகையான நூல்கள்** இயற்றப்பட்டது.
- அதாவது அறம் பொருள் இன்பம் எனும் மூன்று பெரும் பொருள்களையும் நான்கு அடிகளுக்கு மிகாமல் எடுத்து உரைத்ததால் இது இருண்ட கால இலக்கியம் எனவும் அழைக்கப்படுகின்றது.
- இதனை நீதிநூல்கள் அல்லது அற நூல்கள் அல்லது இருண்ட கால இலக்கியங்கள் எனவும் அழைப்பர்.
- பதினெண்கீழ்க்கணக்கு என்ற வழக்கை கொண்டுவந்தவர்கள் = மயிலைநாதர், பேராசிரியர்
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் இலக்கணம் கூறுவது = பன்னிரு பாட்டியல

**"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி**
**அறம்பொருள் இன்பம் அடுக்கி யவ்வத்**
**திறம்பட உரைப்பது கீழ்க் கணக்காகும்"** – பன்னிரு பாட்டியல்

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இன்னின்ன என்பதை கூறும் பாட்டு.

**"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்**
**பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்**
**இந்நிலைய காஞ்சியோ டேலாதி என்பவே**
**கைந்நிலைய வாங் கீழ்க் கணக்கு"**

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- நாலடியார்
- நாண்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- திரிகடுகம்
- ஏலாதி
- முதுமொழிக்காஞ்சி
- திருக்குறள்
- ஆசாரக்கோவை
- பழமொழி நானூறு
- சிருபஞ்ச மூலம்
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- கைந்நிலை
- கார்நாற்பது
- களவழி நாற்பது
- இன்னிலை

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் அறநூல்கள் = 11 (நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முப்பால், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி)
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அக நூல்கள் = 6 (கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை)
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறநூல் = 1 (களவழி நாற்பது)
- நீதி நூல்களுள் சிறியது = இன்னா நாற்பது

**அறநூல்கள்:**

- ஒரு மனிதன் சமூகத்தில் நன்னடத்தை ஒழுக்கம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த நெறிகள் ஆகிவற்றை எவ்வாறு பின்பற்றி நடக்க வேண்டும் என்பது தொடர்பான விஷயங்களை கூறுவதால் இது **அறநூல்** என்று அழைக்கப்படுகிறது.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள்:

1. நாலடியார் – சமண முனிவர்கள் – 1+400
2. நாண்மணிக்கடிகை – விளம்பி நாகனார் – 106
3. இன்னா நாற்பது – கபிலர் – 1+40
4. இனியவை நாற்பது – பூதஞ்சேந்தனார் – 1+40
5. திரிகடுகம் – நல்லாதனார் – 100
6. ஏலாதி – கணிமேதாவியார் – 80
7. முதுமொழிக்காஞ்சி – கூடலூர் கிழார் – 100
8. திருக்குறள் – திருவள்ளுவர் – 1330
9. ஆசாரக்கோவை – பெருவாயின் முள்ளியார் – 80
10. பழமொழி நானூறு – முன்னுரை அரையனார் – 1+400
11. சிருபஞ்ச மூலம் – காரியாசனார் – 97

- இந்த அற நூல்களில் சிறிய அளவு பாடல்கள் கொண்ட நூல் இன்னா நாற்பது.மேலும் பாடல்கள் அதிக பாடல்கள் கொண்டது திருக்குறள் ஆகும்.

## 4.2. திருக்குறள்:

- திருக்குறள் – திரு + குறள்
- இரண்டு அடிகளாலான குறள் வெண்பாக்களால் ஆனது.
- திருக்குறளை திருவள்ளுவர் எழுதினார்.
- திருக்குறள் முப்பால்களை கொண்டது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகியவை ஆகும்.
- திருக்குறள் 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டது.
- திருக்குறளில் பத்து அதிகாரப் பெயர்கள் உடைமை என்னும் சொல்லில் அமைத்துள்ளன. திருக்குறளுக்கும் ஏழு என்னும் எண்ணிற்கும் பெரிதும் தொடர்புள்ளது.
- உலக மொழியில் உள்ள அறநூல்களில் முதன்மையானது திருக்குறள். இது பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- உலக மொழிகளில் பல மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள். நூற்றெழு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- ‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’ இதில் நாலு என்பது நாலடியாரையும், இரண்டு என்பது திருக்குறளின் அருமையையும் விளக்குகிறது.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- மலையச்சுவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812-இல் திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.

**பெயர்க்காரணம்:**

- திரு + குறள் = திருக்குறள்
- குறுகிய அடிகளை கொண்டதால் இப்பெயர் பெற்றது.
- "திருக் குறள்" என்பது "அடையடுத்த கருவியாகு பெயர்"
- திருக்குறளின் சிறப்பு கூறுபவை

| | |
|---|---|
| திருக்குறளின் முன்னோடி எனப்படுவது | புறநானூறு |
| திருக்குறளின் விளக்கம் எனப்படுவது | நாலடியார்(சமண முனிவர்கள்) |
| திருக்குறளின் பெருமையை கூறுவது | திருவள்ளுவ மாலை |
| திருக்குறளின் சாரம் எனப்படுவது | நீதிநெறிவிளக்கம் (குமரகுருபரர்) |
| திருக்குறளின் ஒழிபு எனப்படுவது | திருவருட்பயன் (உமாபதி சிவம்) |

- திருக்குறளுக்கு உரை எழுதியவர்களின் எண்ணிக்கை - 18
- தருமர்,மணக்குடவர், தாமத்தர், நச்சர்,
- பரிதி, பரிமேலழகர், – திருமலையர்,
- மல்லர், பரிப்பெருமாள், கலிங்கர் வள்ளுவர்கு

  எல்லையுரை செய்தார் இவர்
- திருக்குறளுக்கு உரை எழுதியவருள் காலத்தால் முந்தியவர் = தருமர்
- திருக்குறளுக்கு உரை எழுதியவருள் காலத்தால் பிந்தியவர் = பரிமேலழகர்
- மு.வ, நாமக்கல் கவிஞர், புலவர் குழந்தை ஆகியோரும் உரை எழுதியுள்ளனர்.

**பொதுவான குறிப்புகள்:**

- திருக் குறள் "அ"கரத்தில் தொடங்கி "ன"கரத்தில் முடிகிறது.
- சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா போன்ற பல நூல்கள் திருக்குறளின் பெருமையை கூறுகின்றன.
- திருக்குறளை முதலில் பதிப்பித்தவர் = மலயத்துவான் மகன் ஞானப்பிரகாசம் முதலில் பதிப்பித்து தஞ்சையில் வெளியிட்டார்.
- தை 2ம் நாள் = திருவள்ளுவர் தினம்
- தமிழிற்கு "கதி" எனப்படுவது = க – கம்பராமாயணம், தி – திருக் குறள்

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118)
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- திருக்குறளில் 12000 சொற்கள் உள்ளன. இவற்றில் வட சொற்கள் ஐம்பதிற்கும் குறைவு. ஏறத்தாழ அவை 0.4% ஆகும்.

### திருக்குறள் மொழிப்பெயர்ப்பு:

- இலத்தின் = வீரமாமுனிவர்
- ஜெர்மன் = கிரால்
- ஆங்கிலம் = ஜி.யு.போப், வ.வே.சு.ஐயர், இராஜாஜி
- பிரெஞ்ச் = ஏரியல்
- வடமொழி =அப்பாதீட்சிதர்
- இந்தி = பி.டி.ஜெயின்
- தெலுங்கு = வைத்தியநாத பிள்ளை

### திருக்குறள் சிறப்புகள்

**- பாரதியார் வள்ளுவரை பாராட்டுதல்:**

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகல் கொண்ட தமிழ்நாடு"

- திரு.வி.க கூற்று = திருக்குறள் ஒரு வகுப்பாற்கோ, ஒரு மதத்தாற்கோ, ஒரு நிறத்தாற்கோ, ஒரு மொழியார்க்கோ, ஒரு நாட்டாற்கோ உரியதன்று; அது மன்பதைக்கு உலகுக்குப் பொது.
- கி.ஆ.பெ.விஸ்வநாதம் கூற்று = திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்கு தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஓர் நூல் தோன்றியிராவிட்டால் தமிழ்மொழி உலகிற்கு தெரிந்திருக்காது.

### சிறப்புப் பெயர்கள்:

1) உலகப் பொதுமறை
2) முப்பால்
3) வாயுறை வாழ்த்து
4) பொதுமறை
5) பொய்யாமொழி
6) தெய்வநூல்
7) தமிழ்மறை
8) முதுமொழி
9) உத்தரவேதம்
10) திருவள்ளுவம்

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- திருவள்ளுவ மாலை என்பது திருக்குறளின் பெருமை குறித்துச் சான்றோர் பலர் பாடிய பாக்களின் தொகுப்பாகும்.
- திருக்குறளுக்கு சிறந்த உரை எழுதியவர் பரிமேலழகர் (மேலும் பலர் எழுதியுள்ளனர்)
- அறத்துப்பாலில் – 38 அதிகாரங்கள், பொருட்பாலில் – 70 அதிகாரங்கள், இன்பத்துப்பாலில் – 25 அதிகாரங்கள் உள்ளன.
- விக்டோரியா மகாராணி, காலையில் கண்விழித்ததும் முதலில் படித்த நூல் திருக்குறள்.
- திருக்குறளுக்கு உரைசெய்த பதின்மர்: தருமர், தாமத்தர், பரிதி, திருமலையர், பரிப்பெருமாள், மணக்குதவர், நச்சர், பரிமேலழகர், மல்லர், காளிங்கர்.
- திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர் – வீரமா முனிவர். ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

**திருவள்ளுவர்:**

- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவரது காலம் கி.மு.31 என்று கூறுவர். இதை தொடக்கமாகக் கொண்டே திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.
- இவரது ஊர் பெற்றோர் குறித்த முழுமையான செய்திகள் கிடைக்கவில்லை. இவர் சமண மதத்தைச் சார்ந்தவர் என்பது உறுதி.



- திருவள்ளுவர் செஞ்ஞாப்போதார், தெய்வப் புலவர், நாயனார், முதற்பாவலர், நான்முகனார், மாதானுபாங்கி, பெருநாவலர், பொய்யில் புலவர் என பல சிறப்புப் பெயர்களால் போற்றப்படுகிறார்.
- 31 – 2043 (கி.பி. 2013ஐ திருவள்ளுவர் ஆண்டு 2044 என்று கூறுவோம்.)+கிறிஸ்து ஆண்டு (கி.பி.) 31 – திருவள்ளுவர் ஆண்டு. எ.கா: 2013
- திருக்குறளின் பெருமையை உணர்ந்த வீரமாமுனிவர் இலத்தீனிலும், ஜி.யு.போப் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தனர்.
- இந்நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- திருவள்ளுவமாலை என்னும் நூல் இதன் பெருமைக்கும்ää சிறப்புக்கம் சான்றாக திகழ்கிறது.
- உருசிய நாட்டில் அணு துளைக்காத கிhரம்ளின் மாளிகையில் உள் சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் திருக்குறளும் இடம் பெற்றுள்ளது.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118)
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

- இங்கிலாந்து நாட்டுக் காட்சிச் சாலையில் திருக்குறள் விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது. ‘வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே’ என்றும் ‘இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே’ என்றும் பாவேந்தர் பாரதிதாசன் திருக்குறளைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.
- மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812ல் திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.
- திருக்குறளுக்கும் ஏழு என்னும் எண்ணிற்கும் பெரிதும் தொடர்புள்ளது.
- திருக்குறள் ஏழு சீர்களால் அமைந்த வெண்பாக்களைக் கொண்டது.
- ஏழு என்னும் எண்ணுப்பெயர் எட்டுக் குறட்பாக்களில் இடம் பெற்றுள்ளது.
- அதிகாரங்கள் 133 இதன் கூட்டுத்தொகை ஏழு.
- மொத்த குறட்பாக்கள் இதன் கூட்டுத் தொகையும் ஏழு.

**முக்கிய அடிகள்:**

- அறத்தான் வருவதே இன்பம்
- மனத்துக்கண் மாசிலன் ஆகுதல் அறம்
- திருவேறு தெள்ளியராதலும் வேறு
- பெண்ணிற் பெருந்தக்க யாவுள்
- ஊழிற் பெருவழி யாவுள
- முயற்சி திருவினை யாக்கும்
- இடுக்கண் வருங்கால் நகுக
- கனியிருப்பக் காய் கவர்ந்தற்று
- அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
- ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்

**திருவள்ளுவமாலை:**

**ஆசிரியர் குறிப்பு:**

- பெயர் – கபிலர்
- காலம் – கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவரென்றும்ää சங்க காலத்திற்கு பின் வாழ்ந்தவர் என்றும் கூறுவர்.

**நூல் குறிப்பு:**

- திருக்குறளின் சிறப்பினை உணர்த்த திருவள்ளுவமாலை என்னும் நூல் எழுந்தது.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- இந்நூலில் ஐம்பத்தைந்து பாடல்கள் உள்ளன.
- ஐம்பத்துமூன்று புலவர்கள் பாடியுள்ளனர்.
- திருவள்ளுவ மாலை "திணையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்டபனையளவு காட்டும் படித்தால்; – மனையளகு வள்ளைக்(கு) உறங்கும் வளநாட! வள்ளுவனார் வெள்ளைக் குறட்பா விரி".கபிலர்

**திருக்குறளில் அணி இலக்கணக் கூறுகள்:**

**அணி – விளக்கம்:**

- அணி என்பதைப் பொதுவாக அழகுக்கு அழகுக் கூட்டுவது என்று குறிப்பிடலாம். இதனை,

**படையினது உறுப்பும் ஒப்பனையும் அழகும்**

**பெருமையும் கலனும் அன்பும் அணி எனல் (3050)**

- என்று பிங்கல நிகண்டும்,

**அணி பெருமை ஒழுங்கு அழகு ஆபரணம் முனை எல்லை**

**அலங்காரம் மாலை அச்சின் அணி படை வகுப்பின் (286)**

- என்று நாநார்த்த தீபிகையும் குறிப்பிடுகின்றன.

- பவனந்தி முனிவர்,

**மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்**

**ஆடமைத் தோள் நல்லார்க்கு அணியும் போல் (நன்னூல் 45)**

- என்று சுட்டுகிறார்.

**தொல்காப்பியத்தில் அணி:**

- ஒல்காப் புகழ் தொல்காப்பியர் உவமை அணியை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அவர் உள்ளுறை உவமம், ஏனை உவமம் என்று இரண்டனைக் குறிப்பிட்டுள்ளார். பின்னர் தோன்றிய இலக்கண நூல்கள் அணிகளை 28 (திவாகரம்), 35 (தண்டியலங்காரம்), 64 (மாறனலங்காரம்), 100 (சந்திரலோகம்), 102 (அணியிலக்கணம்), 120 (குவலயானந்தம்) என்று பலவாறாகக் கூறுகின்றன.

**திருக்குறளில் அணிகள்:**

- திருக்குறளில் இடம் பெற்றுள்ள அணிகளை உவமையணி, சொல்லணி, பொருளணி, சுவையணி என்று விளக்கிக் காட்டுகிறார் முனைவர் இ.சுந்தரமூர்த்தி (திருக்குறள் அணிநலம், சென்னைப் பல்கலைக்கழகம், 1971). பிற்காலத்து அணி இலக்கண

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118)
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

ஆசிரியர்கள் கூறும் வகையெல்லாம் திருக்குறளில் இடம் பெற்றுள்ள அணிகளை விளக்கிக் காண இயலுமாயினும் மேற்கண்ட பாகுபாட்டின் அடிப்படையில் திருக்குறள் அணிகளைக் காணலாம்.

**உவமையணி:**

(4) ரங்கோன்ராதா - (d) தோப்பில் முகமது மீரான்

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



(A) 1 - c: 2 - d : 3 - a :4 - b

(B) 1 - d: 2 - b: 3 - c: 4 -a

(C) 1 -b :2 - d: 3 - a : 4 - c

(D) 1- b : 2 - d: 3 - c: 4 - a

6. வரலாற்றுப் புதினத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்

(A) கல்கி (B) விக்கிரமன்

(C) சாண்டில்யன் (D) மு. மேத்தா

7. தவறானது எது

கல்கி எழுதிய புகழ்பெற்ற வரலாற்றுப் புதினங்கள்

(A) பொன்னியின் செல்வன் (B) பார்த்திபன் கனவு

(C) மணிபல்லவம் (D) சிவகாமியின் சபதம்

8. வேறுபட்ட புதினம் எது?

(A) அறுவடை (B) மண்ணாசை

(C) தேரிமணல் (D) போரும் அமைதியும்

9. மானாவரி மனிதர்கள் நூலினை எழுதியவர்

(A) தோப்பில் முகமது மீரா (B) சூரியகாந்தன்

(C) பாமா (D) ஆர். சண்முகமசுந்தரம்

10 எது பெருமாள் முருகன் எழுதிய நாவல்

(A) ஏறுவெயில் (B) தேரிமணல்

(C) சாயத்திரை (D) தூங்கச்சம்பா

11. காண்டேகரின் மராத்திய நாவல்களை மொழிபெயர்த்தவர்

(A) பாரதியார் (B) புதுமைபித்தன்

(C) கா.ஸ்ரீ.ஸ்ரீ. (D) மறைமலையடிகள்

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

12. நெஞ்சக்கனல் நாவலை எழுதியவர்

(A) வைரமுத்து (B) நாஞ்சில்நாடன்

(C) நா. பார்த்தசாரதி (D) மு.வ.

13. படைபிற்கு அடிப்படையாக அமைவது எது?

(A) கதாபாத்திரம் (B) உரையாடல்

(C) மையக்கரு (D) மொழிநடை

14 சரியானதை எழுதுக

(A) நெகழ்ச்சிக் கதைப்பின்னலில் பாத்திரப்படைப்புகள் இன்றியமையாததாக இருக்கும்

(B) செறிவுகதைப்பின்னலில் ஒரு நிகழ்;ச்சியின் முடிவானது அடுத்த நிகழ்ச்சிக்குத் தொடக்கமாக காரணமாக அமையும்

(C) இரண்டும் சரியானது

(D) முதல் சரி இரண்டாவது தவறு

14. எழுத்தாளர் சு.சமுத்திரம் அவர்களுக்கு எந்த ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது

(A) 1994 (B) 1990

(C) 1986 (D) 1988

16 தியாகராஜன் என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் யார்?

(A) அசோகமித்திரன் (B) ஜெயகாந்தன்

(C) ஜெயமோகன் (D) அகிலன்

17. நாவலுக்கான 2014 ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது?

(A) சில நேரங்களில் சில மனிதர்கள் (B) சூல்

(C) அஞ்ஞாடி (D) வானம் வசப்படும்

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# UG TRB
# தமிழ்
## 2023-2024



UNIT-8 (Volume-2)

இக்கால இலக்கியங்கள்
& மொழிபெயர்ப்பும் திறனாய்வும்.

*Your Success is Our Goal....*

Website: www.tcaexamguide.com Mobile App : tcaexamguide
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy : 76399 67359** **Salem : 93602 68118**


## UG TRB - 2022 - 2023

## தமிழ்

## அலகு - 8 (vol - 2)

## (நாடகம், மொழிபெயர்ப்பு, ஒப்பிலக்கியமும் திறனாய்வும்)


| வ.எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| **8. 4.** | **நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்** | **1** |
| 8.4.1. | நாடகத்தோற்றம் | 1 |
| | 8.4.1.2. தமிழ் நாடகத் தோற்றம் | |
| | 8.1.2.1. நாடக நூல்கள் | |
| | 8.1.2.2. அரங்கம் | |
| | 8.1.2.3. இன்னியங்கள் | |
| **8.4.2.** | **நாடகக் கூறுகள் - வரலாற்றுக் கண்ணோட்டம்** | **4** |
| | 8.4.2.1. அகத்தியர் காலத்தில் நாடகம் | |
| | 8.4.2.2 .தொல்காப்பியர் காலத்தில் நாடகம் | |
| | 8.4.2.3. சங்ககாலத்தில் நாடகம் | |
| | 8.4.2.4. சங்கம் மருவிய கால நாடகம் | |
| | 8.4.2.5. சிலப்பதிகாரத்தில் நாடகம் | |
| | 8.4.2.6. பல்லவர் காலத்தில் நாடகம் | |
| | 8.4.2.7. இலக்கிய வடிவ நாடகங்கள் | |
| **8.4.3.** | **நாடக வகைகள்** | **10** |
| | 8.4.3.1. தெருகூத்து | |
| | 8.4.3.2. குழந்தை நாடகம் | |
| | 8.4.3.3. வானொலி நாடகங்கள் | |
| | 8.4.3.4. மொழிபெயர்ப்பு நாடகங்கள் | |
| | 8.4.3.5. மேடை நாடகம் | |
| | 8.4.3.6. அமெச்சூர் நாடகம் | |

TEACHER'S CARE ACADEMY

| | | |
|---|---|---|
| | 8.4.3.7. தேசிய நாடகம் | |
| | 8.4.3.8. ஓரங்க நாடகம் | |
| | 8.4.3.9. செய்யுள் நாடகம் | |
| 8.4.4. | **நாடக புதுமையாளர்கள்** | 20 |
| | 8.4.4.1. பரிதிமாற்கலைஞர் | |
| | 8.4.4.2. சங்கரதாஸ் சுவாமிகள் | |
| | 8.4.4.3. நவாப் கோவிந்தசாமிராவ் | |
| | 8.4.4.4. தெ. பொ. கிருஷ்ணசாமி பாவலர் | |
| | 8.4.4.5. விசுவநாத தாஸ் | |
| | 8.4.4.6. எம். கந்தசாமி முதலியார் | |
| | 8.4.4.7. சி. கன்னையா நாயுடு | |
| | 8.4.4.8. எஸ். ஜி. கிட்டப்பா | |
| | 8.4.4.9. பம்பல் சம்பந்த முதலியார் | |
| | 8.4.4.10. என். எஸ். கிருஷ்ணன் | |
| | 8.4.4.11. சி. என். அண்ணாதுரை | |
| | 8.4.4.12. டி.கே. சண்முகம் | |
| | 8.4.4.13. நவாப் இராசமாணிக்கம் | |
| | 8.4.4.14. எம். ஆர். இராதா | |
| | 8.4.4.15. அருணாசலம் செட்டியார் | |
| | 8.4.4.16. இந்திரா பார்த்தசாரதி | |
| | 8.4.4.17. கோமல் சுவாமிநாதன் | |
| | 8.4.4.18. ந. முத்துசாமி | |
| | 8.4.4.19. சே. இராமானுஜம் | |
| | 8.4.4.20. பிரளயன் | |
| | 8.4.4.21. ஞாநி | |
| | 8.4.4.22. ஆர். எஸ். மனோகரன் | |
| | 8.4.4.23. இன்குலாப் | |
| | 8.4.4.24. மு. இராமசாமி | |
| 8.5. | **மொழிபெயர்ப்பியல்** | 30 |
| 8.5.1. | **மொழிபெயர்ப்பின் அடிப்படைகள்** | 30 |
| | 8.5.1.1.மொழிபெயர்ப்புக் குறித்து அறிஞர்களின் கருத்துக்கள் | |
| | 8.5.1.2.மொழிபெயர்ப்பின் இயல்புகள் | |
| | 8.5.1.3.மொழிபெயர்ப்பு வகைகள் | |

www.Padasalai.Net www.Trbtnpsc.Com




| | | |
|---|---|---|
| **8.5.2.** | **மொழிபெயர்ப்பாளரின் தகுதிகள்** | **36** |
| | 8.5.2.1.மொழிபெயர்ப்பாளர் நோக்கம் | |
| | 8.5.2.2.மொழிபெயர்ப்பாளரின் தனித்தன்மைகள் | |
| | 8.5.2.3. நிகரன்களைத் தேர்ந்தெடுத்தல் | |
| **8.5.3.** | **மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்** | **39** |
| | 8.5.3.1.சொல்லும் பொருளும் | |
| | 8.5.3.1.பழமொழிகள் | |
| | 8.5.3.2.மரபுச்சொற்கள் | |
| | 8.5.3.3.வழக்குச் சொற்கள் | |
| | 8.5.3.4.பொருள்கோள் | |
| | 8.5.3.5.பொருள் கொள்ளுகின்ற நிலைகள் | |
| | 8.5.3.6.விடுகதைகள் | |
| | 8.5.3.7.மெய்ப்பாடு | |
| | 8.5.3.8.சிலேடை | |
| | 8.5.3.9.தொடைநயம் | |
| | 8.5.3.10.உறவுமுறைச் சொற்கள் | |
| | 8.5.3.11.பெயர்ச்சொல் | |
| | 8.5.3.12.இரட்டைக்கிளவி | |
| | 8.5.3.13.அடுக்குத்தொடர் | |
| | 8.5.3.14. மடக்கு | |
| | 8.5.3.15.குறிப்புப்பொருள் | |
| | 8.5.3.16.ஆகுபெயர் | |
| | 8.5.3.17.சித்திரக்கவி | |
| | 8.5.3.18.நிரோட்டகம் | |
| | 8.5.3.19.பிரிவின் பெயர்கள் | |
| | 8.5.3.20. கலைச்சொற்கள் | |
| | 8.5.3.21. பிறதுறைகள் | |
| | 8.5.3.21.1. அறிவியல் | |
| | 8.5.3.21.2. சட்டத்துறை | |
| **8.5.4.** | **தமிழில் மொழிபெயர்ப்புகள்** | **42** |
| | 8.5.4.1. இராமாயண மொழிபெயர்ப்புகள் | |
| | 8.5.4.2. புராணங்களின் மொழிபெயர்ப்பு | |
| | 8.5.4.3. ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் தமிழில் மொழிபெயர்ப்புகள் | |


TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | 8.5.4.4. இருபதாம் நூற்றாண்டு மொழிபெயர்ப்புகள் | |
| | 8.5.4.5. சாகித்திய அகாதெமி தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகள் | |
| | 8.5.4.6. தமிழக அரசின் மொழிபெயர்ப்புகள் | |
| 8.6. | **ஒப்பிலக்கியமும் திறனாய்வும்** | 49 |
| 8.6.1. | **தமிழில் ஒப்பிலக்கியம்** | 49 |
| | 8.6.1.1. தமிழில் ஒப்பிலக்கியத்தின் பண்பும் பயனும் | |
| | 8.6.1.2. ஒப்பிலக்கியம் - சொல்லாட்சி | |
| | 8.6.1.3. ஒப்பிலக்கியத்தின் பண்பு | |
| | 8.6.1.4. ஒப்பிலக்கிய அறிஞர்கள் | |
| | 8.6.1.5. கம்பரின் ஒப்பீடு | |
| | 8.6.1.6. இலக்கணத்தில் ஒப்பீட்டாய்வு | |
| | 8.6.1.7. சமயத்துறையில் | |
| | 8.6.1.8. சொல்லாராய்ச்சியில் | |
| | 8.6.1.9.ஒப்பீட்டாய்வின் பயன் | |
| | 8.6.1.9.தமிழில் ஒப்பியல் ஆய்வு | |
| | 8.6.2. திறனாய்வுத்தமிழ் | |
| | 8.6.2.1.மால்கம் கவ்லே கூறும் எடுகோள்கள் | |
| | 8.6.2.2.திறனாய்வு வகைகள் | |
| | 8.6.2.3.தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை | |
| | 8.6.2.4.தமிழில் உரைகள் | |
| | 8.6.2.5. தொ.மு. சி. ரகுநாதன் | |
| | 8.6.2.6. சி.சு. செல்லப்பா | |
| | 8.6.2.7. க. கைலாசபதி | |
| | 8.6.2.8. கா. சிவத்தம்பி | |
| | 8.6.2.9. நா. வானமாமலை | |
| | 8.6.2.10. தமிழண்ணல் | |
| | 8.6.2.11. வை. சச்சிதானந்தம் | |
| | 8.6.2.12. தமிழவன் | |
| | 8.6.2.13. எம்.ஏ. நுஃமான் | |
| | 8.6.2.14. தி. சு. நடராஜன் | |
| | **வினாக்கள் (130)** | 61 |


TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**
**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**
**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**
**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**
**Trichy : 76399 67359** **Salem : 93602 68118**

## 8. 4. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

### 8.4.1. நாடகத்தோற்றம்

- ✓ உலகின் பல நாடுகளில் சமயத்தொடர்பாகவே நாடகங்கள் தோன்றின.
- ✓ நாடகம் முதலில் தோன்றியநாடு எகிப்து.
- ✓ நாட்டியத்திலிருந்தே நாடகம் வந்ததாக **ஹில்லேப்பிராண்ட்** (Prog. Hillerbrand), **ஸ்டென்கொனா** (Stenknow) ஆகியோர் கூறினர்.
- ✓ **அறிஞர் விண்டிஸ் (Windish))** சமஸ்கிருத நாடகங்களுக்கு மூலம் கிரேக்க நாடகம் என்று நினைக்கின்றார். இக்கருத்தை **`கீத்'** என்னும் அறிஞர் மறுக்கிறார்.
- ✓ நாட்டியத்திலிருந்து தோன்றிய நாடகம் காலக் கட்டத்தில் பாடலையும் வசனத்தையும் கொண்டது என்பர் **பேராசிரியர் அல்டன்பர்க் (Oldenburg) .**
- ✓ மதச்சடங்குகளிலிருந்து நாடகம் தோன்றியது என்பதை ஒப்புக்கொள்ளாதவர் **பேராசிரியர் ஹில்லேப்ராண்ட்**
- ✓ இன்பத்தை வெளிப்படுத்த ஆதிகால மனிதனின் இயற்கையான வெளிப்பாட்டின் ஒருவித வடிவம் நாடகம் - **ஹில்லேப்ராண்ட்**
- ✓ **வடநாட்டினர் பரத முனிவரை `நாடகக் கலையின் தந்தை' என்று கருதுகின்றனர்.**

### 8.4.1.2. தமிழ் நாடகத் தோற்றம்

- ✓ **``தமிழ் நாடகம் முதலிலுண்டானது மதவிடயமாகவே என்பது துணியப்படும்"** - வி. கே. சூரியநாராயண சாஸ்திரியார்.
- ✓ நாடகத் தமிழின் வாழ்வு தலைச்சங்காலத்தில் நன்கு இருந்தது என்னும் கருத்துடையவர் **ப. சம்பந்த முதலியார்.**
- ✓ நாடகம் சென்ற காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் அகத்தே காட்டுவதால் **நாடு + அகம் - நாடகம்** என்று ஆயிற்று என்று அவ்வை சண்முகம் கூறுகிறார்.
- ✓ நாடகம் என்ற சொல் தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியங்களில் நாட்டியம் என்ற கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சில சான்றுகள்:**

**``நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்"(தொல்காப்பியம்)**

**``நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த**

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

**வீசி வீங்கு இன்னியங் கடுப்ப" பெரும்பாணாற்றுப்படை)**

**``பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்" (பட்டினப்பாலை)**

**``நாடகம் மேத்தும் நாடகக் கணிகை"(சிலம்பு)**

**``நாடக மடந்தையர் நலங்கெழுவீதி"(மணிமேகலை)**

**சங்க இலக்கியத்தில் `கூத்து" என்னும் சொல் மிகுதியாகக் காணப்படுகிறது.**

- ✓ ``கூத்தர் ஆடுகளம் கடுக்கும்"(புறம்)
- ✓ ``இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து"(சிலம்பு)
- ✓ ``கூத்தாட்டு அவைக்களம்"(திருக்குறள்);
- ✓ கருவி இசைகளுடன் இணைந்து ஆடுவது நாட்டியம்.
- ✓ நாட்டியம் என்னும் இச்சொல்லாட்சி சிலப்பதிகாரத்தில்தான் முதலில் பயின்று வருகிறது.
- ✓ **``நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து"** (சிலம்பு)

### 8.1.2.1. நாடக நூல்கள்

- ➢ சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதியவர் அடியார்க்கு நல்லார். அவர் அவ்வுரையில் பல நாடக நூல்களைக் கூறுகிறார். அவை, **அகத்தியம், குணநூல், கூத்தநூல், சயந்தம், நூல், மதிவாணன் நாடகத் தமிழ் நூல், முறுவல்.**
- ✓ இவற்றில் **`கூத்து நூல்'** மட்டும் அண்மையில் **கவிஞர் பாலபாரதி ச.து.சு. யோகியாரவர்களால் வெளிக்கொணரப் பெற்றது.**
- ✓ தமிழ் நாடு நாடக சங்கம் முதன் முதலில் அச்சில் கொண்டுவந்துள்ளது.
- ✓ இந்நூலை எழுதியவர் - சாத்தனார்.

மற்ற நூல்கள் பல மறைந்துபோயின. இந்நூல்களைப்பற்றிய சில குறிப்புகள்

- ○ **குணநூல் -**``குணத்தின் வழியது அகக் கூத்தெனப்படுமே" - இந்நூலில் வரும் ஒரு நூட்பா
- ○ **சயந்தம் -** ``அகத்தெழு அனையா னகமெனப்படுமே" - இந்நூலில் வரும் ஒரு நூட்பா
- ○ **செயிற்றியம் -** இந்நூல் ஆசிரியர் செயிற்றியனார்.
- ○ **நூல் -** இறையனார் அகப்பொருள் உரை, அடியார்க்கு நல்லார் உரை, மயிலைநாதர் உரை ஆகிய உரைகளால் அறியப்படும் நாடகத் தமிழ் நூல்
- ○ **பரதம் -** அழிந்துபோன நாடக நூல்
- ○ **பரதசேனாபதி -** நாடக இலக்கணம் கூறும் நூல். இந்நூல் ஆசிரியர் - ஆதிவாயிலார்
- ○ **மதிவாணன் நாடகத் தமிழ் நூல் -** மதிவாணன் என்னும் பாண்டிய அரசன் இயற்றிய நூல்
- ○ **முறுவல் -** மறைந்துபோன நூல்
- ○ **வஞ்சிப்பாட்டு, மோதிரப்பாட்டு, கடகண்டு** இவை நாடகம் பற்றிய நூல்கள்.
- ○ **விளக்கத்தார் கூத்து -** பேராசிரியர் குறிப்பிடும் நாடகத் தமிழ் நூல்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- **``கருத்துக்களை நடித்துக் காட்டுதல் நாட்டியம் என்றும் கதைகளை நடித்துக்காட்டுதல் நாடகம் என்றும் அழைத்தனர்"** - இளவழகனார்.
- நாட்டியத்தால் பெறும் இன்பத்தை நீடிக்க விழைந்த மக்களின் வேட்கையே நாடகமாக மலர்ந்தது.
- சிலப்பதிகாரம் கூறும் இருவகைக் கூத்துக்களை அடியார்க்கு நல்லார் சாந்திக்கூத்து, வினோதகூத்து என்கிறார்.
- சாந்திக்கூத்து - சொக்கக்கூத்து, மெய்க்கூத்து, அபிநயக் கூத்து, நாடகக் கூத்து என்று நால்வகை பாகுபாடு உண்டு.
- **இவற்றில் நாடகம் என்பதற்குக் கதைதழுவி வரும் கூத்து என்பர். கதை தழுவி ஆடிய நாடகமே நாடகக்கலையின் முதல்படி.**
- **கதைத் தழுவியது நாடகம். கருத்துக்களை வெளிப்படுத்துவது நாட்டியம். இதனையே `கூத்து' என்னும் பொருளில் கூறுவர்.**

### 8.1.2.2. அரங்கம்

- அரண்மனைச் சார்ந்த நாடகம் அரங்கத்தை **`கூத்துப்பள்ளி'** என்றும் கோவிலில் உள்ள கூத்தாடும் இடத்தினை **`கூத்தம்பலம்'** என்றும் கூறுவர்.
- நாடக மேடைக்கு **`நாயகப்பத்தி'** என்றும் கூத்துக் காண்போர் இடத்துக்கு `அம்பலம்' என்றும் பெயர்.
- நாடக மேடையில் கலைஞர்கள் தங்கிக் கூத்தாடும் இடத்திற்குக் **`கண்ணுளர் குடிஞைப் பள்ளி'** என்று பெயர். இதனை, **`ஆடுகளம்'** என்றும் கூறுவர்.
- **`கூத்தர் ஆடுகளம் கடுக்கும்'(புறம்)**

**திரை**

**மூவகைத்திரைகள்**

1. **ஒருமுக எழினி -** ஒடுபடம் என்ற பெருடையது. ஒருபக்கம் தள்ளக் கூடியது
2. **பொருமுக எழினி -** இரண்டு பக்கம் தள்ளப்படுவது
3. **கரந்துவரல் எழினி** - கீழிறங்கி வரவும் மேலே செல்லக்கூடியதுமான திரை- **`எந்திர எழினி'** என்றும் இதற்குப் பெயர். கயிற்றால் இயங்கக் கூடியது.

### 8.1.2.3. இன்னியங்கள்

- கலைஞர்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகள் - **யாழ், குழல், தண்ணுமை, முழவு, இடக்கை, பேரிகை, படாகை, படகம், உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, தீமிலை, குடமுழா, தக்கை, களப்பறை, தமருகம், தடாரி, அந்தரி, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடிகை, சிறுபறை, அடக்கம், தருணிச்சம், விரவேறு, பாதகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை, பதலை** முதலியன.
- சுவை - தொல்காப்பியர் எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறுகிறார்.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- காலம் - சிற்பக்கலை, ஓவியக்கலை போன்றவை பகற்பொழுது நிகழ்ந்தன. கூத்து விழாக்காலங்களில் நிகழ்ந்தது. `மள்ளர் குழீஇய விழவினானும்'(குறுந்;தொகை)

**நடிகர்கள்**

- பண்டைய நடிகன் - **கூத்தர், பாணர், பொருநர், விறலியர்** என்று அழைக்கப்பட்டனர்.
- **கண்ணுளர், தோரியர், வயிரியர்** என்றும் வேறு சொற்களாலும் அழைக்கப்பட்டனர்.
- தமிழ்ப் புலவர் பெயர்கள் - முதுகூத்தர். தமிழ்க்கூத்தர் என்றும் இருந்தன.
- கலைஞர் வாழ்ந்த இடம் - `பாண்டிசேரி', `பாண்டிகுடி', `கூத்தநல்லூர்' என்று அழைக்கப்பட்டன.

**நாடக நூல்கள் -**

- **பரதம், அகத்தியம், குணநூல், பரதசேனாபதீயம், கூத்தநூல், சயந்தம், நூல், மதிவாணன் நாடகத் தமிழ் நூல், முறுவல், கடகண்டு** முதலியன.

**நாடகக் கலையை வளர்த்தவர்கள் - வள்ளல்கள், பெருமன்னர்கள், குறுநில மன்னர்கள்,**

**மூவகை ஆட்டம்**

1. கருத்துக்களை ஒருத்தி வெளிப்படுத்தும் தனிநாட்டியம் – சிலப்பதிகாரம், அரங்கேற்றுக் காதையில் கூறப்பட்டுள்ளது.
2. ஒருத்தியே கதை தழுவி ஆடிடும் கூத்து - சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில் கூறப்பட்டுள்ளது.
3. கதை தழுவிப் பலர் ஆடிடும் நாட்டியம் - இதனை `வாலசரிதை நாடகம்' என்பர். சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் `கருப்பம்' என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

குரவைக் கூத்து - எழுவர் அல்லது ஒன்பதின்மர் கைகோர்த்து ஆடும் கூத்து.

## 8.4.2. நாடகக் கூறுகள் - வரலாற்றுக் கண்ணோட்டம்

### 8.4.2.1.அகத்தியர் காலத்தில் நாடகம்

- நாடகத் தமிழ் நூல்களில் பழமையானது அகத்தியம்.
- பரதம் - நாடக இலக்கண நூல் - பரதர் எழுதியது
- பரதசாத்திரம் என்பது வடமொழி நாடக இலக்கண நூல்

### 8.4.2.2.தொல்காப்பியர் காலத்தில் நாடகம்

- இன்று கிடைத்துள்ள நூல்களில் பழமையானது.
- நாடகம் என்ற சொல்லை முதன் முதலில் தொல்காப்பியத்தில்தான் காணமுடிகிறது.

**தெய்வக் கூத்துகள்**

- வெறிக்கூத்து - குறிஞ்சிநில மக்களிடையே வேலன் ஆடுவது
- குன்றக்குரவை - குறவர்கள் முருகனை வழிபட்டு ஆடுவது
- ஆய்ச்சியர் குரவை - முல்லைநில மகளிர் மாயோனைப் போற்றி ஆடுவது



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

**வேந்தர் தொடர்பான கூத்துகள்**

- **வள்ளிக்கூத்து** - வெற்றியைப் புகழ்ந்து வீரர்குடி மகளிர் வள்ளியின் கோலம் கொண்டு ஆடுவது
- **கழனிக் கூத்து** - களத்தைவிட்டுப் புறமுதுகிட்டு ஓடாத பெரும் வீரப் பெருமகனைப் பாராட்டி அவன் காலில் கழலைக்கட்டி ஆண்பெண் இணைந்து ஆடுவது
- **கருங்கூத்து** - போரில் வென்ற வீரர் அடையாளம் பூவைச்சூடி ஆடும் கூத்து.
- **அமலைக் கூத்து - `ஒள்வாள் அமலை'** என்பர் தொல்காப்பியர். வேந்தனை மகிழ்விப்பது. வெற்றி பெற்ற வேந்தனது வீரர்கள் வாளைக் கையில் தாங்கி ஆடும் கூத்து.
- **முன்தேர்க் குரவை** - மாற்றாரை வென்று மகிழ்ச்சி எய்திய வேந்தன் வெற்றிக் களிப்பினால் தேர்த்தட்டிலே நின்று போர் வீரருடன் கைபிணைத்து ஆடுவது.
- **பின்தேர்க்குரவை** - தேர்மன்னர்களை வென்று வீரத்தை நிலைநாட்டிய மன்னர்களைப் பாராட்டி அவன் பின்நின்று கூழுண்டு கொற்றவை கூளிச்சுற்றம் ஆடுவது.
- **கீழோராடும் கூத்து** - காடைக்கூத்து, கழைக்கூத்து ஆகியன.

**கலைஞர்கள்- ஆற்றுப்படுத்துதல் நூற்பா**

**``கூத்தரும் பாணரும் பொருநரும் விரலியரும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி''( தொல்காப்பியம்)**

- ஆங்கிலத்தில் நாடகத்தை - டிராமாவை **play** - விளையாட்டு என்று அழைக்கிறார்கள். தமிழிலும் தொல்காப்பியர் நாடகத்தை விளையாட்டு என்று கூறுகிறார். விளையாட்டு என்று பொருள் தரும் **`பண்ணை'** என்ற சொல்லால் கூறுகிறார். **நாடகம் - பண்ணை** எனப்பட்டது

**எண்வகை மெய்ப்பாடுகள்**

- நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை

### 8.4.2.3.சங்ககாலத்தில் நாடகம்

- **`உலகம் ஒரு நாடக மேடை'-** என்று சேக்ஸ்பியர் கூறுவதுபோன்ற பாடல்வரி புறநானூற்றில் உள்ளது.
- **``கோடியர் நீர்மைபோல முறைமுறை**
  **ஆடுநர் கழியும் இவ்வுலகத்து''** - உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடியது(புறம்)
- ஆரியநாட்டவர் ஆடுவது **கழைக்கூத்து**. இதனை **ஆரியக்கூத்து** என்றும் கூறுவர்.
- **அல்லிப்பாவை** - புறநானூறு கூறும் கூத்து. அது அல்லியம் என்ற கூத்தாக இருக்கலாம் என்பர். இது பாவைக் கூத்து வகையைச் சார்ந்தது.
- **குரவைக்கூத்து** - குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை
- **குன்றக்குரவை** - போரில் வெற்றிப்பெற்ற வீரர்கள் ஆடுவது. பின்னர் மலைநாட்டு மக்கள் வேலமர் கடவுளுளை புகழ்ந்து பாடி ஆடினர்.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- பரிபாடலில் முருகனை புகழ்ந்து ஆடும் குரவைக்கூத்தும் மாயோனைப் புகழ்ந்து ஆடும் ஆய்ச்சியர் குரவையும் குறிக்கப்பட்டுள்ளன.
- கலித்தொகை **கருங்கூத்து** என்னும் கூத்தினைக் குறிப்பிட்டுள்ளது.

✓ பத்துப்பாட்டில் **கூத்தராற்றுப்படை** என்னும் நூல் உண்டு. இதற்கு இன்னொரு பெயர் **மலைப்படுகடாம்** என்பது. கூத்தர்கள் கூட்டம் கூட்டமாக ஊர்ஊராக சென்று ஆடுவர் என்பது இதன் மூலம் அறியலாம்.

✓ **வள்ளிகூத்து** - இது **வாடாவள்ளி** என்று தொல்காப்பியரால் கூறப்படுவது. பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது.

✓ நாடகம் ஆடும் பெண்களை **நாடக மகளிர்** என்றும் கூத்தாடுமிடத்தை **ஆடுகளம்** என்றும் கூறுவர்.

✓ திருமுருகாற்றுப்படையில் குறவர் கூத்தாடுவது கூறுப்பட்டுள்ளது.

✓ **துணங்கைக்கூத்து** - வேலன் சூரனை வென்ற போது பேய்மகள் ஆடியது இக்கூத்து

➢ துணங்கையில் ஈடுபாடுகொண்ட கொற்றவையை **`துணங்கையார் செல்லி'** என்பர்.

➢ மன்னர்கள் துணங்கைக்கூத்திற்கு முதலிடம் தந்துள்ளனர்.

➢ துணங்கைக்கூத்து `தலைக்கை கூத்து' என்றும் அழைக்கப்படுகிறது.

➢ மகளிர்க்கே உரிய இக்கூத்தினை `சிங்கிக்கூத்து' என்றும் கூறுவர். இக்காலத்து டப்பாங்குத்து போன்றது இது.

**சங்க நாடக இலக்கியம்** - சங்க இலக்கிய பாடல்கள் பல நாடகங்களாக எழுதப்பட்டுள்ளன.

- தெ.பொ.மீ.- நற்றிணை நாடகங்கள்
- புலவர் அரசு - குமணன்
- சிவ. குப்புசாமிப்பிள்ளை - வள்ளலும் வளவனனும், சங்க கால வள்ளல்கள்

### 8.4.2.4. சங்கம் மருவிய கால நாடகம்

- திருக்குறள் - **கூத்தாட்டு அவை**(குறள்- 332) என்று கூத்தாடும் இடத்தைக் குறிக்கிறது. மரப்பாவை கூத்து(குறள்-1020) பற்றியும் கூறுகிறது.
- அரிஸ்டாட்டில் நாடகத்தின் அடிப்படைக் கூறுகள் ஆறு என்கிறார்.

▪ குறட்பாக்களையும் வள்ளுவரின் வரலாற்றையும் வைத்து தோன்றிய **நாடக நூல்கள்** -மா. வழித்துணைவன் - திருவள்ளுவர் நாடகம்

▪ க.த. திருநாவுக்கரசு - திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்

### 8.4.2.5.சிலப்பதிகாரத்தில் நாடகம்

**பதினோரு ஆடல்கள் - மாதவி ஆடியவை**

| | | |
|---|---|---|
| ✓ கொடுகொட்டி | ✓ துடி | ✓ மரக்கால் |
| ✓ பாண்டரங்கம் | ✓ கடை | ✓ பாவை |
| ✓ அல்லியம் | ✓ குடம் | ✓ கடையம் |
| ✓ மல் | ✓ பேடி | |



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

**கொடுகொட்டி**

- ✓ கொட்டிச்சேதம் என்பர்
- ✓ திரிபுரங்கள் தீ மடுத்தி தெரியகண்ட விரிசடைக்கடவுள் மனம் சிறிதும் இரங்காமல் ஆடியது.
- ✓ உறுப்புகள் **ஆறு.**

**பாண்டரங்கம்**

- ✓ நான்முகன் காணுமாறு கலைமகள் ஆடியது.
- ✓ உறுப்புகள் ஆறு.
- ✓ வெண்ணீறணிந்து ஆடுதல் என்பது கலித்தொகை.

**அல்லியம்**

- ✓ மாயோன் ஆடியது.
- ✓ கஞ்சனால் ஏவப்பட்ட யானையின் கொம்பை முறித்து ஆடியது
- ✓ இதற்கு அளிப்பேடு என்ற பெயரும் உண்டு(அடியார்க்குநல்லார்).
- ✓ உறுப்புகள் - ஆறு

**மல்**

- ✓ மல்லாடல் எனவும் வழங்கப்படுகிறது.
- ✓ வாணனாகிய அவுணனை அழிக்க மல்லனாய் ஆடியது.
- ✓ உறுப்புகள் - ஆறு

**துடி**

- ✓ முருகனால் ஆடியது
- ✓ உறுப்புகள் - ஆறு
- ✓ கடலில் மாமரமாய் நின்ற மாய அவுணனை வென்று ஆடியது.
- ✓ உறுப்புகள் - ஐந்து

**குடை**

- ✓ குடைக்கூத்து எனப்படுவது.
- ✓ அசுரர்கள் போரில் தோற்று படைக்கலங்களை வீசி எறிந்தபோது அது கண்ட முருகன் தனது வெண்கொற்றக்குடையை முன்னே சாய்த்து அதனையே ஒருமுக எழினியாகக்கொண்டு ஆடியது.
- ✓ உறுப்புகள் - ஆறு

**குடம்**

- ✓ கண்ணனால் ஆடிப்பட்டது.
- ✓ காமன் மகன் அநிருத்தனை வாணாசுரனின் சிறையிலிருந்து மீட்பதற்காக குடம்கொண்டு ஆடியது.
- ✓ உறுப்புகள் - ஐந்து.

**பேடு**

- ✓ பேடுகோலம் கொண்டு மன்மதன் ஆடியது.
- ✓ மணிமேகலையிலும் இந்த ஆடல் பற்றிய குறிப்பு உண்டு.
- ✓ உறுப்புகள் - ஆறு

TEACHER'S CARE ACADEMY

**மரக்கால் ஆட்டம்**

- ✓ மரத்தால்; ஆன காலினால் ஆடுவது.
- ✓ உறுப்புகள் - ஆறு

**பாவை**

- ✓ கொற்றவைக் கோலம்கொண்டு திருமகள் ஆடியது.
- ✓ உறுப்புகள் - இரண்டு

**கடையம்**

- ✓ அயிராணி என்னும் மடந்தை ஆடிய கூத்து.
- ✓ உறுப்புகள் - ஆறு

**தலைக்கோல்**

- ✓ புகழ்மிக்க மன்னர்கள் போரில் வெல்லப்பட்டால் அவர்களின் குடைக்காம்பை எடுத்துவந்து அதனினின்று செய்யப்படும் கோல்.
- ✓ இதனை இந்திரன் மகன் சயந்தனாக எண்ணுவர்.

**அரங்கின் அளவு**

- ✓ ஏழுகோல் அகலம், எட்டுக்கோல் நீளம், ஒருகோல் குறட்டுயரம் உடையது.
- ✓ நாடகம் நிகழும் தலைமை இடம் - **தாயகப்பத்தி** என்று பெயர்.

**தோரியர் மடந்தை**

- ✓ **தோரியம் - கூத்து** என்பது பொருள்.
- ✓ **தோரியர் மகளிர் - கூத்தாடும் பெண்கள்.**
- ✓ இவர்கள் திரையின் பக்கத்தில் இருப்பது மரபு.
- ✓ நாடகக்கணிகையர் **ஐயாண்டில் தண்டியம் பெறுதலும் ஏழாண்டு நடம்நவிலுதல்** போன்ற செய்திகள் சிலப்பதிகாரத்தில் உண்டு.

### 8.4.2.6.பல்லவர் காலத்தில் நாடகம்

- ✓ கோயிலில் நாடகம் நடத்துவதற்கு தனிக்குழுக்கள் இருந்தன (பெருங்கதை).
- ✓ மகேந்திரவர்ம பல்லவன் - நாடகக்கலையில் மிக்க ஈடுபாடு உடையவன்.
- ➢ இவர் இயற்றிய நாடகம் மத்தவிலாசப் பிரகசனம்.

**பரமேச்சுவர வர்மன் -** காஞ்சி வைகுந்த பெருமாள் கோயிலைப் புதுப்பித்தவர்.

- ➢ இவர் காலத்தவர் திருமங்கையாழ்வார்.
- ➢ சித்தன்ன வாசலி ல் நடனமாது ஓவியம் உள்ளது.

**சோழர் காலத்தில் நாடகம்**

- ➢ முதல் இராஜராஜசோழன் இசை, கூத்து, கட்டிடக்கலைகளை வளர்த்தவர்.
- ➢ தில்லையில் மறைத்து வைக்கப்பட்ட தேவாரத் திருமுறைகளை வெளிக்கொணர்ந்தவன்.
- ➢ அவற்றைப் பண்ணுடன் கோயிலில் பாடுவதற்கு ஏற்பாடு செய்தவன்.
- ➢ தஞ்சை பெரியகோயிலைக் கட்டினார்.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- இராசராசேச்சுவர நாடகம் - இராசராசன் வரலாற்றை கூறும் நாடகம்.
- இது இராசராசன் காலத்திலேயே நடிக்கப்பட்ட நாடகம்.
- இந்நாடகத்தில் நடித்தவர் - விசய ராசேந்திர ஆச்சாரி.
- அவருக்கு 120 கலம் நெல்தரப்பட்டு வந்தது என்பது கல்வெட்டுச் செய்தி.
- இதுவே முதல் வரலாற்று நாடகம் எனலாம்.
- பதினோராம் நூற்றாண்டில் நடிக்கப்பட்டது.

**முதல் குலோத்துங்கன் - இவர் காலத்தில் பூம்புலியூர் நாடகம் நடிக்கப்பட்டது.**

- ஆடல் பாடல் மகளிர்க்கு தலைக்கோலி பட்டம் வழங்கப்பட்டது.
- நாடக மகளிர், கூத்தாடுவோர் போன்ற கலைஞர்களுக்கு நிலம் மானியமாக விடப்பட்டது.

**ஒலோகமாதேவி** - இவர் கட்டியகோயில் ஒலோகமாதேவி கோயில்.

- அக்கோயில் ஒலோகமாதேவிச்சுரம் எனப்பட்டது.
- இக்கோயிலில் ஐயாறன் கலியுகச்சுந்தரத் தலைக்கோலி என்னும் ஆடல் பாடல்களில் வல்ல மங்கை இருந்தாள். இவரின் கீழ் முப்பது மகளிர் இருந்து கலைவளர்த்தனர்.

**பட்டங்கள்** - நாட்டிய கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்கள்

- **நளுதேசி தலைக்கோலி - நக்கன் பிள்ளையாள்வி** என்பவருக்கு வழங்கப்பட்டது.
- நக்கான் உலகுடையாள் என்பவளுக்குத் தேவகன் சுந்தரத் தலைக்கோலியார் என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- உலகமுழுதுடையாள் என்னும் ஆடல் மங்கைக்கு சாந்திக் கூத்தி சொக்கட்டாயாண்டார் என்னும் பட்டப்பெயர் வழங்கப்பட்டது.
- திருவாவடுதுறைக் கோயிலில் நானாவித நடனசாலை என்ற அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது.
- திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் ஆத்தூர் சோமநாததீசுவரர் கோயிலில் அழகிய `**பாண்டியன் கூடம்**' என்ற நாடக மன்றம் இருந்தது.

## 8.4.2.7.இலக்கிய வடிவ நாடகங்கள்

**பள்ளு நாடகம்**

- கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் எழுந்தது.
- மேடை நாடகமும் இலக்கியவகையும் கொண்ட முதல் வகை நாடகம் பள்ளு நாடகம்.
- பள்ளர்களின் வாழ்வியலைக் கூறுவது.
- `**ஊழத்திப்பாட்டு**' என்று அழைக்கப்படுவது.
- தமிழில் உள்ள முக்கூடற்பள்ளு அற்புதமான பள்ளு இலக்கியம். 1680 இல் தோன்றியது.
- காலத்தால் முற்பட்ட பள்ளு திருவாரூர்ப்பள்ளு. இது ஞானப்பள்ளு, ஆதிப்பள்ளு, தியாகேசர்பள்ளு என்னும் வேறுபெயர்களையும் கொண்டுள்ளது.

**குறவஞ்சி**

- இது **குறவஞ்சி நாடகம்** என்றும் அழைக்கப்படுகிறது.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- குறவர் வாழ்வியலை அடிப்படையாக்கி உருவானது.
- **முதல் குறவஞ்சி இலக்கியம் மீனாட்சியம்மை குறம்** - குமரகுருபரரால் இயற்றப்பட்டது.
- **திருக்குற்றாலக் குறவஞ்சி** முக்கியமானது. இதன் **ஆசிரியர் திரிகூடராசப்பக்கவிராயர்.**
- **கும்பேசர் குறவஞ்சி** - குடந்தைப் பாபநாச முதலியார் எழுதியது.

**ஓதாளர் குறவஞ்சி** அல்லது **அலகுமலைக் குறவஞ்சி**

- அலகு மலையைப்பற்றி கூறுவது.
- பாட்டுடைத்தலைவன் முருகன்.

**சரபேந்திரபூபால குறவஞ்சி நாடகம்**

- தஞ்சையில் நடிக்கப்பட்டது.
- தஞ்சைப் பெரியகோயிலில் நடிக்கப்பட்டது.
- மகாராட்டிய மன்னர்கள் காலந்தொட்டு நடிக்கப்பட்டது.

**நொண்டி நாடகம்**

- 96 வகை சிற்றிலக்கியங்களில் சேர்க்கப்படாதது.
- இது ஒற்றைக்கால் நாடகம் என்று பெயர் பெற்றிருக்கிறது.
- நொண்டிச்சிந்து பாவால் பாடப்படுவது.
- முதல் நொண்டி நாடகம் - சீதாகாதி நொண்டி நாடகம்
- ✓ திருவிடைமருதூர் நொண்டி நாடகம் - ஆசிரியர் - அனந்த பாரதி
- ✓ நொண்டி நாடகம் எள்ளல் சுவையுடையது.

**ஆங்கிலேயர் காலத்தில் எழுந்த நாடகங்கள்**

- ✓ ஒரே பெயரில் வெளிவந்த நாடகம் - நான்கு ஆசிரியர்கள் தனித்தனியாக எழுதிய நாடகம் - **மகாபாரத விலாசம்**
- ✓ **இராமநாடகம் - 1867** இல் இயற்றப்பட்டது.
- ✓ **குசலவ நாடகம்** - திருநயம் கிருஷ்ண பாரதிகளால் 1887 இல் இயற்றப்பட்டது.
- ✓ அரிச்சந்திர புராணம், நளன் தமயந்தி கதைகள் பலரால் நாடகங்களாக்கப்பட்டன.

### 8.4.3. நாடக வகைகள்

நாடக முடிவை வைத்து பொதுவாக இரண்டு வகை. அவை, **இன்பியல் நாடகம், துன்பியல் நாடகம்**

- **புராண இதிகாச நாடகம்** - அரிச்சந்திர நாடகம். வள்ளித் திருமணம். சிவலீலா, கந்தலீலா, கிருஷ்ணலீலா, சக்திலீலா, பிரபுலீலா, லிங்கலீலா, இராமாயணம், மகாபாரதம், தசாவதாரம், சாவித்திரி, சதியனுசூயா
- **வரலாற்று நாடகங்கள்** - இமயத்தில் நாம், தஞ்சை நாயக்கர் தாழ்வு, நாடக முத்தரையன், மாலிக்காபூர், ஆர்.எஸ். மனோகர் நாடகங்கள், அரு. ராமநாதனின் `இராஜ ராஜசோழன்', `வீரபாண்டிய கட்டபொம்மன்'.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- **கற்பனை நாடகங்கள் -** மனோகரன், இரண்டு நண்பர்கள், லீலாவதி, சுலோசனா, வேதாள உலகம்.
- **பக்தி நாடகம் -** இராமதாஸ், பிரகலாதன், துருவன், மார்க்கண்டேயர்.
- **சமுக நாடகங்கள் -** டம்பாச்சாரி, இராஜம்மாள், இராஜேந்திரா, மோகன சுந்தரம். மேனகா, பம்பாய் மெயில், விதியாசாகரர், நாலுவேலி நிலம், மல்லியம் மங்களம், உயிரோவியம்..
- ✓ வேலைக்காரி, நீதி தேவனின் மயக்கம்(அறிஞர் அண்ணா எழுதியவை) எம்.ஜி.ஆர் நாடக மன்றத்தின் 'சுமைத்தாங்கி', எம். ஆர். ராதாவின் 'ரத்தக்கண்ணீர்', கே.பாலசந்திரனின் 'நீர்க்குமிழி', 'சர்வர் சுந்தரம்'.
- **சமுதாய சீர்த்திருத்த நாடகங்கள்-** அந்தாமான் கைதி, முள்ளில் ரோஜா, பைத்தியக்காரன், இழந்த காதல், இரத்தக்கண்ணீர், மனிதன், வாழ்வில் இன்பம், பெண்
- **நகைச்சுவை நாடகங்கள் -** சபாபதி, பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்
- **பிரசார நாடகங்கள் -** பதிபக்தி, ஐம்பதும் அறுபதும், விலங்கு மனிதன்

### 8.4.3.1. தெருகூத்து

- திறந்தவெளியில் ஆடும் நாடகம்
- தெருக்களில் ஆடுவதால் தெருக்கூத்து என்ற பெயர் ஏற்பட்டது.
- கோமாளி - நகைச்சுவை நடிப்புக் கதாபாத்திரம்.
- கட்டியக்காரன் - நாடகத்தின் முதலில் வந்து கதாபத்திரங்களை அறிமுகப்படுத்துபவர்.
- தெருக்கூத்தில் அர்மோனியம் முக்கியமான வாத்தியம்
- மார்க்கண்டேய நாடகம், ஆரிச்சந்திர நாடகம், மகாபாரத நாடகம், நல்லத்தங்காள் நாடகம், சிறுதொண்டர் நாடகம், கட்டபொம்மு நாடகம் முக்கியமானவை.

**கூத்துப்பற்றிய பழமொழிகள்**

`கூத்தாடி கிழக்கே பார்ப்பான் கூலிக்காரன் மேற்கேபார்ப்பான்'

`குருடனும் செவிடனும் கூத்துப் பார்க்கப் போனது போல'

`ஒருநாள் கூத்துக்கு மீசை எடுத்ததுபோல'

`குடும்பத்தில் இளையவன் கூத்தின் முதியவன்'

`ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்'

- கூத்தாடி கிழக்கே பார்ப்பான் என்றால் கூத்து முடியும் போது விடியல் தெரியும்.
- பெ.தூரன் - `தெருக்கூத்து' என்ற ஒரு கட்டுரையை கலைக்களஞ்சியம் என்ற சிறப்பு மலரில் எழுதியுள்ளார்.
- திரு. சோமலெ - `தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' என்ற நூலில் தெருக்கூத்துப்பற்றி எழுதியுள்ளார்.

### 8.4.3.2. குழந்தை நாடகம்

- அப்பாவின் ஆசை
- ✓ திருச்சி பாரதன் எழுதியது.
- ✓ அப்பாவாக நடித்தவர் - கலைஞர் தி.க. சண்முகம்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- ✓ டி.கே. எஸ். குழுவினாரால் நடிக்கப்பட்டது.
- **தணிகை உலகநாதன்**-சிறுவர் நாடக விருந்து என்னும் பெயருடன் ஐந்து சிறுவர் நாடகங்களை 1959ல் வெளியிட்டார்.
- ஆர்வி எழுதியது கறுப்பு ராஜகுமாரி- 1962

**வானொலியில் குழந்தை நாடகம்**

- ✓ திரு. அய்யாசாமி - முத்துக்குவியல், பாப்பா மலர் என்ற நிகழ்ச்சிகளில் குழந்தை நாடகங்களை ஒலிபரப்பினார்.
- ✓ `அன்பின் நிலையம் என்னும் நாடகத்தை சென்னை வானொலி நிலையம் முழு நீள நாடகமாக ஒலிபரப்பியது.
- ✓ சென்னையில் `பாலர் அரங்கம்' என்ற ஒன்று உள்ளது. இதற்கு கலைவாணர் அரங்கம் என்று பெயரிட்டனர்.
- ✓ சென்னையில் நவமணி மாலை நிகழ்ச்சி அனைவருடைய பாராட்டையும் பெற்றது. அந்நிகழ்ச்சியால் சிறந்த சிறுவர் நாடகங்கள் அரங்கேறின.

**குழந்தை நாடக நூல்கள்**

**தங்கக் குழந்தைகள்**

- ✓ 1955 - சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கத்தார் நடத்திய குழந்தைகள் நாடக விழாவில் நடிக்கப்பெற்ற நாடகம்.
- ✓ இந்நாடகம் 1959 - இந்திய அரசின் குழந்தை இலக்கியப் பரிசைப் பெற்றது.
- ✓ இந்நாடகத்தின் ஆசிரியர் - திரு. தம்பி சீனிவாசன்.
- **மு. தமிழரசு எழுதியவை**
  - செல்லப்பிள்ளை
  - கரிகால்வளவன்
- **ஆர்.வி.எழுதியது**
  - ➢ கறுப்பு ராஜகுமாரி
- **புலவர் தணிகை உலகநாதன் எழுதியவை**
  - சிறுவர் நாடக விருந்து, நல்ல நாடகங்கள்
- ✓ **நல்ல நாடகங்கள்** - குறும்பின் முடிவு, பிடிவாதம், பசி எடுத்தது, கூண்டுகிளி இந்நான்கின் தொகுப்பு

**மு. சிவன் எழுதியவை**

- ➢ பெருவிரல் (ஏலைவன் கதையைக் கூறுவது), வள்ளுவன் வழி

**புலவர் இரா. கணபதி எழுதியவை**

- ➢ இளைஞர்களுக்கேற்ற பக்தி நாடகங்கள்
- ✓ **திரு. நாரா. நாச்சியப்பன் எழுதியது** - பிறந்த பாசம்

**திரு. பூவண்ணன் எழுதியவை**

- பெயர் தந்த பெருமை (முதல் குழந்தைகள் தினம் 12.11.1964 இல் சென்னை வானொலியினர் நடத்திய குழந்தைகள் நிகழ்ச்சிக்காக எழுதப்பட்டது)

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- உப்பில்லாத பண்டம்,
- நம்ம குழந்தைகள் (தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது).

✓ **குமாரி கமலா எழுதிய நாடகம்**

➢ அட்மிஷன் வேண்டும்.

✓ இரவீந்திரநாத் தாகூர் எழுதிய `மகுடம்' என்னும் நாடகத்தை தா.நா. குமாராசாமி தமிழில் மொழிபெயர்த்தார்.

✓ **சிறுவர்களாலேயே நடிக்கப்பெற்ற நாடகம்**

➢ சீனுவின் சாமார்த்தியம், வனரோஜா, கிராமப்பள்ளிக் கூடம்

இந்நாடகங்களை எழுதியவர் - குமாரி சாந்தி

### 8.4.3.3. வானொலி நாடகங்கள்

➢ ஓரங்க நாடகம், நாவல் நாடகங்கள். தொடர் நாடகங்கள், கவிதை நாடகங்கள் என பலவும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டன.

➢ நாவல் நாடகம் - சிவகாமியின் சபதம் - 1941 இல் வானொலி நாடகமாக ஒலிபரப்பப்பட்டது.

➢ ஒலி நாடகத்திற்கு உயிராக அமைவது அதன் உரையாடல்தான்.

➢ கண்ணால் காண முடியாத காட்சியமைப்புகளைக் கொண்டது வானொலி நாடகம்

**வானொலி நாடக நூல்கள்**

**தெள்ளாற்று நந்தி**

- பத்து நாடகங்களின் தொகுப்பு
- பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் எழுதியது
- தேள்ளாற்று நந்தி, சாபவிமோசனம், கைலாசநாதர் கோயில் வரலாறு, செழியன் துறவு, புனிதவதி முதலிய நாடகங்கள் இத்தொகுப்பில் உள்ளன.
- **சிலைபேசிற்று**

✓ திரு. ரகுநாதன் எழுதியது

✓ கிரேக்க புராணக்கதை ஒன்றை மையமாகக் கொண்டது.

✓ புகழ்கோபுரம் - கோ. செல்வம் எழுதியது.

✓ ஊதாரி - க.நா. சுப்பிரமணியம் எழுதியது

✓ ராஜசுந்தரி -தி.நா. சுப்பிரமணியன் எழுதியது.

### 8.4.3.4.மொழிபெயர்ப்பு நாடகங்கள்

➢ **முதல் மொழிப்பெயர்ப்பு நாடகம்**-1876 இல் எழுதப்பட்டது.

➢ **ஷேக்ஸ்பியர் நாடகங்கள்** - வெனிஸ் வர்த்தகன், ஹாம்லெட், ஜுலியஸ்சீசர் இவ்விரண்டையும்; ஐவருக்குமேல் மொழிப்பெயர்த்திருக்கிறார்கள்.

➢ Merchant of Venice என்னும் நாடகத்தை **`வணிகபுர வணிகன்'** என்ற பெயரிலும் As you like it என்னும் நாடகத்தை **`விரும்பிய விதமே'** என்னும் பெயரிலும் பம்பல் அவர்கள் மொழிப்பெயர்த்திருக்கிறார்.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- **மாக்பெத், ஹாம்லெட்** ஆகிய ஆங்கில நாடகங்கள் **- எஸ். மகராசன்** மொழிப்பெயர்த்தவை.
- **மிருகச்சடிகம்** என்னும் வடமொழி நாடகம் **- மண்ணியல் சிறுதேர், இன்பப்புரட்சி** என்ற பெயர்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**வடமொழி மொழிபெயர்ப்பு நாடகங்கள்**

**மகேந்திரவர்மன்**

- ✓ **மத்தவிலாசப் பிரஹத்சனம் -** என்னும் நகைச்சுவை நாடகம் ஒன்றை வடமொழியில் எழுதினார்.
- ✓ இந்நாடகத்தை முதன் முதலில் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் டி. என். சுப்பிரமணியம், மயிலை சீனி. வேங்கடசாமி ஆகியோர்.

**களிதாசரின் சாகுந்தலம்**

- ✓ இந்நாடகம்1887 ஆண்டு லெட்சுமி அம்மாள் அவர்களால் `சாகுந்தலா விலாசம்' என்னும் பெயரில் தமிழில் எழுதப்பட்டது.
- ✓ **நடேச சாஸ்திரியார்** இந்நாடகத்தை **`முத்திரைக் கணையாழி'** என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

**மிருச்சகடிகம்**

- ✓ சூத்திரகர் என்னும் மன்னனால் இயற்றப்பட்டது.
- ✓ இதனை பண்டிதமணி கதிரேச செட்டியார் அவர்கள் **`மண்ணியல் சிறுதேர்'** என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.
- ✓ வைத்திய நாதன் அவர்கள் `இன்பப் புரட்சி' என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.
- ✓ எஸ். நடராசன், சங்கரதாஸ் சுவாமிகள் ஆகியோரும் மொழிபெயர்த்துள்ளனர்.

**முத்ரா ராஷஸம்**

- ✓ விசாகதத்தரால் இயற்றப்பட்டது.
- ✓ இதனை தமிழில் இ.கே. நடேச சர்மா மொழிபெயர்த்துள்ளார்.

**ஸ்ரீஜெயதேவஜெயம்**

- ✓ வடமொழிகதையை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.
- ✓ தமிழில் திரு. கொ.நா. சீனுவாசன் மொழிபெயர்த்துள்ளார்.

**ஸ்வப்பன் வாசவதத்தம்**

- ✓ பாலமகாவி எழுதியது.
- ✓ இதனை தமிழில் திரு.ஜி.ஹிரிஹரசாஸ்திரியார் மொழிபெயர்த்துள்ளார்.

**பித்திமா**

- ✓ பால மகாகவி எழுதியது.
- ✓ இதனை தமிழில் திரு.ஜி.ஹிரிஹரசாஸ்திரியார் மொழிபெயர்த்துள்ளார்.

**காதம்பரி**

- ✓ பட்டபாணர் எழுதியது



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- ✓ இதனை தமிழில் மூன்று மங்கையர் என்ற பெயரில் ஜி. ஹிரி ஹரசாஸ்திரியார், நிலாசாஸ்திரி ஆகியோர் மொழிபெயர்த்துள்ளனர்.

**தெலுங்கு மொழிபெயர்ப்பு நாடகங்கள்**

- ➢ **கன்யாசுல்கம்**
  - ✓ தெலுங்கில் எழுதியவர் குரஜாப அப்பாராவ்
  - ✓ தமிழில் மொழிபெயர்த்தவர் - மு.கு. ஜகந்நாதராஜா

**மலையாள மொழிபெயர்ப்பு நாடகங்கள்**

- ➢ **கூட்டுப்பண்ணை**
- ✓ மலையாளத்தில் எழுதியவர் - இடசேரி கோவிந்தன் நாயர்.
- ✓ தமிழில் மொழிபெயர்த்தவர் - தரு. ரா. சௌரிராஜன்.

**மனிதன்**

- ✓ முதுகுளம் இராகவன் மலையாளத்தில் எழுதிய மனுஷ்யன் என்னும் நாடகம்.
- ✓ தமிழில் மனிதன் என்னும் பெயரில் மொழிபெயர்த்;து தழுவல் நாடகமாக எழுதியவர்கள் - பா. ஆதிமூலம், நா. சோமசுந்தரம் ஆகியோர்.
- ✓ டி. கே. சகோதரர்களின் தூண்டுதலால் தமிழுக்குக் கிடைத்தது.

**அடிமை**

- ✓ தொகுத்தவர் - குட்டிப்புழா கிருஷ்ணப்பிள்ளை
- ✓ தமிழில் திரு. பி ஆதிமூலம் மொழிபெயர்த்துள்ளார்.

**கன்னடமொழிபெயர்ப்பு நாடகங்கள்**

**ஆண்டுவிழா**

- ✓ ஸ்ரீரங்கா, நா. கஸ்தூரி இருவரும் தொகுத்ததை தமிழில் - ஹேமா ஆனந்ததீர்த்தன் மொழிபெயர்த்துள்ளார்.

**வங்காள மொழிபெயர்ப்பு நாடகங்கள்**

**நூர்ஜஹான்**

- ✓ கவிஞர் பாடி துவிஜேந்திரவால்ராய் எழுதியது
- ✓ தமிழில் திரு. ப.கி. விஜயராகவன் மொழிபெயர்த்துள்ளார்.

**மராத்தி மொழிபெயர்ப்பு நாடகங்கள்**

**சன்யஸ் நாடகம்**

- ✓ விநாயக தாமேதர சாவர்க்கர்
- ✓ தமிழில் துறந்த வாள் என்னும் பெயரில் திரு. அபிதவம் ராஜேந்திரநாதன் மொழிபெயர்த்துள்ளார்.

**இந்தி மொழிபெயர்ப்பு நாடகங்கள்**

**சந்திரகுப்தன்**

- ✓ ஜயசங்கர் பிரகாஷ் எழுதியது.
- ✓ தமிழில் ஆர். சண்முகசுந்தரம் மொழிபெயர்த்துள்ளார்.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com


# TEACHER'S CARE ACADEMY

38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359


# UG TRB
# தமிழ்
## 2022-2023



## UNIT-9
## கவிதையும் & பாடலும்.

*Your Success is Our Goal....*

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com


# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy : 76399 67359** **Salem : 93602 68118**


# UG – TRB – 2022 - 23

## தமிழ்

## அலகு - 9

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| **9.1.** | **மரபுக்கவிதை** | 1 |
| 9.1.1 | மக்கள் இயக்கம் | 5 |
| 9.1.2 | பாரதியார் | 7 |
| 9.1.3. | கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | 13 |
| 9.1.4. | பாரதிதாசன் | 21 |
| 9.1.5. | நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை | 26 |
| 9.1.6. | சுரதா | 32 |
| 9.1.7. | முடியரசன் | 37 |
| 9.1.8. | வாணிதாசன் | 44 |
| 9.1.9. | கம்பதாசன் | 48 |
| 9.1.10. | கா.மு.ஷெரீப் | 51 |
| 9.1.11. | கண்ணதாசன் | 54 |
| 9.1.12. | பெருஞ்சித்திரனார் | 62 |
| **9.2.** | **புதுக்கவிதை** | 68 |
| 9.2.1. | நா.பிச்சமூர்த்தி | 73 |
| 9.2.2 | வல்லிக்கண்ணன் | 75 |
| 9.2.3. | பிரமிள் | 76 |

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com




| | | |
|---|---|---|
| 9.2.4. | சி.மணி | 80 |
| 9.2.5. | மீரா | 82 |
| 9.2.6. | மேத்தா | 86 |
| 9.2.7. | அப்துல் ரகுமான் | 90 |
| 9.2.8. | ஈரோடு தமிழன்பன் | 94 |
| 9.2.9. | சிற்பி பாலசுப்பிரமணியன் | 98 |
| 9.2.10. | ஆத்மாநாம் | 102 |
| 9.2.11. | அறிவுமதி | 105 |
| 9.2.12. | வைரமுத்து | 109 |
| 9.2.13. | விக்ரமாதித்யன் | 111 |
| 9.2.14. | கலாப்பிரியா | 113 |
| 9.2.15. | கல்யாண்ஜி | 113 |
| 9.2.16. | இரா. மீனாட்சி | 116 |
| 9.2.17. | குட்டி ரேவதி | 118 |
| 9.2.18. | புவியரசு | 119 |
| 9.2.19. | தேவதேவன் | 121 |
| **9.3.** | **திரைப்படப்பாடல்கள்** | 123 |
| 9.3.1 | உடுமலை நாராயணகவி | 129 |
| 9.3.2. | பாபநாசம் சிவன் | 133 |
| 9.3.3 | கு.மா.பாலசுப்பிரமணியன் | 138 |
| 9.3.4. | மருதகாசி | 141 |
| 9.3.5 | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் | 146 |
| 9.3.6 | கண்ணதாசன் | 150 |
| 9.3.7. | வாலி | 155 |
| 9.3.8. | வைரமுத்து | 158 |
| 9.3.9 | தாமரை | 160 |
| 9.3.10 | யுகபாரதி | 162 |
| 9.3.11. | அறிவுமதி | 164 |
| 9.3.12. | நா.முத்துக்குமார் | 165 |
| **9.4** | **நாட்டுப்புறப்பாடல்கள்** | 166 |


TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com





| | | |
|---|---|---|
| 9.4.1 | நாட்டுப்புற இயலின் தோற்றம் | 167 |
| 9.4.2. | நாட்டுப்புறப் பாடல்கள் | 172 |
| 9.4.3. | நாட்டுப்புற மக்களின் பண்பாடுகள் | 175 |
| 9.4.4. | தமிழர் நாட்டுப்பாடல்கள் | 177 |
| 9.4.5 | வானமாமலை | 182 |
| 9.4.6 | நல்லதங்காள் கதை | 184 |
| 9.4.7 | 'மலையருவி' தொகுப்பு முதல் பிந்தைய தொகுப்புகள் வரை | 187 |



TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# அலகு - 9

## 9.1. மரபுக்கவிதை

### கவிதை – விளக்கம்

- ❖ கவிதை என்பது அழகியல் உணர்ச்சியுடைய, ஓசை சந்தத்துடன் கூடிய அல்லது ஒத்திசைப் பண்புச் சொற்களால் கோர்க்கப்பட்ட ஓர் எழுத்து இலக்கியக் கலை வடிவம் ஆகும். மேலும் மொழியில் உள்ள ஒலியன் அழகியல், ஒலிக்குறியீடுகள், மற்றும் சந்தம் ஆகியவற்றுடன் இடம், இயல்பான பொருள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டுவதாகக் கவிதை உள்ளது. உணர்ச்சி, கற்பனை, கருத்துக்களை வெளிப்படுத்தவும் தூண்டவும் கவிதை உதவுகின்றது.
- ❖ கவிஞனின் உள்ளத்தில் உள்ள உணர்ச்சிகளை தெள்ளத் தெளிவான சொற்களால் எடுத்துரைப்பதே கவிதையாகும்.

**“உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்**
**உருவெடுப்பது கவிதை தௌ;ளத்**
**தெளிந்த தமிழில் - உண்மை**
**தெளிந்துரைப்பது கவிதை”**

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கவிதைக்கு விளக்கமளிக்கிறார். அதேப்போன்று,

மு. மேத்தா, ஊர்வலம் என்ற நூலில்,

**“ இலக்கணச் செங்கோல்**
**யாப்புச் சிம்மாசனம்**
**எதுகைப் பல்லக்கு**
**மோனைத் தேர்கள்**
**தனிமொழிச் சேனை**
**பண்டித பவனி”**

என்ற கவிதை வரிகளில் புதுக்கவிதைக்குரிய இலக்கணத்தோடு மரபுக்கவிதை பற்றியும் தெளிவாகக் கூறுகிறார்.

www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

❖ "கவிதை என்பது ஒலிநயம் அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பு. அஃது இன்பத்தை உண்மையுடன் இணைப்பது. அறிவுக்குத் துணையாகக் கற்பனையைக் கொண்டிருப்பது" என்று திரு ஜான்ஸன் அவர்கள் கவிதையைப் பற்றிக் கூறுகிறார்.

**கவிதை – வகைகள்**

❖ அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரையில் கவிதைகள் படைக்கப்பட்டு வருகின்றன. அவை இரண்டு வகைப்படுத்தப்படுகின்றன.

1. **மரபுக்கவிதை**
2. **புதுக்கவிதை**

**மரபுக்கவிதை**

❖ இலக்கண வரையறையைப் பின்பற்றி எழுதப்படுவது மரபுக்கவிதை எனப்படும். கவிதை வகைமைகளில் தொன்மையானதாக அறியப்படுவது மரபுக் கவிதையாகும். தமிழில் உள்ள யாப்பிலக்கண நூல்கள் மரபுக் கவிதை இயற்றும் முறையை எடுத்துரைக்கத் தோன்றியனவேயாகும்.

**மரபுக்கவிதையின் தோற்றம்**

❖ தமிழ்மொழியில் முழுமையாகக் கிடைக்கக்கூடிய முதல் நூல் என்ற பெருமைக்குரியது தொல்காப்பியம் என்ற இலக்கண நூலே ஆகும். இந்நூல் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகிறது.

❖ இலக்கணம் என்பது இலக்கியத்திலிருந்து எடுக்கப்படுவதே ஆகும். அதாவது 'எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவதுபோல இலக்கியத்திலிருந்து எடுக்கப்படுவது இலக்கணம்' ஆகும். இதன்மூலம் தொல்காப்பியர் காலத்திற்கு முந்தைய காலத்திலேயே இலக்கிய நூல்கள் இருந்திருத்தலை அறியலாம். இவற்றைக் கொண்டு பார்க்கும்பொழுது செய்யுள் என்ற கவிதை வடிவம் 5000க்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கும் முற்பட்ட தொன்மையுடையது என்பதனை அறியலாம்.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



**“தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்**

**சூழ்கலை வாணர்களும் - இவள்**

**என்று பிறந்தவள் என்றுண ராத**

**இயல்பின ளாம்எங்கள் தாய்”**

என்று தமிழ்த்தாயின் தோற்றம் குறித்து பாரதியார் பாடுவது, மரபுக்கவிதையின் காலத் தொன்மைக்குச் சான்றாக அமைகின்றது.

**மரபுக்கவிதை – பெயர்க்காரணம்**

- ‘தொன்றுதொட்டு வரும் தன்மையுடையது’ என்பதை ‘மரபு’ என்னும் சொல் உணர்த்தி நிற்கின்றது.
- யாப்பு வடிவத்திற்கு அடிப்படை சந்தமும் (Rhythm), தொடையும் (Rhyme) ஆகும்.
- சந்தம் என்பது அழுத்தமான ஓசையும் அழுத்தமில்லா ஓசையும் சீர்பட அடுக்கி வருவதைப் பொறுத்தது.
- அழுத்தமுள்ள ஓசையும் அழுத்தமில்லாத ஓசையும் மாறி மாறி இடம்பெறுவதால் ஒரு நயமான ஓசை பிறக்கிறது.
- மரபுக் கவிதைகள் ஒரு காலத்தில் இசையோடு பாடப்பட்டிருக்க வேண்டும்.
- இனிய ஓசைநயம் அமைந்த பாடல்களைக் கேட்டுப் பழகியவர், அதே ஓசையில் பாடல் புனைய முயன்று பிறர் படிக்கவும் இவ்வாறே புதியன படிக்கவும் பாடல் அமைப்பினை எழுத்து, அசை, சீர் என அமைத்து ஒழுங்குபடுத்தியிருத்தல் வேண்டும்.
- குறில், நெடில், ஒற்று என்னும் எழுத்துகளால் அசையும் அசையால் சீரும் சீரால் அடியும் அடியால் பாடலும் முறையே அமைகின்றன.
- சீர்களுக்கு இடையிலான ஓசை தளை எனப்படுகின்றது.
- சீர், தளை, அடி ஆகியவற்றின் வேறுபாட்டால் பா வகைகள் அமைகின்றன.
- இவ்விதம் யாப்பிலக்கணம் தோன்ற, அடுத்தடுத்து வந்தவர்கள் அதனை அடிப்படையாகக் கொண்டே கவிதை புனையத் தொடங்கியிருத்தல் வேண்டும்.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- இவ்வாறுதான் பாடப்படவேண்டும் என்னும் வரையறை இருப்பதால் சிதறாத வடிவமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.
- காலந்தோறும் இம்முறை பின்பற்றப்பட்டும் வருகிறது.
- பாடுபொருளில் புதிய யுக்தி இருந்தாலும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்பட்டதால் அது மரபுக்கவிதையாகிறது.
- **வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா** என்னும் நால்வகை பா இலக்கண வகையைப் பின்பற்றி மரபு மீறாமல் தொன்றுதொட்டு கவிதை எழுதப்பட்டதால் மரபுக்கவிதை என்னும் பெயர்பெற்றது.

**மரபுக்கவிதையின் பாடுபொருள்**

- மரபுக்கவிதையின் பாடுபொருளானது காலந்தோறும் மாறுபட்டு வருகின்றது. கால அடிப்படையில் மரபுக்கவிதையின் பாடுபொருள் பின்வருமாறு அமைகின்றது.
- சங்ககாலத்தில் மரபுக்கவிதை மன்னர்களோடு தொடர்புடையதாக இருந்தது.
- மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை, ஆட்சிச்சிறப்பு ஆகியவற்றைப் புகழ்வதாகவும் துணிச்சலுடன் புலவர்கள் மன்னரை அறிவுறுத்துவதாகவும் அமைந்திருந்தன.
- சங்கம் மருவிய காலகட்டத்தில் சமண, பௌத்த சமயங்களின் தாக்கத்தால் மக்களுக்கு கூறக்கூடிய அறக்கருத்துக்களே பாடுபொருளாக அமைந்தன. காப்பியங்களும் தோன்றின.
- இடைக்காலத்தில் பக்தி இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகப் பாடுபொருள் இறைவனைப் பற்றியதாகவும் திருத்தலங்களின் சிறப்பினை உணர்த்துவதாகவும் அமைந்தது.
- சித்தர் இலக்கியம், தத்துவம், மருத்துவம், அரசர்களையும் குறுநில மன்னர்களையும் மகிழ்வுறுத்தும் சிற்றிலக்கியங்கள் என அடுத்தடுத்த காலகட்டங்களில் பாடுபொருள் அமைந்தது.
- இன்றைய நிலையில் கவியரங்கம், வரையறுக்கப்பட்ட தலைப்பு, இயற்கை, சமூக அவலம் என மரபுக்கவிதையின் பாடுபொருள் அமைந்திருக்கின்றது.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



### மரபுக்கவிதை படைப்பாளர்களும் நூல்களும்

- ❖ சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள் என்னும் யாவும் மரபுக்கவிதையேயாகும்.
- ❖ கவிதை உலகில் தனக்கென தனித்த இடத்தினைக் கொண்டிருப்பவர் பாரதியார் அவர்கள். பாரதியாரைத் தொடர்ந்து பலர் மரபுக்கவிதைகளை இயற்றியுள்ளனர்.
  - ➢ பாரதியார் – **கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம்**
  - ➢ பாரதிதாசன் - **பாண்டியன்பரிசு, இருண்டவீடு, குடும்பவிளக்கு, அழகின்சிரிப்பு**
  - ➢ கவிமணி – **ஆசியஜோதி, மருமக்கள்வழி மான்மியம்**
  - ➢ நாமக்கல் கவிஞர் – **தமிழன் இதயம், கவிதாஞ்சலி**
  - ➢ கண்ணதாசன் - **இயேசுகாவியம், மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி**
  - ➢ சுத்தானந்த பாரதியார் – **பாரதசக்தி மகாகாவியம், தமிழ்த்திருப்பாவை**
  - ➢ சுரதா – **தேன்மழை, துறைமுகம்**
  - ➢ அழ.வள்ளியப்பா – **மலரும் உள்ளம், பாட்டிலே காந்தி**
  - ➢ வாணிதாசன் - **கொடிமுல்லை**
  - ➢ வைரமுத்து – **வைகறை மேகங்கள்**

### 9.1.1 மக்கள் இயக்கம்

- ❖ மக்கள் இயக்கம் என்பது மக்களை ஒன்றுதிரட்டும் ஒரு அமைப்பைக் குறிப்பதாகும்.
- ❖ மக்களை ஒன்றுதிரட்ட தகவல் தொடர்பு தேவைப்படுகிறது.
- ❖ ஆரம்ப காலக்கட்டத்தில் ஒரு கருத்தை அல்லது செய்தியைப் பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் பிற்காலத்தில் மக்களை ஒன்று திரட்டும் ஒரு கருவியாக மாறியது.
- ❖ அத்தகைய சாதனமாக இதழ்கள் செயல்பட்டது.
- ❖ அவ்விதழ்களில் இடம்பெறும் கவிதைகள் மக்களின் அறியாமை, மூடநம்பிக்கை போன்றவற்றைப் போக்கும் விதமாகவும், விடுதலை உணர்வு தூண்டக்கக்கூடியதாகவும் அமைந்தன.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- ❖ கவிதைகளின் மூலமாக விழிப்புணர்வுகளை ஏற்படும் கருவியாக கவிஞர்கள் பயன்படுத்தினர்.
- ❖ உதாரணமாக பாரதியார் தன் கவிதையின் மூலமாக இந்திய நாட்டு மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஏற்படுத்தி ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராட்ட வேண்டு;ம் என்ற உணர்வை ஏற்படுத்தினார். சான்றாக,

**"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"**

**"ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம்**

**அடைந்துவிட்டோமென்று"**

போன்றவற்றைக் கூறலாம்.

- ❖ எனவே மக்கள் இயக்கம் என்பது மக்களை இயக்கக் கூடிய ஓர் அமைப்பாகும்.
- ❖ தற்காலத்தில் மக்களுக்குத் தொண்டுகள் செய்வதற்கென்று இத்தகைய மக்கள் இயக்கம் இருப்பதைக் காணலாம்.
- ❖ அவற்றின் மூலமாக பல்வேறு மக்கள் ஒன்றுதிரட்டு மக்களுக்கு தங்களாலான தொண்டுகளைச் செய்து வருகின்றனர்,

**வினாக்கள்**

1. உள்ளத்துள்ளது கவிதை என்று கவிதைக்கான இலக்கணத்தைக் கூறியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C)கவிமணி D) மு. மேத்தா

2. கவிதை என்பது ஒலிநயம் அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பு. அஃது இன்பத்தை உண்மையுடன் இணைப்பது. அறிவுக்குத் துணையாகக் கற்பனையைக் கொண்டிருப்பது" என்று கூறியவர் யார்?

A) எல்லீசர் B) ஜான்ஸன்

C)கவிமணி D) வால்ட்விட்மன்

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



3. பொருத்துக

a) கவிதாஞ்சலி — 1) வாணிதாசன்

b) துறைமுகம் — 2) நாமக்கல் கவிஞர்

c) கொடிமுல்லை — 3) அழ.வள்ளியப்பா

d) பாட்டிலே காந்தி — 4) சுரதா

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 3 | 4 | 2 | 1 |

4. 'எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவதுபோல இலக்கியத்திலிருந்து எடுக்கப்படுவது ------------;' ஆகும்

A) இலக்கணம் B) கவிதை

C) பண்பாடு D) கலைகள்

## 9.1.2 பாரதியார்



- பாட்டுக்கொரு புலவன் பாரதி **11.12.1882 -** இல் எட்டயபுரத்தில் **சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மைக்கு** மகனாகத் தோன்றினார்.
- சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்தவர்.
- ஐந்து வயதிலேயே தன் தாயினை இழந்து தன்னுடைய பாட்டி பாகீரதி அம்மாவால் வளர்க்கப்பட்ட பாரதியார் ஏழு வயது முதலே கவிதையில் கர்ஜிக்கத்தொடங்கினார்.
- இயற்பெயர் **"சுப்பிரமணியன்"** 11-ஆம் வயதில் கவிபுனை ஆற்றல் காரணமாகப் **"பாரதி"** என்ற பட்டம் பெற்றார்.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY



- **எட்டயபுரமன்னரே** இப்பட்டத்தை வழங்கினார். அதன்பின்னரே இவர் 'சுப்பிரமணிய பாரதியார்' என்று அழைக்கப்பட்டார்.
- திருநெல்வேலியில் உள்ள இந்து கல்லூரியில் 9ஆம் வகுப்புவரை பயின்ற பாரதியார் தமிழ் அறிஞர்களோடும் பண்டிதர்களோடும் சொற்போரில் ஈடுபட்டார். அதனால் இவரின் தமிழ்ப்புலமை அதிகரித்தது.
- 1897ஆம் ஆண்டு ஜீன் மாதம் 15ஆம் தேதி 14 வயது நிறைவடைந்த பாரதி 7 வயது நிரம்பிய செல்லம்மாளை மணம்புரிந்தார்.
- இதனாலேயே பின்னாளில் குழந்தைத் திருமணத்திற்கு எதிராகப் பொங்கியெழுந்தார்.



- 16 வயதில் தன்னுடைய தந்தையையும் இழந்த பாரதியார் வறுமையில் வாடினார்.
- பின்னர் **காசிக்குச்** சென்று அங்குள்ள அலகாபாத் பல்கலைக்கழகத்தில் **சமஸ்கிருதம், இந்தி** ஆகிய மொழிகளைக் கற்றார். ஆங்கிலம் மற்றும் வங்க மொழிகளிலும் தனிப்புலமை பெற்றார்.
- 4ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகம் திரும்பிய பாரதியார் எட்டையபுர அரசவைக்கவிஞரானார்.
- இவரின் எழுத்துக்கள் முதன்முதலில் 1903ஆம் ஆண்டு அச்சில் வந்தது.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- ஆங்கிலக்கவிஞன் ஷெல்லியின் மீது கொண்ட பற்றால் தன் பெயரினை **ஷெல்லிதாசன்** என மாற்றிக் கொண்டார்.
- 1904 – ஆம் ஆண்டு மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் சிறிது காலம் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.
- பின்னர் சென்னை **சுதேசமித்திரன்** நாளிதழில் துணைப்பேராசிரியரானார்.
- தீராத சுதந்திர தாகத்தால் 1905ஆம் ஆண்டு அரசியலில் ஆர்வம் காட்டினார். அதனால் வ.உ.சி போன்றோரோடு தொடர்பு ஏற்பட்டது.
- கல்கத்தாவில் **தாதாபாய் நவ்ரோஜி** தலைமையில் நடைபெற்ற மகாசபை கூட்டத்தில் பங்கேற்றார்.
- அங்கு விவேகானந்தரின் சிஷ்யரான **நிவேதிதா தேவியாரைச்** சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரையே தன் ஞானகுருவாக ஏற்றுக் கொண்டார் பாரதியார்.
- **இந்தியா** என்ற வார இதழின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றார். **பாலபாரதம்** என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.




- இந்தியா இதழில் சுதந்திர வேட்கையை எழுப்பக்கூடிய கவிதைகளை வெளியிட்டார்.
- இது மக்களிடையே தாக்கத்தினை ஏற்படுத்த பிரிட்டிஷ் அரசு பாரதியாருக்கு கைதுவாரென்ட் பிறப்பித்தது.
- இதனையறிந்த பாரதியார் தன் நண்பர்களின் வேண்டுகோளின்பேரில் பாண்டிச்சேரியில் தலைமறைவாக வாழ்ந்தார்.
- 1908ஆம் ஆண்டு முதல் இந்தியா பத்திரிக்கை புதுவையிலிருந்து வெளிவந்தது.
- இதனை கவனித்த பிரிட்டிஷ் அரசு அதற்கும் தடை விதித்தது.
- அந்த காலகட்டத்தில்தான் பாரதியார் **கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம்** போன்ற கவிதைகளை இயற்றினார்.
- 1912ஆம் ஆண்டு பகவத் கீதையை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- 1918 ஆம் ஆண்டு பாண்டிச்சேரியிலிருந்து வெளியேறி பிரிட்டிஷ் எல்லையில் காலடி வைத்தவுடன் கைதுசெய்யப்பட்டு, 34 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.
- விடுதலையானதும் தம் மனைவியின் ஊரான கடையம் என்னும் ஊரில் குடியேறினார்.
- இக்காலகட்டத்தில் வறுமையில் மிகவும் வாடினார் பாரதியார். ஆனாலும் அனைவருக்கும் உணவிடுதல் வேண்டும் என்று கவிதை பாடினார்.
- 1919ஆம் ஆண்டு சென்னைக்கு மீண்டும் வந்த பாரதியார் மூதறிஞர் இராஜாஜியின் இல்லத்தில் மகாத்மா காந்தியடிகளைச் சந்தித்தார்.
- தங்கம்மாள், சகுந்தலா ஆகியோர் இவரின் பிள்ளைகளாவர்.
- 1921 - சூலையில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானையால் தூக்கி எறியப்பட்டார்.
- உடல்நலம் குன்றி 11.09.1921 அன்று உயிர் துறந்தார்.
- பாரதியார் அவர்கள் 39 ஆண்டுகளே உயிர் வாழ்ந்தார்.



**இயற்றிய நூல்கள்**

- **குயில் பாட்டு, கண்ணன்பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி, தேசிய கீதங்கள், ஞானப்பாடல்கள், விடுதலைப்பாடல்கள், பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி, விநாயகர் நான்மணிமாலை, ஞானரதம்** போன்றவை குறிப்பிடத் தக்கவை ஆகும்.
- பகவத் கீதையையும் மொழிபெயர்த்துள்ளார்.
- பாரதியார் பிறந்த ஊரான எட்டயபுரத்தில் அவருக்கு மணிமண்டபமும் திருவுருவச்சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com




- பாரதியார் வாழ்ந்த வீட்டினை பாரதியார் நினைவு இல்லமாக மாற்றி அதனை இன்றுவரை தமிழ்நாடு அரசு பராமரித்து வருகிறது.
- 1949இல் பாரதியாரின் நூல்கள் யாவும் நாட்டுடமை ஆக்கப்பட்டது.

**பாரதியாரின் மரபுக்கவிதைகள்**

- மரபுக்கவிதை, பிற்காலத்தில் **தெம்மாங்கு, சிந்து, கண்ணி** முதலிய சந்தங்களில் பாடப்பட்டுள்ளது.
- பாரதி மரபுக்கவிதையில் பல பாடல்கள் பாடியுள்ளார்.
- **நடிப்புச் சுதேசிகள்** என்ற தலைப்பில் பாரதி, கிளிக்கண்ணிகள் என்ற சந்தத்தில் பாடியுள்ளார்.
- **கிளிக்கண்ணி** என்பது பெண்கள் தினைப்புனம் காக்கச் செல்லும்போது, தினையைக் கிளிகள் உண்ணாதவாறு வில்லுக்கட்டையில் கல்வைத்து, கிளியை ஓட்டியபடி பாடும் பாவகை.
- பாரதியார் இந்தச் சந்தத்தில் போலிச் சுதேசிகளை எள்ளி நகையாடிப் பாடுகிறார்.

**நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறமுமின்றி**

**வஞ்சனை சொல்வாரடி ! - கிளியே**

**வாய்ச்சொல்லில் வீரரடி... !**



- பாரதியாருக்குப் பாடுபொருளாக அமைந்தவற்றுள் இந்திய தேசியமும் ஒன்று.
- "எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை" என்று தம் கவிதைகள் மூலமாக, இந்திய தேசியத்தைப் பாடியவர் பாரதி.
- தேசப்பற்று மக்களிடையே ஏற்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்தியவர்.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

**பாரததேசம் என்று பெயர் சொல்லுவார் - மிடிப்**

**பயம் கொள்ளுவார் துயர்பகை வெல்லுவார் - என்றும்**

**வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம் - அடி**

**மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம் - என்றும்**

இதில் இந்திய தேசியத்தை முன்மொழிந்தவர் பாரதி.




- ✓ பாரதியின் காலம் தேசியப் போராட்டக்காலம்.
- ✓ நாடு அந்நியப்பிடியில் சிக்குண்டு வாழ்ந்த காலம்.
- ✓ எனவே நாட்டின் அடிமை விலங்கை உடைக்க, கவிதையைக் கருவியாகப் பயன்படுத்தினார் பாரதி.
- ✓ நாட்டு விடுதலையோடு பெண் விடுதலையும் வேண்டிய மகாகவி.
- ✓ மானுட விடுதலை பெண் விடுதலையோடு தொடர்புடையது என முழங்கினார்.
- ✓ பாரதியார் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து கவிதைகள் எழுதியதால் அவரைக் கைது செய்ய உத்தரவிட்டது.
- ✓ எனவே பாரதியார் தன் நண்பர்களின் தூண்டுதலால் புதுவையில் தலைமறைவானார்.
- ✓ இப்போது அவர் இயற்றிய பாஞ்சாலி சபதம் என்ற நூல் **இந்திய தாயை பாஞ்சாலியாக** உருவகப்படுத்தி இந்திய விடுதலை உணர்வை ஊட்டும்வகையில் அமைத்து படைத்துள்ளார்.

**வினாக்கள்**

1. பாரதியார் தன்னுடைய ஞானகுருவாக ஏற்றுக்கொண்டவர் யார்?

A. விவேகானந்தர் B. நிவேதிதை

C. இராஜாஜி D. காந்தியடிகள்



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



2. வலிமையற்ற தோள்கள் போக வேண்டும் எனப்பாடியவர் யார்?

A. பாரதியார் B. பாரதிதாசன்

C. சுரதா D. காந்தியக்கவிஞர்

3. பாரதி எங்கு சென்று வடமொழி பயின்றார்?

A. இராமேஸ்வரம் B. உத்ரபிரதேசம்

C. காசி D. மதுரா

4. பாரதியின் தேசிய காவியமாகக் கருதப்படுவது எது?

A. கண்ணன் பாட்டு B. குயில்பாட்டு

C. பாஞ்சாலி சபதம் D. புதிய ஆத்திச்சூடி

5. பாரதியார் தொடங்கி நடத்திய பத்திரிக்கை எது?

A. ஞானரதம் B. இந்தியா

C. சுதேசமித்திரன் D. வானம்பாடி

## 9.1.3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

கவிமணி அவர்கள் எல்லா வயதினருக்கும் ஏற்ற வகையில் பாடல்களைத் தந்தவர். அவர் தமிழை வளர்த்தாரேயன்றி தமிழைக் கொண்டு தம்மை வளர்த்துக் கொள்ள முயலவில்லை. அரசியலுக்கும் சாதி மத பேதங்களுக்கும் அப்பாற்பட்டவர். பிறப்பால் பிள்ளை வகுப்பைச் சேர்ந்தவராயினும் தமது பெயருக்குப் பின்னால் அவர் பிள்ளை என்று போட்டுக் கொள்ள மாட்டார்.




- நற்பண்புகளின் உறைவிடமாய்த் திகழ்ந்த கவிமணி அவர்கள் 1876-ஆம் ஆண்டு ஜூலை 27-ஆம் நாள் பிறந்தார்.
- குமரி மாவட்டத்தைச் சேர்ந்த தேரூரில் பிறந்தார்.
- தந்தை சிவதாணுப் பிள்ளை, தாய் ஆதிலட்சுமி அம்மையார் ஆவர்.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- கவிமணி தம்முடைய ஆரம்பக்கல்வியைப் பிறந்த ஊரான தேரூரில் உள்ள தொடக்கப் பள்ளியில் தொடங்கினார்.
- பிறகு கோட்டாறு என்னும் ஊரில் உள்ள ஆங்கிலப் பள்ளியில் பயின்றார்.
- உயர்கல்வியை நாகர் கோவில் ஸ்காட் கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து பயின்றார்.
- அவருக்குப் பத்து வயதானபோதே தந்தையார் காலமானார். ஆனாலும், தாயின் ஊக்குவிப்புடன் தொடர்ந்து கற்றார்.

### சிறப்பு பெயர்கள்

**கவிமணி, குழந்தை கவிஞர், தேவி, நாஞ்சில் நாட்டு கவிஞர், தழுவல் கவிஞர்**

### இயற்றிய நூல்கள்

அழகம்மை ஆசிரிய விருத்தம் (கவிமணி இயற்றிய முதல் நூல்)

- ஆசிய ஜோதி
- உமர்கய்யாம் பாடல்கள்
- மலரும் மலையும்
- மருமக்களின் செல்வம்
- தேவியின் கீர்த்தனைகள்.
- குழந்தை செல்வம்
- கவிமணியின் உரைமணிகள்
- தீண்டாதார் விண்ணப்பம்
- காந்தளூர் சாலை




### கவிமணியின் பணி

- இளமைப் பருவத்தில் கோவில் ஒன்றில் கொடை காணச் சென்றார் அந்த இளம் புலவர் தேசிக விநாயகம் பிள்ளை. அங்கே ஆட்டினைப் பலி கொடுக்கும் காட்சியைக் கண்ட தேசிக விநாயகம் பிள்ளைக்கு நெஞ்சம் உருகியது. அந்த உருக்கத்தில் அவர் பாடிய கவிதை மொழிகள், கொல்லாமையை போதித்தன.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- இருபத்தி நான்கு வயதில் புத்தேரி ஊரில் உமையம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.
- நாகர்கோவில் நகரின் கண்கோட்டாற்றில் தொடக்கப் பள்ளி ஆசிரியராக பணியாற்றினார்.
- ஆங்கிலப் புலமையும் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் அவரைக் கல்லூரி ஆசிரியராகப் பணி உயர்வுக்குக் கொண்டு சேர்த்தன.




- குழந்தைகளுக்கு ஏற்ற பாடல்கள் தமிழில் பல உண்டு. ஆயினும் பிள்ளைகளே பொருள் புரிந்து பாடும் பாடல்களே தேசிக விநாயகம் பிள்ளையிடம் பிறந்தது.
- உலகெங்கும் தமிழ்ப்பாட்டைப் படிக்கும் பாடகர்களுக்குச் சொல் அமுதாய் இனிக்கும் எளிமையும் இனிமையும் நிறைந்த மலரும் மாலையும் என்ற கவிதைத் தொகுப்பை கவியின் மணிமொழிகளாக கவிமணி வழங்கினார்.
- அதனால் தமிழறிஞர்கள் குழு அவருக்கு **"கவிமணி"** என்ற பட்டத்தை வழங்கியது.
- அத்தொகுதியில் **"அப்பம் திருடின எலி", "பசுவும் கன்றும்", "பொம்மைக் கலியாணம்"** போன்றவை இளம் பிள்ளைகளுக்கு மகிழ்வைத் தருவதோடு உலக நடைமுறைiயும் ஊட்டவல்லன.
- நல்லன நோக்கி அக்குழந்தைகள் நடை செலுத்த வழி சமைத்துக் கொடுப்பன அக்கவிதை கொத்துக்கள்.
- அதன்பின் திருவனந்தபுரம் பெண்கள் போதனாமுறை பாடசாலையிலும், மகாராஜா பெண்கள் கல்லூரியிலும் பணியாற்றினார்.
- கவிமணி நல்ல நினைவாற்றல் உடையவர்.
- தமிழ் நூல்கள் பலவற்றைக் கற்றார். எதையும் ஓரிரு முறை படித்தாலே போதும், மறுமுறை பார்க்காமலே ஒப்புவிக்கும் திறன் அவரிடம் இயல்பாகவே இருந்தது.
- சிறுவயதிலேயே தமிழ் இலக்கியங்களை ஒன்றுவிடாமல் படித்துவிட்டார்.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

# 100 - வினாக்கள்

1.தம் வாழ்நாளில் பெற்ற பரிசுகள் அனைத்தையும் பணமாக்கி, திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் தன் தாயார் பெயரில் அறக்கட்டளையொன்றை நிறுவியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C)கவிமணி D) மு. மேத்தா

2. உள்ளத்துள்ளது கவிதை என்று பாடியவா யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C) கவிமணி D) மு.மேத்

3. புதுக்கவிதைக்குரிய ,லக்கணத்தோடு மரபுக்கவிதை பற்றியும் தெளிவாகக் கூறியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C) கவிமணி D) மு.மேத்தா

4. ‘பாரதி’ என்பதன் பொருள்

A) மலைமகள் B) கலைமகள்

C) தமிழ்மகள் D) அலைமகள்

5.பொருத்துக.

a) சுத்தானந்த பாரதியார் 1) பாட்டிலே காந்தி

b) சுரதா 2) தமிழ்த்திருப்பாவை

c) அழ.வள்ளியப்பா 3) வைகறை மேகங்கள்

d) வைரமுத்து 4) துறைமுகம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 3 | 4 | 2 | 1 |

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

6. ஷெல்லிதாசன் என்ற புனைபெயர் கொண்ட கவிஞர் யார்?

A) முடியரசன் B) கவிமணி

C) பாரதியார் D) சுரதா

7. பாரதி நடத்திய ஆங்கில ,தழ் எது?

A) ,ந்தியா B) சுதேசமித்திரன்

C) பாலபாரதம் D) சுதந்திரம்

8. 'தொன்றுதொட்டு வரும் தன்மையுடையது' என்பதைக் குறிக்கும் சொல் எது?

A) பழமை B) முதுமை

C) மரபு D) வழக்கம்

9. பாரதியாரின் நூல்கள் நாட்டுடமையாக்கப்பட்ட ஆண்டு எது?

A) 1947 B) 1948

C) 1949 D) 1950

10. பாரதியார் தொடங்கி நடத்திய பத்திரிக்கை எது?

A) ஞானரதம் B) இந்தியா

C) சுதேசமித்திரன் D) வானம்பாடி

11. "எல்லோரும் ஓர் குலம்| எல்லோரும் ஓர் நிறை" என்று தம் கவிதைகள் மூலமாக, ,ந்திய தேசியத்தைப் பாடியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C)கவிமணி D) மு. மேத்தா

12. "தேடிப்பார்த்தாலும் சாதி தெரிவதுண்டா-அப்பா?" என்று பாடியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C)கவிமணி D) மு. மேத்தா

13. பொருத்துக

a) light of asia 1) குழந்தை

b) உமயர்கய்யாம் பாடல் 2) ஆசியஜோதி

c) baby 3) கவிமணி

d) பொம்மைக் கலியாணம் 4) ரூபாயைத்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 3 | 4 | 2 | 1 |

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



14. கூற்று : அண்ணாமலையார் பணத்துக்குப் பதில் வெள்ளிப் பாத்திரங்களை வாங்கி தக்கார்

மூலம் கவிமணியின் ,ல்லத்திற்குச் சென்று சேருமாறு செய்து விட்டார்.

காரணம்: செட்டிநாட்டரசரின் பெருந்தன்மைக்கு மதிப்பளிக்கும் வகையில் அப்போதைக்கு பண

முடிப்பைப் பெற்ற கவிஞர் பிற்பாடு தக்கார் மூலம் திருப்பி அனுப்பிவிட்டார்.

A) கூற்று சரி, காரணம் தவறு
B) கூற்று மற்றும் காரணம் சரி
C) கூற்று தவறு காரணம் சரி
D) கூற்று மற்றும் காரணம் தவறு

15. குமரி மாவட்டத்தை கேரளாவுடன் ,ணைக்கும் முயற்சியை அவர் முறியடித்தவர் யார்?

A) பாரதியார்
B) பாரதிதாசன்
C)கவிமணி
D) மு. மேத்தா

16. பொருத்துக.

a) பிசிராந்தையார் 1) பெரியார்

b) புரட்சிக்கவி 2) சாகித்திய அகாடமி விருது

c) புரட்சிக்கவிஞர் 3) பாரதிதாசன்

d) முல்லைக்காடு 4) அண்ணா

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 3 | 4 | 2 | 1 |

17. "மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம் ஓடுவதென்றோ ஒழிவதன்றோ" என்று பாடியவர் யார்?

A) பாரதியார்
B) பாரதிதாசன்
C)கவிமணி
D) மு. மேத்தா

18. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களின் உடைமைகள் காட்சிக்கு வைக்கப்பெற்றுள்ள இடம் எது?

A) நாமக்கல்
B) தருமபுரி
C) சென்னை
D) சேலம்

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

19. அரவணை சுந்தரம் என்ற நூல் எந்த வகையைச் சார்ந்தது?

A) கவிதை B) கட்டுரை

C) நாடகம் D) நாவல்

20. சென்னையிலுள்ள அரசு தலைமைச் செயலக பத்து மாடிக் கட்டிடத்திற்கு யாருடைய பெயர் சூட்டியுள்ளது?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C)கவிமணி D) நாமக்கல் கவிஞர்

21. எழுத்துக்கள் முதன்முதலில் அச்சில் வந்த ஆண்டு எது?

A) 1902 B) 1903

C) 1904 D) 1905

22. நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறமுமின்றி வஞ்சனை சொல்வாரடி ! – கிளியே வாய்ச்சொல்லில் வீரரடி... ! என்று பாடியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C)கவிமணி D) மு. மேத்தா

23. 'கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்" என்று பாடியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C)கவிமணி D) நாமக்கல் கவிஞர்

24. பொருத்துக.

a) பாரதியார் திருமணம் செய்த ஆண்டு 1) 1918

b) பாரதியார் பிறந்த ஆண்டு 2) 1897

c) பாரதியார் கைதுசெய்யப்பட்ட ஆண்டு 3) 1921

d) பாரதியார் ,றந்த ஆண்டு 4) 1882

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 3 | 4 | 2 | 1 |



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**TEACHER'S CARE ACADEMY**
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# UG TRB
# தமிழ்
## 2022-2023



## UNIT-10
## இதழியலும் கணினித் தமிழும்.

*Your Success is Our Goal....*

www.Padasalai.Net



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy : 76399 67359 Salem : 93602 68118


# UG TRB - 2022 - 2023

# தமிழ்

## 10. இதழியலும் கணினித் தமிழும்

பொருளடக்கம்


| வ.எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 10 | **இதழியல் - சொல் விளக்கம்:** | **1** |
| 10.1 | **மனித வாழ்வியலில் இதழ்களின் பங்கு** | **2** |
| 10.1.1 | இதழியல் கலை – அறிவியல்: | 3 |
| 10.1.2 | இதழியல் அறிவியியல் | 4 |
| 10.1.3 | இதழியலும் மக்களாட்சியும்: | 4 |
| 10.2 | **தமிழ் மொழி வளர்ச்சியில் இதழ்களின் பங்கு** | **7** |
| 10.2.1 | அச்சு இதழ்கள் | 8 |
| 10.2.2 | நாளிதழ்களில் தமிழ் வளர்ச்சி | 8 |
| 10.2.3 | பருவ இதழ்களில் தமிழ் வளர்ச்சி | 9 |
| 10.2.4 | சிற்றிதழ்களில் தமிழ் வளர்ச்சி | 10 |
| 10.3 | **தமிழ் இதழ்களின் தோற்றம் வளர்ச்சி:** | **11** |
| 10.3.1 | உலகின் காகிதமும் அச்சுக்கலையும் | 11 |
| 10.3.2 | உலகின் அச்சு இதழ்கள் | 11 |
| 10.3.4 | இந்திய இதழியல் | 12 |
| 10.3.5 | இந்தியாவில் அச்சுக்கலையும் இதழ்களும் | 12 |
| 10.3.6 | பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்தியரின் இதழியல் | 13 |
| 10.3.7 | இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவில் இதழியல் | 14 |
| 10.3.8 | தமிழில் இதழியல் வளர்ச்சி | 15 |
| 10.3.9 | தமிழகத்தில் இதழ்களின் வளர்ச்சி | 18 |
| 10.3.10 | இக்காலத் தமிழ் இதழ்கள் | 20 |
| 10.4 | **தமிழில் மாத (திங்கள்) இதழ்கள்** | **22** |

www.Padasalai.Net www.Trbtnpsc.Com




| | | |
|---|---|---|
| 10.5 | **வாரஇதழ்கள்** | **29** |
| 10.5.1 | இக்கால நாளிதழ்க்ள்<br>➢ தினமணி<br>➢ தினத்தந்தி<br>➢ தினமலர் | 32 |
| 10.6 | **இதழியல் மொழி நடை** | **36** |
| 10.6.1 | தமிழ் இதழியல் நடை வளர்ச்சி | 37 |
| 10.6.2 | மொழி நடை நூல் (Style Book): | 37 |
| 10.6.3 | தனி நடை | 37 |
| 10.6.4 | பிழையற்ற மொழி நடை | 38 |
| 10.6.5 | சிறப்புச் தேர்ச்சி | 38 |
| 10.7 | **தலையங்கம்** | **39** |
| 10.7.1 | தலையங்கத்தின் பொருள், | 40 |
| 10.7.2 | தலையங்கத்தின் வகை | 40 |
| 10.7.3 | தலையங்கம் எழுதுபவர் | 40 |
| 10.7.4 | சிறந்த தலையங்கம் | 41 |
| 10.7.5 | தலையங்கம் எழுதுவோரின் பண்புகள் | 41 |
| 10.7.6 | தலையங்த்தின் பயன்பாடுகள் | 42 |
| 10.7.7 | நல்ல தலையங்கத்தின் இயல்புகள் | 42 |
| 10.7.8 | தலையங்கத்தின் அமைப்பு | 43 |
| 10.8 | **விளம்பரங்கள்** | **44** |
| 10.8.1 | விளம்பரம் - சொல் விளக்கம் | 44 |
| 10.8.2 | விளம்பரத்தின் தோற்றம்: | 45 |
| 10.8.3 | விளம்பரத்தின் பணிகள் | 45 |
| 10.8.4 | விளம்பரத்தின் நன்மை தீமைகள் | 45 |
| 10.8.5 | விளம்பரத் தொடர்புகள் | 46 |
| 10.8.6 | விளம்பரங்களில் உவமை | 46 |
| 10.8.7 | ஆங்கிலச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களில் தரும் விளம்பரம் | 47 |
| 10.9 | **துணுக்குச் செய்திகள்** | **48** |
| 10.9.1 | துணுக்கு விளக்கம்<br>1. படத்துணுக்குகள்<br>2. நகைச்சுவை துணுக்குகள்<br>3. கதைத் துணுக்குகள்<br>4. துணுக்குத் தோரணம் | 48 |
| 10.10 | **செய்தி வடிவாக்கம்** | **51** |
| 10.10.1 | செய்தி விளக்கம் | 51 |
| 10.10.2 | செய்தியின் உள்ளடக்கம் | 51 |


TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com




| | | |
|---|---|---|
| 10.10.3 | எவை செய்திகள் | 52 |
| 10.10.4 | செய்தியின் இயல்புகள் | 53 |
| 10.10.5 | செய்திகளின் வகைகள் | 53 |
| 10.10.6 | செய்தி மூலங்கள் | 54 |
| 10.11 | **பக்கப்புனைவு** | **55** |
| 10.11.1 | நோக்கங்கள் | 56 |
| 10.12 | **தலைப்பு** | **57** |
| 10.12.1 | தலைப்பிடுவபர் | 58 |
| 10.12.2 | தலைப்பின் பணிகள் | 58 |
| 10.12.3 | தலைப்பின் வகைகள் | 59 |
| 10.13 | **இன்றைய தமிழ் இதழ்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்** | **61** |
| 10.13.1 | இதழ்களின் வகைகள் | 62 |
| 10.13.2 | இன்றைய இதழ்களின் நோக்கங்களின் அடிப்படையில் வளர்ச்சி நிலைகள் | 62 |
| 10.14 | **கணினித்தமிழ்** | **64** |
| 10.14.1 | கணினி | 64 |
| 10.14.2 | கணினி விளக்கங்கள் | 64 |
| 10.14.3 | கணினியின் இயல்புகள் | 65 |
| 10.14.4 | கணினியின் வளர்ச்சி நிலைகள் | 65 |
| 10.14.4.1 | முதலாம் தலைமுறை (1939 – 1956) | 67 |
| 10.14.4.2 | இரண்டாம் தலைமுறை (1956 – 1963) | 67 |
| 10.14.4.3 | மூன்றாம் தலைமுறை (1964 – 1971) | 68 |
| 10.14.4.4 | நான்காம் தலைமுறை (1971 - இன்றுவரை) | 68 |
| 10.14.4.5 | ஐந்தாம் தலைமுறை | 68 |
| 10.14.5 | கணினியின் வகைகள் | 68 |
| 10.14.6 | கணினியின் பயன்கள் | 71 |
| 10.14.7 | கணினியில் தமிழ்ப்பயன்பாடு | 73 |
| 10.14.8 | கணினித் தமிழின் தோற்றம் | 73 |
| 10.15 | **வன்பொருள்** | **75** |
| 10.16 | **மென்பொருள்** | **77** |
| 10.16.1 | மென்பொருள் விளக்கம் | 77 |
| 10.16.2 | நிரலாக்க மென்பொருள்கள் | 79 |
| 10.16.3 | இயக்க அமைப்பு மென்பொருள்கள் | 80 |
| 10.17 | **மின்னஞ்சல்** | **82** |
| 10.18 | **இணையமும் வலைதளமும்** | **84** |
| 10.18.1 | இணையத்தின் தோற்றம் | 84 |
| 10.18.2 | இணையத்தின் அடிப்படைகள் | 85 |
| 10.18.3 | இணையத்தின் வளர்ச்சி | 85 |


TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com




| | | |
|---|---|---|
| 10.18.4 | தமிழ் இணையம் தோற்றம் வளர்ச்சி | 86 |
| 10.18.5 | முதல் தமிழ் இணையம் | 86 |
| 10.18.6 | தமிழில் இணைய தள முகவரி | 87 |
| 10.18.7 | தமிழ் வளர்ச்சியில் இணைதளங்கள் | 88 |
| 10.19 | **கணினியில் தமிழ்** | **94** |
| 10.19.1 | தமிழ் எழுத்துருக்கள் | 95 |
| 10.19.2 | தமிழ் விசைப்பலைகை | 96 |
| 10.19.3 | தமிழ் மொழி வளர்ச்சி மென்பொருள்கள் | 99 |
| 10.19.3.1 | தமிழ் தட்டச்சு மென்பொருள் | 100 |
| 10.19.3.2 | தமிழ் பிழைத்திருத்தி மென்பொருள் | 102 |
| 10.19.3.3 | தமிழ் இயக்க முறைமைகள் மென்பொருள்கள் | 102 |
| 10.19.3.4 | தமிழ் கற்றல் கற்பித்தல் மென்பொருள்கள் | 104 |
| 10.19.3.5 | தமிழ் இலக்கண இலக்கிய மென்பொருள்கள் | 105 |
| | **வினாக்கள்** | **108** |


TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# இதழியலும் கணினித் தமிழும்

## இதழியல்




## 10. இதழியல் - சொல் விளக்கம்:




- ஜெர்னலிசம் **(Journalism)** - என்ற ஆங்கிலச்சொல்லின் தமிழாக்கம் 'இதழியல்'.
- Journalism **என்ற Diurnal** என்ற சொல் இலத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது.
- **Diurnal** என்றால் 'அன்று' 'அன்றாடம்' என்று பொருள்.
- Diurnal என்ற சொல்லில் இருந்து **Journal** என்ற சொல் தோன்றியது.
- Journal என்றால் 'அன்றாடம் நடத்தை எழுதி வைக்கும் ஏடு' என்று பொருள்.
- வாஸ்கோடகாமாவின் 1497-99 பயண நூல் **Journal of the First Voyage of Vasco da Gama to India.**
- சர்னல் Journal என்ற சொல் தற்போது இதழ்களைக் குறிக்கின்றது என்று கூறியவர் எழுத்தாளர் அ.மா.சாமி.
- இதழ் என்பதைக் குறிக்கும் வேறு பெயர்கள் - பத்திரிகை, செய்தித்தாள், தாளிகை.

## இதழியல் - இலக்கணம்:

- மனிதன் முதலில் செய்கையின் மூலமாகவும், மொழி வளர்ந்தபின் பேச்சின் துணையோடும், செய்திகளை அறிந்தும் பரப்பியும் வந்திருக்கின்றான்.
- எழுதக் கற்றுக் கொண்டவன் அச்சுப்பொறியைக் கண்டுபிடித்ததும், செய்திகளின் பரப்பளவு மிகுந்தது. போக்குவரத்து வளர்ச்சி, அறிவியல், தொழில்நுட்ப முன்னேற்றம் இவற்றின் விளைவாக, மின்னனுக் கருவிகளின் துணையோடு இலக்கண வரம்புக்குள்ளடங்காத அளவிற்கு இதழியல் வளர்ச்சி பெற்றுள்ளது.
- மக்கள் தொடர்பும் இதழியலின் உட்பிரிவாகுமளவிற்கு இத்துறை விரிவடைந்துள்ளது.
- செய்திகளைத் திரட்டுவதும் இதழியலின் தலையாய பணியாகும்.

## இதழியல் குறித்த அறிஞர்களின் கருத்து:

- 'மக்கள் நடைமுறை ஈடுபாடுள்ள விவரங்களை, செய்திகளை உண்மை மாறாமல் தொகுப்பதும், எழுதுவதும், செப்பனிடுவதும், பதிப்பிடுவது இதழியல்' – **Merriam Webster's International Dictionary.**

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- 'வெளியிடுவதற்காகவோ, ஒலிபரப்புவற்காகவோ எழுதுதல், அவ்றறை நடத்துதல் ஆகிய தொழிலே இதழியல் எனப்படும்' – **Chamber's 21st Century Dictionary**
- 'பொது நோக்குடைய இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்க கருவியாகும். அதன் மூலம்தான் இன்றைய சமுதாயம் அதனுடைய வழிகளை வகுத்துக் கொண்டும் மாற்றிக் கொண்டும் தெளிவாக வரையறுக்கப்பெற்ற வளரும் மனித நலன் என்னும் இலட்சியத்தை நோக்கி நடைபயில்கின்றது' – **Harold R.W.Benjamin.**
- 'இதழியல் என்பது, பொதுமக்கள் தொடர்புக்குரிய புதிய சாதனங்களைப் பயன்படுத்தி பொதுச் செய்திகளையும், பொதுக் கருத்துக்களையும், பொது பொழுதுபோக்குகளையும் முறையாக, நம்பிக்கைக்குரிய வகையில் பரப்புவதாகும்' – **G.F.Mott.**
- 'பத்திரிகைதான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகப்பெரிய காவலாளி' – **Lord Gray.**
- 'இதழியல் அவசரத்தில் பிறக்கும் இலக்கியம்' – Mathew Arnold.
  'பெரும்பாலும் ஒரு நாளிதழ் அறிவிப்பதும் கருதுவதும்தான், வரலாற்றுக்கு மூலப்பொருளாகவும், வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் மதிப்புடையதாகவும் அமைகின்றது' – **Frank Moraes.**

## 10.1 மனித வாழ்வியலில் இதழ்களின் பங்கு

- மனிதன் காலை எழுந்ததிலிருந்து உறங்கும் வரை செய்தி என்பது இன்று பலரின் பழக்கமாகிவிட்டது.
- ஆக்கல், அழித்தல் என்று எல்லாம் வல்லதாக இதழியல் மனிதன் வாழ்வில்; சொல்வாக்கும் பெற்றுவிட்டது.
- பத்திரிகையின் பேராற்றலை மக்கள் உணரும் வகையில் பைந்தமிழ்ப் பாவேந்தர் பாரதிதாசன், 'பத்திரிகை' என்ற கவிதையில் பத்திரிகையை வாழ்த்தி பாடியுள்ளார்.

**'காரிருள் அகத்தில் நல்ல**
**குதிரொளி நீதான்! இந்தப்**
**பாரிகைத் துயில்வோர் கண்ணிற்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்டை இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறிவாளர் நெஞ்சில்**
**பிறந்த பத்திரிகைப் பெண்ணே!'**

- இதழ்களுக்கும், செய்தித்தாட்களுக்கும் எழுதும் தொழிலைத்தான் முதலில் இதழியல் என்ற சொல் குறித்தது.
- இதழியல் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் நிகழ்வுகளை நொடிப்பு படங்களாக ஆவணப்படுத்தப்படுகிறது. மேலும் அந்நிகழ்வுகளின் போக்கையும் வழிப்படுத்தவும் மாற்றி அமைக்கவும் வலுக்கொண்டது.
- இதழ்கள் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- 'செய்திகளையும், கருத்துக்களையும் பரப்புகின்ற மக்கள் தொடர்பு நிறுவனமாக மாறியும், சமுதாய விழிப்புணர்ச்சியின் ஓர் உறுப்பாக அதுவே உருவெடுத்து, அதனுடைய நடவடிக்கைகளுக்கு அற அடிப்படையிலும், சட்ட நோக்கிலும் பெறுப்பேற்கும் அமைப்பாகவும் இதழியல் திகழ்கின்றது' என்று **ஆர் இராமச்சந்திரன்** ஐயர் கூறுகின்றார்.
- இதழியல் பொதுமக்களின் கருத்துக்களை உருவாக்கவோ, அழிக்கவோ வல்லதாக இருக்கின்றது. இதழ்கள் வாய்மை வழியில் **சென்று**, பொறுப்புணர்ச்சியோடு செயல்படாவிட்டால், அதனால் ஏற்படும் கேடுகள் அளவிடமுடியாதனவாக இருக்கும்.
- 'செய்தித்தாட்களை எப்பொழுதுமே படிக்காதவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்கள் இயற்கையையும் அதன் மூலம் இறைவனையும் காண்பார்கள்' என்று **தோரோ அவர்கள் (Thoreau)** கூறுகின்றார்.
- இதழ்கள் செய்திகளைத் தருவதுடன், மக்களுக்கு அறிவைப்புகட்டி அரசியல் விழிப்பை உண்டுபண்ணி, சமுதாயத்தைச் சீர்திருத்தி, மக்களின் உரிமையைப் பாதுகாத்து நாகரீகத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றன.
- 18ஆம் நூற்றாண்டில் மேனாட்டில் தேனீர் விடுதிகளில் மட்டும் இதழ் படிக்கும் பழக்கம் இருந்து வந்தது.
- 19ஆம் நூற்றாண்டில் தொடர் வண்டிகளில் படிக்கக் கூடிய அளவிற்கு அது வளர்ச்சியடைந்தது.
- காலையில் எழுந்தவுடன் செய்தி இதழைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் மக்களிடையே பெருகிவருகின்றது. தொடர்ந்து படிப்பவர்க்கு அதைக் காணாவிட்டால் 'விழிப் பெற்று இழந்தவனைப்' போன்ற ஏக்கம் ஏற்பட்டுவிடும். அந்த அளவிற்கு இதழ்கள் மக்களின் வாழ்வில் இன்றியமையாத இடம் பெற்றுள்ளன.
- செய்தி இதழ்கள் விரிந்து கிடக்கும் உலகத்தைச் சுருக்கிக் காட்டுகின்றன, தொலைவில் உள்ளவர்களை நெருங்கிவரச் செய்கின்றன.
- நேற்றுவரை ஓர் இடத்தைப் பற்றியோ ஒருவரின் பெயரைப் பற்றியோ பெரும்பாலோருக்குத் தெரியாது இருந்திருக்கலாம். ஆனால், செய்தி இதழில் அதுபற்றி அறிவிக்கப்பட்டதும், அந்த இடத்தைப் பற்றியும், அந்த நபரைப் பற்றியும் குறித்து காட்டுத் தீ போல் செய்தி பரவி உலகம் முழுவதும் அறிந்து விடுகின்றது.

## 10.1.1 இதழியல் கலை – அறிவியல்:

### இதழியல் கலை:

- மனித முயற்சியால் உருவாக்கப்பட்டு, அழகுணர்ச் உடையதாக அமைந்து மனதிற்குச் சிறிது நேரமாவது மகிழ்ச்சியைத் தந்து. மனிதனைக் கவலையிலிருந்து விடுவிப்பது எதுவோ, அதுவே கலையாகும்.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com






- ❖ இந்த விளக்கத்தின் படி இதழியலை நோக்கினால், அதனை கலை என்று எளிதில் சொல்லிவிடலாம். நன்கு எழுதப்பட்ட ஒரு செய்தி சுருக்கம், தலையங்கம், கட்டுரை, கவிதை, நகைச்சுவைத் துணுக்கு, சிறுகதை, வானொலி நிகழ்ச்சி, நாடகம் முதலியன இதழியல் படைப்புகள், மேற்குறித்த இலக்கணத்தோடு பொருந்தியனவாக இருப்பதைக் காணலாம்.
- ❖ இதழியல் கலைப் படைப்புகள் என்பதைத் தவிர கலை உணர்வும், கலைத் திறனும் உடையவர்கள இவற்றை உருவாக்க முடியும் என்பது உண்மையாகும். எனவே இதழியல் ஒரு கலையாகும்.

## 10.1.2 இதழியல் அறிவியியல்

- ❖ உலகியலைக் கூர்ந்து நோக்கி அறிவதும், மாற்றங்களுக்கும் நிலைகளுக்கும் உரிய பொது விதிகளை வகுப்பதும் அவ்விதிகளை மேலும் சோதித்துப் பார்ப்பதும் அறிவயலாகும்.
- ❖ மேலும், மனிதனையும் அவனுடைய சூழல்களையும், முறையாக ஆராய்ந்து, சில விதிகளை வகுத்துக்கொள்வதும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு உலகியல் நிகழ்வுகளை அளவிடுவதும் அறிவியலாகும்.
- ❖ மேற்கண்ட விளக்கக் படி இதழ் உருவாகும் நிலையைத் தொடக்கம் முதல் இறுதி வரை பல்வேறு நிலைகளாக அறிவயல் நோக்கில் முறைபடுத்தியுள்ளனர். செய்திகளைச் சேகரிப்பது, உண்மைத் தன்மையை உறுதி செய்வது, எழுதுவது, செப்பனிடுவது, அச்சிடுவது, வெளியிடுவது ஆகிய அனைத்தும் சமுதாயத்தை ஆய்வு செய்யும் முறையில் அமைவதால் இதழியலை அறிவியல் என்பது புலனாகின்றது.

## 10.1.3 இதழியலும் மக்களாட்சியும்:

- ❖ மக்களாட்சி (ஜனநாயகம்) சீரும் சிறப்புமாகச் செயல்பட இதழ்கள் உற்ற துணை புரிகின்றன.
- ❖ பத்திரிகைகள் செய்திகளை மட்டும் வெளியிடுவதில்லை. நாட்டின் நலனோடு தொடர்பான செய்திகளை வெளியிடும் பொழுது, அவற்றைப் பற்றித் தனித்தானியாகச் சிறப்புக் கட்டுரைகள் வெளியிட்டும், தலையங்கம் எழுதியும், தலைவர்களின் போட்டிகளைத் தக்க சமயத்தில் அளித்தும், மக்களுக்கு விளக்கம் தருகின்றன.
- ❖ மக்களின் ஐயப்பாடுகளை நீக்கி, வழிகாட்டும் நல்லாசிரியராக மக்களாட்சியில் இதழ்கள் செயல்படுகின்றன.
- ❖ எத்தகைய ஆட்சி அமைப்பாக இருந்தாலும் மக்களோடு தொடர்பு கொள்வதால், மக்களுக்கு கருத்துக்களையும் கொள்கைகளையும் கூறுவதும், அவர்கள் எண்ணப் போக்கினைப் புரிந்துகொள்வதும் இன்றியமையாத் தேவையாகின்றது. இதற்கு இதழியல் இன்றியமையா துணை செய்கின்றது.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- ❖ 1828 இல் 'அரசியல் நிர்ணய வரலாறு' **(**Constitutional History) பற்றி எழுதிய வரலாற்று ஆசிரியர் **மெக்காலே (Macaulay)** முதன் முதலில் இதழியலாளர்களை **'அரசின் நான்காம் தூண்'** என்று கூறினார்.
- ❖ அதன் பிறகு எட்மண்ட் பர்க் (Edmund Burke) என்பவர் செய்தியாளர்களை எல்லாவற்றையும் விட முக்கியமான நான்காது தூண் என்று குறிப்பிட்டார்.
- ❖ நமது நாட்டின் அமைப்பிலும் நாடாளுமன்றம் (Parliament)>, நிர்வாகத் துறை (Executive)), நீதித்துறை (Judiciary) ஆகிய முக்கிய அரசின் முக்கிய மூன்று துறைகளோடு, பத்திரிக்கைத் துறையை நான்காவது முக்கியப் பிரிவாகக் கருதப்படுகின்றது.
- ❖ உண்மையான மக்களாட்சி செயல்பட வேண்டுமானால், எல்லா மக்களும் ஆட்சியில் அறிவர்ந்த முறையில் பங்குபெற வேண்டும். அதற்குத் துணை செய்வதாக இதழ்கள் இருக்கின்றன.
- ❖ ஆர்.கே.சட்டர்ஜி மக்கள் தகவல் தொடர்பில் பத்திரிக்கைத் துறை மக்களுக்குத் தெரிவிப்பதையோ, கற்பிப்பதையோ மட்டும் செய்வதில்லை, பொதுப்பணிகளின் கண்காணிப்பாளராகவும் மக்களின் உரிமைகளின் பாதுகாவலராகவும் செயல்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.
- ❖ 'வாளைவிட பேனா முனை வலுவுடையது' என்பதை உலகெங்கும் இதழியளாளர்கள் உணர்த்தியுள்ளனர்.
- ❖ காந்தியடிகள் தனது சுயசரிதையில், செய்தித்தாளின் நோக்கங்களாக மூன்றினைக் குறிப்பிடுகின்றார்.

  1. மக்களின் உணர்வினை அறிந்து, அதனை வெளியிடுவது இருக்க வேண்டும்.

  2.மிகவும் வேண்டிய உணர்வுபூர்வமான எண்ணங்களை மக்களிடம் உருவாக்க வேண்டும்.

  3.பொது மக்களிடம் இருக்கும் குறைகளையும் துணிச்சலாக எடுத்துரைக்க வேண்டும்.

**இங்கிலாந்தின் பத்திரிக்கை மன்றம் (British Press Council)**

- ❖ அநீதியை வெளிக்காட்டுவது, தவற்றைத் திருத்துவது, ஆலோசனை வழங்குவது, மக்களோடு நட்பு கொள்வது, ஆதரவற்றவர்களுக்கு உதவுவது ஆகியவை செய்தித்தாளின் சேவைகள் என்று குறிப்பிட்டுள்ளது.
- ❖ வேறு வகைகளில் பெற முடியாதவர்களுக்குத் தொடர்ந்து உதவிகளை வழங்க வேண்டும். பொதுக் காரணங்களை எடுத்துக் கொண்டு தேவையானால் போராட்டங்களை நடத்தவும் வேண்டும்.

இதழ்களின் முக்கிய 4 பணிகள்

**1.அறிவித்தல் (To Inform)**

**2.அறிவுறுத்தல் (To Instruct)**

**3.மகிழ்வித்தல் (To Entertain)**

**4.வாணிபம் செய்தல் (to Merchandise)**

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- ❖ நேரு அவர்கள் 'தற்கால வாழ்க்கைய, குறிப்பாக மக்களாட்சியில், ஆற்றல்மிக்க உறுப்புகளில் ஒன்றாக பத்திரிக்கை இருக்கின்றது. பத்திரிகையிடம் எல்லையற்ற சக்தியும், பொறுப்புகளும் உள்ளன.' என்று கூறுயள்ளார்.

**டி.எஸ்.மேத்தா**

- ❖ பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதிலும், செப்பனிடுவதிலும், பிரதிபலிப்பதிலும் மக்களாட்சி நடைபெறும் நாட்டில், பத்திரிகைகள் மிகவும் முக்கியமானதாகச் செயல்படுகிறது.
- ❖ பத்திரிகை நமது சமுதாயத்தின் ஆதார நிறுவனமாகும். நாட்டில், அரசியல் சமுதாயத்தால் பொருளாதார வளர்ச்சியினைச் சிறப்பாக ஏற்படுத்த அது மிகவும் துணை செய்கிறது.
- ❖ பத்திரிகை, அரசு செயல்படுவதோடும் அது பின்பற்றும் கொள்கையோடும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றது. நமது பொது வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுபாட்டையும் அது தொடுகின்றது.
- ❖ 'தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டாமருதன்' என்ற பழமொழி ஆட்சியாளர்களுக்கும் பொருந்தும்.
- ❖ மூக்கணாங்கயிறு போடாத மாடு வண்டி இழுப்பதைப் போல்தான் வலுவான எதிர்க்கட்சி இல்லாத ஆட்சி அரசை நடத்துவது இருக்கும். இந்நிலையில் இதழ்கள், அரசின் பொது நலனுக்கு எதிரான போக்குகளை 'வெளிச்சம்' போட்டுக் காட்டி, கட்டுப்பாட்டுக்குள் செயல்பட அரசினைத் தூண்ட இயலும்.
- ❖ **காந்தியடிகள்** - மக்களின் கருத்தை வெளிக்காட்டும் செய்தித்தாட்கள் இல்லையென்றால், அரசு அதனை எப்படி அறிந்து கொள்;ள இயலும்? பொது மக்களின் கருத்துக்குப் பிரதிநிதிகளாக இருக்கும் செய்தித்தாட்களை அரசு கட்டுப்படுத்தக் கூடாது என்று கூறியுள்ளார்.
- ❖ நமது நாட்டில் சாதி மத மொழி வேறுபாடுகளும், கட்டமைக்கப்பட்ட ஏற்றத் தாழ்வுகளும், பிற்போக்கு மனப்பான்மையும், வளச்சிக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன.
- ❖ தன்னலத்தோடும் குறுகிய நோக்கங்களோடும் செயல்படும் சக்திகளை பொதுமக்களுக்கு இனங்காட்டி, அவற்றை புறக்கணித்து, நாட்டுப்பற்றோடு பொது மக்கள் செயல்பட தூண்டும் பொறுப்பு இதழ்களுக்கு உண்டு.
- ❖ பொது மக்கள் தொண்டினை (Public Service) இதழ்கள் ஆதாய நோக்குடன் தலையாய குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்.
- ❖ பொறுப்புள்ள இதழ்கள் மக்களரசின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும்.
- ❖ இதழ்கள் மக்கள் நாட்டின் ஆக்கத்திட்டங்களை அறிந்து, உணர்ந்து, பங்குபெற எல்லா வகையிலும் உதவ வேண்டும்.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



**வினாக்கள்**

1. **Diurnal** என்ற சொல் எம்மொழிச் சொல்?

(A) உருது (B) அரபு (C) இலத்தீன் (D)ஆங்கிலம்

2. இதழியல் அரசின் நான்காம் தூண் என்ற முதன் முதலில் கூறிய நூல்?

(A) British Press Council

(B) Constitutional History

(C) Chamber's 21st Century Dictionary

(D) Journal of the First Voyage of Vasco da Gama to India.

3. 'தற்கால வாழ்க்கைய, குறிப்பாக மக்களாட்சியில், ஆற்றல்மிக்க உறுப்புகளில் ஒன்றாக பத்திரிக்கை (Press) இருக்கின்றது. பத்திரிகையிடம் எல்லையற்ற சக்தியும், பொறுப்புகளும் உள்ளன.' என்று கூறியவர்

(A) காந்தியடிகள் (B) நேரு (C) ஆர்.கே.சட்டர்ஜி (D) எட்மண்ட் பார்க்

4. 'பத்திரிகைதான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகப்பெரிய காவலாளி' என்று கூறியவர்

(A) Frank Moraes (B) Mathew Arnold

(C) Harold R.W.Benjamin (D) Lord Gray.

5. 'அரசியல் நிர்ணய வரலாறு' (Constitutional History) எழுதப்பட்ட ஆண்டு

(A)1828 (B)1898 (C)1838 (D)1858

## 10.2. தமிழ் மொழி வளர்ச்சியில் இதழ்களின் பங்கு

- ❖ தமிழ் மொழி வளர்ச்சியில் முதன்மை பங்கு விகிப்பன இதழ்கள் ஆகும். இன்று அச்சு இதழ்களும் மின்னிதழ்களும் அதிக அளவில் வெளியிவருகின்றன.
- ❖ தொடக்க காலத்தில், தகவல்கள் பரிமாற்றத்தில் அச்சிடப்பட்ட இதழ்கள் கோலோச்சி கொண்டிருந்தன. இந்நிலையில் ஆங்கிலத்தில் Journal, Journarlist என்பது தமிழில் இதழியல் என்றும் இதழாளர் என்று அழைக்கப்பட்டது.
- ❖ இதழியல் மற்றும் இதழாளர்களைக் குறிக்க ஆங்கிலத்தில் Press என்னும் பொதுச்சொல்லால் அழைத்தனர். தமிழிழலும் பிரஸ் என்னும் ஒலிப்பெயர்த்தே அழைத்தனர்.
- ❖ இதனைத் தொடர்ந்து வானொலியின் வரவு மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இதிலும் தகவல்களும் செய்திகளும் பரிமாறப்பட்டாலும் வானொலியும் பிரஸ் என்றே அழைக்கப்பட்டது.
- ❖ 1990க்குப் பின்னர் அரசு தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளின் ஒளிபரப்புகள் தொடங்கின. இதில் பணியாற்றும் அனைவரும் பிரஸ் என்னும் பொதுச்சொல்லால் அழைக்க முடியாத சூழலில் என்று அழைக்கப்பட்டனர்.
- ❖ இதனைத் தொடர்ந்து, இதழியல், வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பவை ஆநனயை என்னும் பொதுச்சொல்லால் அழைக்கப்பட்டன. தமிழில் ஊடகம் என்று அழைக்கப்பட்டது.

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

### 10.2.1 அச்சு இதழ்கள்

- ❖ அச்சு இதழ்கள் என்பது தகவல் பரிமாற்றத்தில் செய்திகளை அறிவித்தல், தெரிவித்தலில் இன்றியமையாப் பங்கு வரிக்கின்றன.
- ❖ அச்சு இதழ்கள் நாளிதழ்கள், வார இதழ்கள், வாரம் இருமுறை இதழ்கள், மாத இதழ்கள், மாதம் இருமுறை இதழ்கள், காலாண்டு இதழ்கள், அரையாண்டு இதழ்கள், ஆண்டு இதழ்கள், சிற்றிதழ்கள், வளாக இதழ்கள், தனிச்சுற்று இதழ்கள் என வகைப்படுத்தலாம். இவையனைத்தும் அச்சு இதழ்கள் என்ற பிரிவில் அடங்கும்.
- ❖ பொது மக்களுக்கு தகவல்கள் வழங்கும் ஊடகங்களில் சிறப்பிடம் பெற்றது இதழ்கள் ஆகும்.
- ❖ இந்திய இதழ்களில் அச்சு கண்ட முதல் மொழி தமிழ் மொழியாகும்.
- ❖ 1586இல் 'அடியார் வரலாறு' என்னும் தமிழ் நூலே முதன் முதலில் அச்சிடப்பட்ட தமிழ் நூல் ஆகும்.
- ❖ 1812இல் தமிழில் வெளிவந்த மாசத் தினசரிதை என்னும் இதழே இந்திய மொழிகளில் வெளிவந்த முதல் இதழாகும். ஞானபிரகாசம் என்ற தமிழர் இந்த இதழை நடத்தினார் என இதழியல் வரலாற்று ஆசிரியர் அ.மா.சாமி குறிப்பிடுகிறார்.

### 10.2.2 நாளிதழ்களில் தமிழ் வளர்ச்சி

- ❖ தமிழில் மக்கள் பேச்சு வழக்கிலுள்ள சொற்களைச் செம்மையாக்கம் செய்து, தமிழ் படிக்கத் தெரிந்த எல்லோரும் செய்தியை வாசிக்கின்ற முறையில் வெளிவரும் இதழ் 'தினத்தந்தி'.
- ❖ மேலும் தினமலர், தினகரன், தினமணி, தி இந்து, தமிழோசை போன்ற இதழ்களும் முரசொலி, விடுதலை போன்ற நாளிதழ்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
- ❖ துறைதோறும் உருவாகும் புதிய வளர்ச்சி போக்குகளுக்கு ஏற்ப புதிய சொல்லாக்கங்கள், கலை அறிவியல் தமிழ் உருவாக்கங்கள் ஆகியவற்றைச் செய்தும் மொழிபெயர்த்தும் இவ்வகை நாளிதழ்கள் தமிழ்ப்பணி செய்து வருகின்றன.
- ❖ பல்கலைக் கழகங்கள், நூலகம், சட்டமன்றம், மாநிலம், கணினி, இணையம் சமூகம், மாணவர், வணிகர் முதலிய நல்ல தமிழ்ச் சொற்கள், இன்று நாளிதழ்களில் பரவலாக நாளிதழ்களில் பயன்படுத்தப்படுகின்றன.
- ❖ இதழ்களின் தலையாய பணி இதழ்களால் பேச்சு நடையும் ஓரளவு நெருங்கி வருவதேயாகும். இதழ்கள் மூலம் இவ்வேற்றுமைகள் குறைக்கப்படும் எனப் பத்திரிக்கைத் தமிழ் பற்றித் தங்கமணியன் குறிப்பிடுகிறார்.

TEACHER'S CARE ACADEMY

- தமிழ்ப் பணியாற்றி வரும் தமிழ் இதழ்களில் தினமணி நாளிதழ் தனியிடம் பெற்றுத் திகழ்கிறது.
- 1990இல் தமிழ்மணி என்று 8பக்க டேப்லாய்டு அளவில் தனி இணைப்பை வெளியிட்ட பெருமை தினமணிக்கு உண்டு. தற்போது ஞாயிற்றுக் கிழமைகளில் நடுப்பக்கத்தில் தமிழ்மணி வெளிவருகின்றது.
- இலக்கியம் குறித்த செய்திகள், புதிய சொல்லாக்கங்கள், இலக்கிய ஆராய்ச்சி குறித்த செய்தி, நூல் மதிப்புரை, விவாதங்கள் போன்றவை இடம் பெறுகின்றன. இந்தப்போக்கு தமிழின் எந்த இதழிலும் இல்லை என்று உறுதியகக் கூறலாம்.
- தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்கிய பெரும் பணியாற்றிய இதழாகத் தமிழோசை நாளிதழ் திகழ்கிறது.
- நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழில் புதிய கலைச்சொற்களைத் தமிழழோசை நாளிதழ் உருவாக்கி பொதுமக்களின் புழக்கத்தில் விட்டது.
- வேன்-மூடுந்து, ஆட்டோ-தானி, கார்-மகிழ்வுந்து, ஜாமீன்-பிணை, ஆஜர்-நேர்நிறுத்தல், லாரி-சரக்குந்து, விபத்து-நேர்ச்சி, வயது-அகவை போன்றவை தமிழோசை நாளிதழில் வெளிவந்த புதிய கலைச்சொற்களாகும்.

## 10.2.3 பருவ இதழ்களில் தமிழ் வளர்ச்சி

- வார இதழ்கள், மாத இதழ்கள், காலாண்டு இதழ்கள், அரையாண்டு இதழ்கள் ஆகிய பருவ இதழ்கள் ஆகும். இவை பொழுது போக்கை நோக்கமாகக் கொண்டவை.
- ஆராய்ச்சி, அறிவு வளர்ச்சிக்கு உதவுவன என்று இருவகைப்படுத்தலாம்.




- குமுதம், ஆனந்த விகடன், நக்கீரன், துக்ளக், ஜூனியர் விகடன் போன்றவை வெகுஜனப் பொழுதுபோக்கு இதழ்களாகும்.
- களஞ்சியம், செந்தமிழ்செல்வி, நற்றமிழ், தமிழ்தேவன் ஆகியவை தமிழின் வளர்ச்சிக்கு உதவுவனவாக அமைந்துள்ளன.
- இந்தியா டுடே, பொன்மணி, பொது அறிவு உலகம், ஜிகே டைம்ஸ் போன்றவை கலை, இலக்கியம், அரசியல், பொதுஅறிவு ஆகியவற்றை மையமாக வைத்து வெளிவரும் இதழ்களாகும்.







TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

- இவை மெத்த படித்தவர்கள் எதையும் எழுத முடியும் என்ற நிலையை மாற்றியுள்ளன.
- பல வகுப்பினர் தனி நடையைக் குறைத்துக் பல வட்டாரச் சொற்கள் விரவுவதைத் தடுத்துத் தமிழ் மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளும் பொதுநடை வளர வழி கொடுத்துள்ளது என இதழியல் வரலாற்றாசிரியர் **மா.சு சம்பந்தன்** குறிப்பிடுகிறார்.

### 10.2.4 சிற்றிதழ்களில் தமிழ் வளர்ச்சி



- நாளிதழ்கள், பருவ இதழ்கள் எல்லாம் அன்றாட நிகழ்வுகளை அறிவிப்பனவாக விளங்குகின்றன.
- சிற்றிதழ்கள் சீர்திருத்தம், மாற்றம், கலாச்சாரப் புரட்சியை உருவாக்கம் மாற்று கலாச்சார நோக்கடன் செய்திகளை வெளியிடுகின்றன.
- **'தமிழில் மணிக்கொடி'** (1935), முதலில் தோன்றிய சிற்றிதழாகும்.
- எழுத்து(1959), இலக்கிய வட்டம், ஞானரதம் (1970), கசடதபற (1970), காலச்சுவடு, கணையாழி, நிழல், உயிர்மை ஆகியவை குறிப்பிடத்தக்க சிற்றிதழ்கள் ஆகும்.




- மணிக்கொடி, எழுத்து, இலக்கிய வட்டம் போன்ற இதழ்கள் சிறுகதையை வளர்த்த சிற்றிதழ்கள் ஆகும்.
- கசடதபற கவிதையை வளர்த்த சிற்றிதழ் ஆகும்.
- காலச் சுவடு மற்றும் உயிர்மை போன்றவை முற்போக்கு சிற்றிதழ் ஆகும்.
- கணையாழி இலக்கியத்துறை சிற்றிதழ் ஆகும்.
- நிழல் திரைப்படச் சிற்றிதழ் ஆகும்.

**வினாக்கள்**

1.தமிழில் தோன்றிய முதல் சிற்றிதழ்

(A)மணிக்கொடி (B)எழுத்து (C)இலக்கியவட்டம் (D) கசடதபற

2.தமிழில் மக்கள் பேச்சு வழக்கிலுள்ள சொற்களைச் செம்மையாக்கம் செய்து, தமிழ் படிக்கத் தெரிந்த எல்லோரும் செய்தியை வாசிக்கின்ற முறையில் வெளிவரும் இதழ்

(A)திணமனி (B)தினமலர் (C)தினத்தந்தி (D)தினகரன்

3.முதன் முதலில் அச்சிடப்பட் தமிழ் நூல்

(A)தொல்கர்பியம் (B)இராமாயம் (C)அடியார்வரலாறு (D)திருக்குறள்

4.கவிதையை வளர்த்த இதழ் என்ற பெருமைக்குறிய இதழ்

(A)எழுத்து (B)கசடதபற (C)மணிக்கொடிஇலக்கிய (D)வட்டம்

5.இந்திய மொழிகளில் அச்சிடப்பட்ட முதல் மொழி

(A)இந்தி (B)மலையாளம (C) தமிழ் (D)தெலுங்கு

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

## 10.3 தமிழ் இதழ்களின் தோற்றம் வளர்ச்சி:

❖ இதழியல் வளர்ச்சிக்கு பெருந்துணை புரிந்தவை காகிதமும் அச்சுக்கலையுமாகும். இவை இல்லையென்றால் இதழியல் இந்த அளவிற்கு வளர்ந்திருக்க இயலாது.

### 10.3.1 உலகின் காகிதமும் அச்சுக்கலையும்



❖ கி.பி.105இல் மல்பெரி மரப்பட்டடையிலிருந்து சாய்லன் என்ற சீனக்காரர் முதன் முதலாக காகிதம் செய்வதைக் கண்டுபிடித்தார்.

❖ கி.பி.795இல் அரேபியர்கள் பாக்தாத்தில் காகிதம் செய்யும் ஆலை ஒன்றை நிறுவினர்.

❖ அச்சுக் கலையும் முதன் முதலில் சீனாவில் தான் தோன்றியது. முர எழுத்துக்களைச் செய்து, அவற்றில் மை தடவி தாளில் 'அழுத்தி' (Press) அச்சிட்டனர். அச்சகதிற்கு 'பிரஸ்' என்று பெயர் வந்ததற்கு இதுவே காரணமாகும்.

❖ கி.பி.1041இல் பிசெங் என்ற சீனக்காரர் களிமண்ணில் எழுத்துக்களைச் செய்து சுட்டு, தகடு சுத்தி கடினப்படுத்தி, அச்சிடும் முறையைக் கொண்டு வந்தார். அதன் பின் அச்சுக் கலையில் புரட்சி ஏற்பட்டது.

❖ கி.பி.1450இல் **ஜான் கூடர்பர்க்** என்ற ஜெர்மனியர் முதன்முதலில் அச்சுப் பொறியினைக் கண்டுபிடித்தார்.

### 10.3.2 உலகின் அச்சு இதழ்கள்

❖ ஜெர்மனியில் முதன் முதலில் அச்சுப்பொறி தோன்றியதால், முதன்முதலில் தொடர்ந்து வெளிவந்த இதழ் என்ற பெருமை ஜோஹான் காரோலஸ் என்பவர் 1609இல் வெளியிட்ட 'உறவு' என்ற இதழையே சாரும்.

❖ ஜெர்மனியைத் தொடர்ந்து ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து, பிரான்சு, டச்சு, ஹாலாந்து ஆகிய நாடுகளிலிருந்து அச்சிட்ட இதழ்கள் வெளிவ்நதன.

❖ 1621 முதல் இங்கிலாந்தில் செய்தித்தாட்களை வெளியிட்டனர். **'கோரான்டோ'** ஒரு தனித்தாள் செய்தி இதழாக வெளிவந்தது.

❖ 1660இல் வாரச் செய்தித் தாட்கள் நிலையான இடத்தைப் பெற்றன.

❖ 1665இல் வாரம் இருமுறை வரும் செய்தி இதழாக 'ஆகஸ்டுபோர்டு கெஜட்' வெளியானது. பின்னால் இது 'இலண்டன் கெஜட்' என்று பெயர் பெற்றது.

❖ 1702இல் முதன் முதலில் நாள்தோறும் வரும் செய்தித்தாளாக **'தி டெய்லி கோரண்ட்'** என்ற இதழை வெளியிட்டனர்.

❖ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் முதல் செய்தித்தாள் 1690இல் 'உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொதுவாக ஏற்படுபவை' என்ற பெயரில் வெளிவந்தது.

❖ அமெரிக்காவில் முதன்முதலில் **ஜான் கேம்ப்பெல்** என்ற அமெரிக்கர் 'பாஸ்டன் செய்திக் கடிதம்' என்ற பெயரில் பதிப்பித்தார்.

❖ 1783இல் முதல் அமெரிக்க நாளிதழ் வெளிவந்தது.

❖ 1783 இல் ருஷ்யாவில் இதழ்கள் வெளியிடத் தொடங்கினர்.

TEACHER'S CARE ACADEMY

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



TEACHER'S CARE ACADEMY

### 10.3.4. இந்திய இதழியல்

- இந்திய பத்திரிகை வரலாறு என்பது இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் இருப்பது போல ஒரு மொழி பத்திரிகை வரலாறு அல்ல. இது பல மொழி இதழ்களின் வரலாறு ஆகும்.
- இந்திய இதழ்களின் வளர்ச்சி பல்வேறு வகைகளில் இருந்தாலும், அவற்றை ஊடுருவி நிற்கும் ஓர் ஒருமைப்பாட்டையும் காண முடிகின்றது.
- இந்திய இதழியலுக்கு மூலங்களாக இருப்பவை அசோகர்களின் கல்வெட்டுகள் ஆகும். அசோகரை **'இந்திய இதழியலின் முன்னோடி** என்று கூறலாம். அவரது கல்வெட்டுகள் என்றும் அழியாத இதழ்களாகத் திகழ்கின்றன.
- இந்திய அரசர்கள் கல்வெட்டுகளின் மூலமும் பிரகடனங்களின் மூலமும் அலுவலர்களுக்கும் பொதுமக்களுக்கும் செய்திகளை அறிவித்தனர். அரசின் ஆணைகளைத் தாங்கிய கடிதங்கள் செய்தி இதழ்களுக்கு வழிகாட்டிகளாக அமைந்தன.
- முகமதிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் செய்தித் தொடர்புகளை முறைப்படுத்தினர். செய்தி எழுத்தாளர்கள் என்ற தனிப்பிரிவினர் ஏற்பட்டனர். இவர்கள் முதலில் அரசுக்காக செய்திகளை எழுதினர். பின்னர் அவற்றைப் படிகள் எடுத்து பலருக்கும் அனுப்பினர்.
- ஔரங்கசீப் செய்தி எழுத்தாளர்களுக்கு மிகவும் சுதந்திரம் கொடுத்திருந்தார். நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் சென்று, அங்கு நடக்கும் செய்திகளைச் சேகரித்து அனுப்புகின்றவர்களை **'வாகிய நாவிஸ்' (News Reporters)** என்று அழைத்தனர்.
- 'இந்தியப் பத்திரிகை ஒரு சார்ந்திருக்கும் பத்திரிகையாகத் தொடங்கப் பெற்றது, அது இப்பொழுது வளர்கின்ற சமுதாயத்தின் பத்திரிகையாக பல சவால்களுக்கு பதிலளிப்பதாக மாறியுள்ளது' என்று **எம்.சலபதிராவ்** இந்திய இதழ்களின் வரலாறு பற்றிக் குறிப்பிடுகின்றார்.

### 10.3.5 இந்தியாவில் அச்சுக்கலையும் இதழ்களும்

- நமது நாட்டில் தமிழில் கிறித்தவ வேத **(Bible)** நூலை வெளியிட முதல் அச்சகத்தை 1713இல் தரங்கம்பாடியில் அமைத்தனர். ஒன்பது மாதங்கள் செலவிட்டு 500 பக்க தமிழ் மொழி நூலை அச்சடித்தனர்.
- 1715இல் தரங்கம்பாடியை அடுத்த **'பொறையாறில்'** முதல் காகித உற்பத்தி ஆலையை நிறுவினர். ஆனால் அப்போது செய்தித்தாள் வெளியிடப்படவில்லை.
- 1780ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29ஆம் நாள் முதல் இந்திய செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் **'ஹிக்கியின் வங்காள கெஜட்'** அல்லது கல்கத்தா பொது விளம்பரத்தாள் என்ற பெயரில் வெளியிட்டார். தன்னை கிழக்கிந்திய நிறுவனத்தின் 'முதல் முன்னாள் அச்சகர்' என்று இதழில் அறிமுகப்படுத்திக் கொண்டார்.
- இவ்விதழ் 12'*8' என்ற அளவில் பக்கங்களைக் கொண்டதாக விளங்கிற்று.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- ❖ இந்திய இதழியலில் வரலாறு படைத்தவர் ஹிக்கி ஆவார். **'இந்திய இதழியலின் தந்தை'** என்று புகழப்படுகின்றார்.
- ❖ 1784இல் அரசின் ஆதரவோடு **'கல்கத்தா கெஜட்', 'வங்காள கெஜட்'** வெளிவந்தது.
- ❖ 1786இல் கல்கத்தா **குரோனிகிள்** என்ற இதழ் வெளிவந்தது.
- ❖ 1795-ல் கிலாபர்ட் வில்லியம்ஸ் என்பார் „வீக்லி மெட்ராஸ் கெஜட்" என்னும் இதழைத்தொடங்கினார். இவ்விதழ் **மெட்ராஸ் கூரியர்** என்னும் இதழுக்குப் போட்டியாக அமைந்திருந்தது.
- ❖ 1789-ல் **'பம்பே ஹரால்டு'** என்னு; ஆங்கில வார இதழ் பம்பாயில் வெளிவந்தது. இவ்விதழை பம்பாயின் முதல் செய்தித்தாள்.
- ❖ 1790-ல் லூக் ஆஸ்பர்னர் தொடங்கிய பாம்பே கூரியர் வெளிவந்தது. பின் 'பாம்பே டைம்ஸ்' என இவ்விதழ் பெயர் பெற்றது.
- ❖ 1790-ம் ஆண்டிற்குப் பிறகுதான் இதழியல் துறை இந்தியாவில் சிறப்புடன் வரத்தொடங்கியது.
- ❖ ஆசியாட்டிக் மிர்ரர் (1794), கல்கத்தா கூரியர், இன்டியன் அப்பல்லோ,
- ❖ பெங்கால் ஹாரகாரு (1795) டெலிகிராப் (1796), கல்கத்தா மார்னிங் போஸ்ட், ஓரியண்டல் ஸ்டார் (1798) ரிலேட்டர் (1799) ஆகிய இதழ்க் வெளிவந்தன.
- ❖ 1807-ல் கல்கத்தாவிற்கு அருகில் உள்ள செராம்பூரில் கிறித்தவர்கள் அச்சகம் நிறுவி கிறித்தவ சமயம் பரப்பும் இதழ்கள் வெளியிட்டனர்.

## 10.3.6 பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்தியரின் இதழியல்

- ❖ **கங்காதர் பட்டாசாரியா** என்னும் இந்தியரே இதழியல் துறையில் அடியெடுத்து வைத்த முதலாமவர் ஆவார். அவர் கி.பி. 1816இல் **பெங்கால் கெஜட்"** என்ற பெயரில் இதழொன்றைத்தொடங்கினார்.
- ❖ **'கார்டியன்'** என்ற ஞாயிறு இதழும் கல்கத்தா ஜெர்னல் என்ற செய்தித்தாளும் 1820-ல் வெளிவந்தன. இந்தக் காலக்கட்டத்தில் இந்தியன் கெஜட், பெங்கால் ஹரகாடு,ஆசியாட்டிக் மிர்ரர் போன்ற இதழ்களும் வெளிவந்தன.
- ❖ இந்திய மொழிகளிலும் இதழ்கள் வரத் தொடங்கின. **'திக்-தர்சன்'** (Dig-Darshan) என்ற வங்காள இதழ் இதே காலத்தில் வெளிவந்தது. இவ்விதழை நடத்தியவர்கள் கிறித்துவ குருக்கள் ஆகும்.
- ❖ 'சமாச்சார் தர்பான்' (Samachar Darpan) என்ற வங்காள வார இதழாக வெளிவந்தது. இவ்விதழ் தொடர்ந்து 1940 வரை தொடர்ந்து வெளியானது. இந்த சமயக் கருத்துக்களை வெளிக் கொணரும் வகையில் கிராசாராம் மோகன்ராயின் 'பிராமணிக்கன் மேகசின்' என்ற இதழ் தொங்கப் பெற்றது. இவ்விதழையடுத்து „பிராமின் சேவரதி" என்னும் இதழ் வங்காளத்திலும் ஆங்கிலத்திலும் வெளிவந்தது.
- ❖ 1821-ல் வெளிவந்த 'சம்பாத் கௌமதியும்' அக்காலத்தில் புகழ்பெற்ற வார இதழாக வெளிவந்தது. வங்காள மொழியைத் தொடர்நது பெர்சியன் மொழியில் 'மீரட் - அல் அஹ்பர்' என்ற வார இதழ் வெளிவந்தது. பெர்சியன் மொழியில் 'ஷாம்-கி-ஷான்-நியூமா' என்ற இதழும் வெளிவந்தது.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY

- ❖ இதே காலத்தில் பெங்கதத்தா அல்லது பெங்கால் ஹெரால்டு என்ற இதழ் ஆங்கிலம், பெர்சியன், வங்காளம், இந்தி ஆகிய மொழிகளில் வெளிவந்தது.
- ❖ இந்திய மொழிகளில் இதழ் வளர்ச்சிக்குச் சமயங்களுக்கிடையே நடந்த போராட்டங்கள் காரணமாக அமைந்தது எனலாம். **'இந்திய மொழி இதழ்களின் தந்தை'** என்ற பெருமைக்குரியவர் **இராசாராம் மோகன்ராய்** ஆவார்.
- ❖ இந்திய மொழியல் இதழ்கள் வெளிவருவற்கும், இதழ்களைக் கட்டுப்படுத்த எதிர்ப்புக் குரலும் தந்தவர் ராய் ஆவார்.
- ❖ 1830-ல் 16 இந்திய மொழிகளில் இதழகள் வெளிவந்தன.
- ❖ வங்காள மொழியில் மட்டும்33 நாளிதழ்களும், பருவ இதழ்களும் வெளிவந்தன.
- ❖ 1831-33 ஆண்டிற்குள் 19 செய்தித்தாள்கள் வெளிவந்தன.
- ❖ 1878-ல் லிட்டன் பிரபு கொண்டு வந்த **'தாய்மொழிப் பத்திரிக்கைச் சட்டம்'** இந்தியர்கள் நடத்திய இதழுக்கு வாய்ப்பூட்டச் சட்டமாகவே இருந்தது.
- ❖ 1882-ல் ரிப்பன் பிரபு இச்சட்டத்தை நீக்கினார்.

### 10.3.7 இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவின் இதழியல்

- 20-ம் நூற்றாண்டில் இதழியல் துறை மாபெரும் மறுமலர்ச்சி அடைந்தது. செய்தித்துறை நிறுவனமான இராய்டர் தொடர்பினால் இதழ்களுக்ச் சுவையான, சுடச்சுடச் செய்திகள் கிடைத்தன. மக்களிடையே செய்தித்தாள்களைப் படிக்கும் ஆர்வமும் ஏற்பட்டது.
- 1900-ம் ஆண்டு 'பெங்காலி இதழ்' இராய்டர் மூலமாகச் செய்திகளைப் பெறத் தொடங்கியது. இதற்காக இவ்விதழ் பெருந்தொகையினை இராய்டர் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டியிருந்தது.
- இதழ்கள் தங்களுக்கெனச் செய்தி நிறுவனம் ஒன்று, தேவையென உணரத்தொடங்கியது.
- இதன் விளைவாகத் தோன்றியது. அசோசியேட் பிரஸ் ஆப் இந்தியா க.கி. இராய், மற்றும் ஆறு இந்திய இதழ்கள் துணையினால் தொடங்கப் பெற்ற இச்செய்தி நிறுவனத்தால் இதழ்களுக்கு ஏற்பட்ட நிர்வாகச் செலவில் பெருஞ்சுமை குறைந்தது.
- இதழியல் துறையில் மாபெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. பல்வேறு புகழ்பெற்றநிறுவனங்களும் இதழியல் துறையில் ஈடுபட்டு வளர்ச்சிக்குத் துணை புரிந்தன.
- படித்தவர்கள் மட்டுமன்று சாதாரண பாமரர்களுக்கும் படிக்கும் வழக்கத்தை இவ் இதழ்கள் உருவாக்கின.
- இந்திய இதழ்கள் சுதந்திர இந்தியாவின் பாதுகாப்பு அரணாக விளங்குகின்றன. மக்கள் வாழ்க்கைத் தொடர்புச்செய்திகளும், அரசின் அறிக்கைகளும், சட்டமன்றச் செய்திகளும் திரைப்படங்களின் பங்கும், உலக முன்னேற்றம் குறித்தவைகளும் சுவையாகச் சிறப்பாக வெளிவந்து ஜனநாயகத்தின் பாதுகாவலனாக விளங்குகின்றன.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



## 10.3.8 தமிழில் இதழியல் வளர்ச்சி




- ❖ இதழியல் வளர்ச்சி அச்சுக்கலையைச் சார்ந்திருந்தது. அச்சகம் அமைந்த பிறகுதான் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின.
- ❖ இந்தியாவில் முதன் முதலில் நூற்களை அச்சிடவும், அச்சகத்தை அமைக்கவும் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் முயன்றனர்.
- ❖ இந்தியாவின் முதன் அச்சகம் 1556இல் கோவாவில் அமைக்கப் பெற்றது.
- ❖ தமிழகத்தில் அண்டிறிக் பாதிரியார் 1578இல் தூத்துக்குடிக்கும் திருச்செந்தூருக்கும் இடையிலுள்ள புன்னைக்காயலில் அச்சகத்தை அமைத்தனர்.
- ❖ 'பத்தரிகைகள் வாழ்வோடு இணைந்து, பெருவளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. பத்திரிகைகள் நாள்தோறும் வளர்ந்துவரும் அறிவியல் ஆக்கம் பெற்று, மலர்ந்து வரும் மக்களாட்சி முறையில் ஊக்கம் அடைந்து, மக்களை ஈர்க்கும் ஆற்றல் படைத்து விளங்குகிறது.' என்று சோமலெ கூறுகின்றாh.
- ❖ இந்திய மொழிகளிலே தமிழ் மொழியானது, ரோம வரிவடிவில் கி.பி. 1554இல் லிஸ்பன் நாகரில் 'கார்ட்டில்லா' என்னும் வெளியீட்டில்தான் அச்சில் பதிக்கப்பட்டது.
- ❖ தமிழ் வடிவில் 'தம்பிரான் வணக்கம்' என்னும் கிறித்தவ சமய வெளியீட்டின் மூலம் இந்தியாவிலே முதன்முதலில் 1578இல் அச்சிடப்பட்;டது.
- ❖ பின்னர் தமிழ் மொழியானது ஆங்கில இதழ்களில் விளம்பரங்களாகவும், அறிக்கைகளாகவும் அச்சாகியுள்ளது.
- ❖ கி.பி. 1802இல் 'சிலோன் கெஜட்' என்னும் இதழில் - தமிழ், சிங்களம், ஆங்கிலம் எனும் மும்மொழியில் அச்சிட்டு வெளியாகின.
- ❖ தமிழ் மொழியானது முதன்முதலில் 1830இல் 'தமிழ் மாகஸின்' (The Tamil Magazin) என்னும் பெயரில் முழுக்க முழுக்க தமிழில் செய்தி வடிவில் அச்சாகியுள்ளது.
- ❖ தொடக்க காலத்தல், தமிழ் இதழ்களின் பெயர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு வெளியாகின. கட்டுரை, கவிதை, கதைகளின் தலைப்பும் இவ்விதமாகவே அச்சாகின.
- ❖ முதன்முதலில் தமிழ் இதழானது – மாத இதழாகவே தோன்றியுள்ளது. அடுத்து வார இதழாகவும், வார இருமுறை, மும்முறை இதழாகவும் வெளியானது.
- ❖ கி.பி. 1812-ல் வெளிவந்த 'மாசத் தினச் சரிதை' என்பதே தமிழில் முதலில் வந்த இதழ் என அ.மா.சாமி குறிப்பிடுகிறார்.
- ❖ கி.பி.1831-ம் ஆண்டு சென்னை கிறித்துவ சமயப் பரப்புக் கழகத்தார் வெளியிட்ட **'தமிழ்ப்பத்திரிகா'** என்னும் இதழே **தமிழில் வெளிவந்த முதல் இதழ்** எனக் குறிப்பிடுகின்றனர்.

TEACHER'S CARE ACADEMY



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

For more details Contact

9566535080, 9360268118
7639967359

Online Class for
UG TRB
Started

# UG TRB (2022-2023)

All 10 Units

Website
www.tcaexamguide.com

Mobile App
tcaexamguide

Experienced professors
&
Any time any where access to class

Multiple time can be watched
&
Access from Mobile app and Website

Teachers care Academy is the foremost coaching Institution for various competitive examinations such as P.G.TRB, TET Papers I &II TNPSC including special Teachers Eligibility Test. The Academy was established on 5th April 2013 by learned energetic and multifaceted chairperson Mrs. RAVIMAGESHWARI in the holy temple town of Kanchipuram.

## Our Other Competitive Exam. Guides

- PG-TRB (Tamil, English, Mathematics, History, Physics, Chemistry, Commerce, Economics, Botany, Zoology)
- Polytechnic-TRB (English, Mathematics, Physics, Chemistry, CSE, ECE, Civil, EEE, Mech)
- Computer Instructor Grade-1
- Block Educational Officer
- Teachers Eligibility Test (TET Paper-1 & Paper-2) & UG-TRB
- TNEB – Assessor
- Tamil Nadu – Forest Guard
- TNPSC ( Group-1, Group-2, Group-3, Group-4)
- NEET

*Your Success is Our Goal....*

Teachers Care Academy
tcaexamguide@gmail.com
tcaexamguide
www.tcaexamguide.com

**Teachers Care Publication**
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

1st Edition

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com